# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்

G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | பரீதாபிஸு தைமீ, JANUARY 1913. | ஸஞ்சிகை 1. No. 1.



MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS

2568

2568. XX A. 24 5.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

Practical Life is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign. Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 &4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்த்ரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக, பலலோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும், 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்நிய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |

**வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபை நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# OURSELVES.
## நமது பத்ரிகை.

சென்ற மார்கழிமாஸத்து ஸஞ்சிகையோடு நமது பத்ரிகைக்கு நாலாவது வருஷம் முடிந்துவிட்டது. இந்த தைமாஸ சஞ்சிகை முதல் நமது பத்ரிகைக்கு 5-வது வயஸு தொடங்குகிறது. குழந்தை நாளுக்கு நாள் வ்ருத்தியாவதுபோல், பத்ரிகையும் இன்னம் 8-பக்கம்சேர்ந்து 56-பக்கமாக பெருத்திருக்கிறது. மேலும் பத்ரிகை ஆராய்ச்சி, ஸ்த்ரீகள் பகுதி, சிறுவர் பகுதி, கதை, அல்லது தேசபக்தர் முதலியவர்களின் ஜீவ்ய சரித்ரம், பஞ்சாங்கம் முதலிய புது அம்சங்கள்கூட சேர்ந்திருக்கின்றன. நாநா ஸங்கதி என்னும் பகுதியை 4-பக்கமாக்கி யிருக்கிறோம். இந்த மாறுபாடுகள் சந்தாதாரர்களுக்கு ரொம்ப த்ருப்தியைக் கொடுக்குமென்று நினைக்கிறோம்.

பத்ரிகை முன்போலவே, பட்டணங்களிலும், க்ராமத்திலும் வஸித்து விவஸாயமோ, வ்யாபாரமோ, கைத்தொழிலோ, வேறு எந்த வ்ருத்தியோ, வைத்துக்கொண்டு ஜீவனம் செய்பவர்களுக்கும், பாடசாலையிலுள்ள உபாத்யாயர்களுக்கும், மாணவர்களுக்கும் ரொம்பவும் பயன்படும் என்பது நாம் சொல்லவேண்டியதில்லை. மேலும் ஸ்த்ரீகள் பக்கம், பையன்கள் பக்கம், கதை இவைகூடச் சேர்த்திருப்பதால் சந்தாதாரர்களே யன்றி அவர்கள் வீட்டிலுள்ள ஸ்த்ரீகளும் சிறுவர் சிறுமியர்களும் இதை வாசித்துப் பயன் அடையலாம் என்பது எங்கள் அபிப்ராயம். அவர்களுடைய தேவைக்குத் தகுந்தபடிக்கும் பத்ரிகையில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

# SPECIAL ARTICLES.
## விசேஷ வ்யாஸங்கள்.

### THE CARDINAL POINTS.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAO, M.A., L.T.

### திசையறியும் விதம்.

குடியிருக்க மனைகளையும் ஆராதனை செய்ய தேவாலயங்களையும் நமது தேசத்தார் கட்டும்போது திசைகளை நன்றாய் அறிந்தே கட்டுவது வழக்கம். கோபுரவாயில்களை நான்கில் ஒரு திக்கை நேராக நோக்கும்படியாகக் கட்டுவார்கள். தெருக்களையும் கிழக்கு மேற்காகவாவது வடக்கு தெற்காகவாவது அமைப்பார்கள். க்ராமங்களிலும் பட்டணங்களிலும் பழையரஸ்தாக்களும் தெருக்களும் இவ்வாறே அமைந்திருக்கும். நூதனமாக இக்காலத்தில் கட்டப்படும் வீடுகளில் இவ்விதிகளை அனுஸரிப்பதில்லை. நமதுதேசத்து சில்ப சாஸ்த்ரிகள் திசைகளை ஸரியாக எவ்வாறு தீர்மானித்தார்களென்றும் எவ்வாறு அவற்றை,நாம் நிச்சயிக்கலாமென்றும் இப்போது கவனிப்போம்.

நாம் சிறுவர்களாக இருக்கும்போது, பாலபாடசாலைகளில் கற்றுக்கொண்ட ஸுலபமான வழி ஒன்று எல்லாருக்கும் ஞாபகத்திலிருக்கும். அது "ஸூர்யன் உதிக்கும் திக்கு கிழக்கு, அஸ்தமனமாகும் திசை மேற்கு" என்பதே. இவ்விதி சிறுவர்களுக்கானதே யல்லது, சாஸ்த்ரத்திற்கும் அனுபவத்திற்கும் கொஞ்சம் மாறாக இருக்கிறது. ஒரே இடத்தில் நின்று கொண்டு, தினம் தினம் ஸூர்யன் உதயமாகும் இடத்திலுள்ள பொருள்களை கவனித்தோமானல், ஸூர்யன் ஒரே இடத்தில் தோன்றுவதில்லை என்று எளிதில் விளங்கும். நாம் கிழக்கு என்று கொண்ட திசைக்கு வடக்கே

சில்காலமும், தென்புறமாகத் தள்ளி கொஞ்ச காலமும் ஸூர்யோதயமாகும். நாளுக்கு நாள் ஸூர்யன் கொஞ்சங்கொஞ்சமாய் இடம் மாறிப் புறப்படுவதை கவனித்தால் தெரிந்து கொள்ளலாம். ஸூர்யன் வடக்குமுகமாய்ச் செல்லும் ஆறுமாஸத்திற்கு உத்தராயணம் என்றும், தென் திசையை நோக்கிச் செல்லும் மற்ற ஆறுமாஸத்திற்கு தக்ஷிணாயணம் என்றும் சொல்லுகிறோம். இம்மாதிரி ஸூர்யன் வெவ்வேறு இடத்தில் உதித்து ஆகாயத்தில் செல்லும்போது ஒருதினம் போனவழியே மற்றொருநாள் போவதில்லை. அஸ்தமனமாகும் இடமும் இவ்வாறே வேறுபடுகிறது. ஒரு குச்சியை செங்குத்தாக நட்டு, அதன் நிழலை தினம் தினம் நடு மத்யானத்தில் கவனித்தால் அந்நிழலின் நீளம் வித்யாஸப்படுவதிலிருந்து ஸூர்யன் செல்லும் மார்க்கம் மாறிக் கொண்டே இருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம். இதனால் "ஸூர்யன் வீதிமாறுகிறான்" என்கிறோம். இம்மாதிரி மாறுகையில் வருஷம் இரண்டு தடவைதான் நமக்கு நேர் கிழக்கில் ஸூர்யன் உதயமாகி நேராக மேற்கில் அஸ்தமனமாகிறான். மேலும், இந்த "வீதிகள்" நீளத்தில் ஏற்றக்குறைச்சலாக இருப்பதால், அகஸென்னும் பகல் நாழிகையும் எப்போதும் ஸரியாயிராமல் வித்யாஸப்படும். ஸூர்யன் அதிக தெற்கே தள்ளியகாலமும், அகஸ் அதிகக் குறைவான தினமும் டிஸம்பர்மாதம் 21 தேதி என்று ஸூர்ய உதய அஸ்தமன காலப்பட்டியை கவனித்துத் தெரிந்து கொள்ளலாம்.

ஸூர்யன் உதிக்கும் திக்கு தினம்தினம் மாறுகிறதென்றால், கிழக்கு முதலான திசைகளும் சூரியனுடனே மாறுமோ? திக்கு மாறாதென்றே வைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் பாடசாலைகளில் கற்ற விதியும் அதிக தப்பிதமானதன்று. சிறுவர்கள் எளிதில் கற்றுக் கொள்ளும் விதம் அதுவே. ஸாதாரண நடவடிக்கைகளுக்கு அச்சட்டம் போதுமானதுதான். ஏனெனில் ஸூர்யன் வீதி வடக்குத் தெற்காகச் சாய்ந்தாலும் சாய்வது கொஞ்சமாகத்தான். கிழக்கு மேற்கு வீதிக்கு $23\frac{1}{2}$ டிக்ரிக்குமேல் சாய்ந்த வீதிகளில் ஸூர்யன் ஒருபோதும் போவதில்லை. (கிழக்குக்கும் வடக்குக்கும் இடையே உள்ள திசைகளை 90 ஸம தூரமுள்ள திக்குகளாகப் பங்கிட்டுக் கணக்கிட்டால், ஒவ்வொரு பாகமும் ஒரு டிக்ரி ப்ரமாணமுள்ளது.) ஆனால் வான சாஸ்த்ரிகளுக்கும், நிலங்களை அளந்து கணக்கிடும் ஸர்வேயர்களுக்கும், கப்பல்களை ஓட்டும் மாலுமிகளுக்கும், திசையைத் தப்பிதமன்னியில் நிச்சயிக்கவேண்டியது அவச்யம். திசை நிலையானது என்றால் ஸூர்யனை விட்டு மற்றெந்த விதத்தில் திசையைக் கண்டறிவது? இம்முறைகளை இப்போது கவனிப்போம்.

முதல்வழி.—ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்ரங்களை கவனித்தால், அவை மணிக்கு மணி இடம் மாறிக்கொண்டே இருக்கின்றன என்பது எளிதில் புலப்படும். ஸூர்ய சந்த்ரர்களைப் போலவே வான மீன்களும் உதயமாகி அஸ்தமனமாகின்றன. வடக்கு முகமாக அடிவானத்தில் காணப்படும் ப்ரகாசமான நக்ஷத்ரங்களை கவனித்தால், அவற்றில் ஒன்று மாத்திரம் தன் இடம் விட்டு மாறுவதாக தோன்றுவதில்லை. எந்த தினத்திலும், எந்த மணியிலும் அது ஒரே இடத்தில் காணப்படும்.

ஸப்தரிஷி என்னும் காற்றாடிபோன்ற வடிவமுள்ள நக்ஷத்ரக்கூட்டத்தை கண்டறியக் கூடியவர்கள் இந்நக்ஷத்ரத்தை எளிதில் கண்டு கொள்ளலாம். படத்தில் காட்டியபடி A. B. என்னும் இரண்டு நக்ஷத்ரங்களையும் சேர்த்து அத்திசையிலேயே வடக்காக நோக்கினால் அக்கோட்டில் காணப்படும் ப்ரகாசமான நக்ஷத்ரந்தான் நிலையாக நிற்பதாக நாம் கூறியது.

இதற்கு வடத்ருவம் என்றும், த்ருவ நக்ஷத்ரம் என்றும், த்ருவ சக்ரத்தின் மையம் என்றும் சொல்லுவார்கள். இந்நக்ஷத்ரம் அடிவானத்திலிருந்து வடதிக்கில் ஸுமார் 10 டிக்ரி உயரத்தில் தோன்றும். இது நமக்கு நேர் வடக்கில் இருக்கிறது. இந்த நக்ஷத்ரம் தோன்றும் திசையில் ஒரு நேர் கோடு இழுத்தால் அது வடக்குத் தெற்கு காட்டும் கோடாகும். இக்கோட்டில் நின்று த்ருவத்தைப் பார்க்கையில் வலது கைப் பக்கம் கிழக்கு இடது புறம் மேற்கு என்கிறோம்.

**இரண்டாவது வழி.**—ஒரு ஸன்ன காந்த




ஊசியை மெல்லிய பட்டு நூலால் மையத்தில் கட்டித் தொங்கவிட்டால், அது அசைவற்று நிற்கும்போது எப்போதும் ஒரே திக்கையே காட்டும். இவ்வூசியின் பக்கத்தில் இரும்பு ஸாமான்களையும், காந்த ஊசிகளையும் வைத்திருக்கக்கூடாது. இவ்வாறு காந்த ஊசி சலனமற்று நிற்கையில், அதன் திசையைக்காட்ட ஒரு கோடு இழுத்தால் அது நேர் வடக்கு தெற்காக இருக்கும். இந்த வழியால் இத்தென்னிந்தியா முழுவதிலும் திசை கண்டறியலாம். மற்ற தேசங்களில் இக்கோடுநேர் வடக்கு தெற்காக இல்லாமல் கொஞ்சம் தள்ளி நிற்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

**மூன்றாவது வழி.**—பகலில் ஸூர்ய நிழலைப் பார்த்து வடதிசையைக் கண்டறியலாம். மட்டமான ஒரு தரையில் வெயில் படும்படியான ஓர் இடத்தில் ஒரு குச்சியை நேர் செங்குத்தாக நட்டு, அதன் நிழலை கவனித்தால், அந்த நிழல் திசையிலும், நீளத்திலும் மணிக்கு மணி வித்யாஸப்பட்டுக்கொண்டிருக்கும். பதினொரு மணி ஸுமாரில் அதன் நீளத்தை அளந்துகொண்டு, குச்சியின் தரைமையம் நடுவாக வைத்துக்கொண்டு ஒரு வட்டம் வரையவேண்டும். அப்போது அதன் நிழலின் நுனி இந்த வட்டக் கோட்டைத்தொடும், கொஞ்ச நேரம் கழித்து அந்நிழல் மறுபடியும் அக்கோட்டைத் தொடும். இந்த மாதிரி தொடும் இரண்டு இடங்களையும் குறித்துக்கொண்டு, ஒரு நேர் கோட்டால் சேர்க்க, அக்கோடு நேர் கிழக்கு மேற்காக இருக்கும். இதிலிருந்து வடக்கு தெற்கு திசைகளைக் கண்டறியலாம்.

எம். ஸி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

## AN APPEAL TO AGRICULTURISTS

BY

"KANNAN."

## விவஸாயிகளுக்கு ஒரு வேண்டுகோள்.

இந்தப் பத்ரிகையிலாகட்டும் வேறு எந்தப் பத்ரிகையிலாகட்டும் சொல்லப்படும் விஷயங்களை ஜனங்கள் எவ்வளவு மட்டில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை கவனிக்க நமக்கு மிகவும் வியப்பைத் தருகிறது. பாடுகிற மட்டும் பாடு, போகும் போது கதவைச் சாத்திவிட்டுப்போ, என்று சொன்னதுபோல், பத்ரிகாசிரியர்கள் தமக்கு இஷ்டப்பட்டபடி யெல்லாம் எழுதட்டும், அதை யார் கவனிக்கப்போகிறார்கள், என்று ஜனங்கள் சும்மா இருந்து விடுகிறார்கள். பத்ரிகாசிரியர்களும் தங்கள் கடமையைச் செய்ய வேண்டி, ஊதும் சங்கை ஊதினால், பொழுது விடியும்போது விடியட்டும், என்று எண்ணினவர்கள்போல தாம் சொன்ன விஷயங்களை மறுபடியும் மறுபடியும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். இவர்கள் சங்கு ஊதியதற்குப் பொழுது எப்பொழுது விடியுமோ தெரியவில்லை.

### உரங்கள்.

உரங்களைப்பற்றிப் பேசுவோம். பத்ரிகைகளில், பசுந்தாளுரம், தொழுவத்து எரு, சாஸ்த்ரீய ரஸாயன உரம், என்றிவ்வாறு பலவிதமான உரங்களைப்பற்றி எத்தனையோ நூதன முறைகளை பத்ரிகையில் விவரித்து எழுதுகிறார்கள். என்ன கரடிக் கத்துக்கத்தி யென்ன? ஜனங்களில் எத்தனைபேர் தொழுவத்து எருவை ஸரியானபடி குழிகளிலோ பெட்டிகளிலோ போட்டுக் காப்பாற்றி வைக்கிறார்கள் ? அப்படிப்பட்டவர்கள் மிக ஸ்வல்பமே. இன்னம் நாட்டுப்புரத்து ஜனங்கள் சாணத்தை வெளியில் கொட்டி உரத்தின் ஸாரமெல்லாம் போய்விடும்படி விடுகிறார்கள் அல்லவா ? ஓ பத்ரிகாநேயர்களே ! பத்ரிகாசிரியர் தான் வேறு வேலையில்லாமல் தொழுவத் தெருவை இன்ன விதமாய் சேகரித்து வைக்கவேண்டும் என்று சொல்லுகிறாரே, அவர்கள் சொல்வதில் நம்பிக்கை யில்லாமலே இருங்கள் ; அவர்கள் சொல்வது உங்களுக்குக் கெடுதியுண்டாக்குமென்றே எண்ணுங்கள். ஆனால், வாஸ்தவத்தில் அது நன்மை பயக்குமா, தீமை பயக்குமா, என்பதை அறியும் பொருட்டு, நீங்கள் தயவு செய்து, சொன்னபடி சில காலம் செய்து பாருங்களேன்? நன்றாயிருந்தால் எப்பொழுதும் அனுஷ்டியுங்கள். இல்லாவிட்டால், ஓ பத்ரிகாசியரே, நீர் சொல்லியது ஸரியாயில்லை. நீர் சொன்னபடி செய்து பார்த்தும் நன்மை உண்டாகவில்லை, என்றெழுதிக் கேளுங்கள், அவர் அதற்குப்பதில் சொல்லக் காத்திருக்கிறார். உரங்களைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் இன்னஞ் சொல்லுகிறேன்.

### கோ-ஆபரேஷன்.

ஆனால் ஜனங்கள் எல்லாரும் புதிய முறைகளைத் திரஸ்காரம் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. கோ-ஆபரேஷனைப் பற்றிப் பேசுவோம். இது விஷயமாய் ஜனங்கள் ரொம்பவும் ஊக்கம் காட்டி வருகிறார்கள். இந்த புது முறையை அனுஷ்டானத்துக்குக்கொண்டுவந்துவிட்டார்கள். இது ஆரம்பித்து 8 வருஷமேயானாலும் தக்கபடி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொடக்கத்தில் 25 கோவாபரெடிவ் ஸங்கங்களும், அந்த ஸங்கங்களில் 2,733 மெம்பர்களும் இருந்தார்கள். 1912-ம் வருஷம் ஜூன்மாஸக் கடைசியில் 972 ஸங்கங்களும் 66 ஆயிரத்துச் சொச்சம் மெம்பர்களும் இருந்தார்கள். ந்யாயமாய் பொதுஜன ப்ரமுகர்களும், பத்ரிகாசிரியர்களும், கவர்ன்மெண்டாரும், ஜனங்கள் கோவாபரேஷனை ஆவலுடன் கைப்பற்றினதைப் பற்றி ஸந்தோஷப்படவேண்டியதே. எனக்கு

மாத்திரம் ஸந்தோஷம் வரவில்லை. ஏன் தெரியுமோ? நீங்கள் இந்தக் கோவாபரேஷனை ஏன் கைக்கொண்டீர்கள்? க்ராம ஸாவ்காரிடத்தும், சந்து வட்டிக்காரனிடத்தும், நாட்டுக்கோட்டை செட்டிகளிடத்தும், ஊர்பட்ட வட்டியைக்கொடுத்து இதுகாறும் கடன் வாங்கின நீங்கள், இனிமேல் அதிக வட்டி தர வேண்டாம், ஸௌகர்யம்போல பணத்தைத் திருப்பிக் கொடுங்கள், என்று ஸர்க்கார் சொல்லவே, ஆகா என்று ஸம்மதித்துவிட்டீர்கள். இன்னம் பணம் கடன் வாங்கினபடிதானே இருக்கிறீர்கள்? கோவாபரேஷன் ஏற்பட்டது, கடன் வாங்குவதைக் குறைப்பதற்காக. நீங்கள் அதிகப்படுத்துகிறீர்கள். இந்தக் கடன் வாங்குவது, கடன் கொடுப்பது, என்பவைகளைத் தவிர, கோவாபரேஷனில் வேறு ஏதாவது நன்மையடைந்திருக்கிறீர்களோ! இல்லை. நல்ல உயர்ந்த விதைகளை எல்லோரும் சேர்ந்து மலிவாய் வரவழைத்து பங்கு போட்டுக்கொண்டு நிலத்தின் மாஸூலை அபிவ்ருத்தி செய்கிறீர்களோ? இல்லை. ச்லாக்யமான உரங்களை வெளியூர்களிலிருந்து தருவித்து பங்கு போட்டுக்கொண்டால் உங்களுக்கு விலை குறையுமே, அப்படிச் செய்கிறீர்களோ, இல்லை. விலையுயர்ந்தும் நூதனமாயுமிருக்கிற விவஸாயக்கருவிகளை சேர்ந்துவாங்கி உபயோகிக்கிறீர்களோ? அதுவும் இல்லை. உங்கள் ஸங்கத்தில் பொதுச்செலவில் விவஸாய ஸம்பந்தமான புஸ்தகங்களையும், பத்ரிகைகளையும் வரவழைத்து உங்கள் அறிவை ரொம்பவும் வ்ருத்திசெய்து வருகிறீர்களோ? இதுவும் பல இடங்களில் இல்லை. உங்கள் விளைபொருள்களை ஒன்று சேர்த்து (ஒவ்வொருவருக்கும் தனிக்கணக்கு ஏற்படுத்திக்கொண்டு) தக்க லாபம் வரும்படியான இடங்களிலும் காலங்களிலும் விற்கிறீர்களோ? பெரும்பான்மையாய் இல்லை தான். உங்கள் கால்நடைகளின் அபிவ்ருத்தியை உத்தேசித்து ஏதேனும் ஏற்பாடு செய்கிறீர்களோ? இல்லை. இவைகளைத்தவிர வேறு ஏதேனும் அபிவ்ருத்திக்கேற்ற ஸாதனங்களைக் கையாடுகிறீர்களோ? இல்லை. அப்படிப் பட்டவைகள் மேல்நாடுகளில் செய்யப்பட்டு வருகின்றன. அவ்விதம் ஒன்றும் செய்யாமல், நீங்கள் கடன் வாங்குவதிலும் கொடுப்பதிலுமே கண்ணும் கருத்துமாயிருக்க, கோவாபரேஷனில் ஸரியான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்று எப்படிச்சொல்லலாம்?. நான் இவைகளையெல்லாம் அறிந்தபின் எப்படி ஸந்தோஷமடையலாம்.?

'கண்ணன்'

---

## THE ECONOMIC POSITION OF INDIA

BY

LALA HARI KISHEN LAL.

## இந்தியாவின் பொருளாதார நிலைமை.

லாலா ஹரி க்ருஷ்ணலால் பங்கிப்பூர் கைத்தொழில் கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டாக இருந்து செய்த ப்ரஸங்கத்தில் இந்தியாவின் பொருளாதார நிலைமையைப்பற்றிப் பேசியதை இங்கே சுருக்கி ப்ரசுரிக்கிறோம்.

இந்தியாவின் பொருளாதார நிலைமை ரொம்பவும் தாழ்ந்த ஸ்திதியிலிருக்கிறதென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். ப்ரிட்டிஷ் தேசத்திலிருந்து இந்தியாவைப் பார்க்கவந்த ஒருவர் இந்தியாவின் பொருளாதார நிலைமையைப்பற்றித் தாம் கொண்டிருக்கும் அபிப்ராயத்தை பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"அநேக ஜனங்கள் ஸௌக்யம் கொஞ்சமும் போதாமல் ரொம்பவும் கேவலமான நிலைமையில் இருக்கிறார்கள். இன்னம் பட்டினி கிடக்கும் நிலைமையில் மாத்திரம் இல்லையென்று சொல்லலாம். தேச முழுவதும் வீடுகளே இல்லாததுபோல் தோன்றுகிறது. தரித்ரமும் துக்கமும் குடி கொண்டதுபோலிருக்கிறது.

க்ராமங்களெல்லாம், குளத்தைச் சுற்றி வெறுங் கட்டாந் தரையில் உள்ள மண் குடிசைகளாக இருக்கின்றன."

இன்னொருவர் சொல்லுகிறார்:—"இந்தியாவிலுள்ள ஜனங்களின் நிலைமை, இங்கிலீஷ்காரருக்கு, ரொம்பவும் ஸாமான்யமாயும், பூர்வீக ஜனங்களுடைய நாகரீகம் போலவும், தற்கால நாகரீகத்திற்கு அவச்யமானவை என்று நாம் எண்ணும் ஒரு ஸௌகரியமும் ஸுகமுமில்லாததென்றும், தோன்றும்". இந்த விஷயங்களை நன்றாய் ஆராய்ந்து கவனித்துப் பார்ப்போம். இந்தியாவின் ஜனத்தொகை ஸ்வதேச ஸமஸ்தானங்கள் உள்பட $31\frac{1}{2}$ கோடியாகும். இதில் முக்கால்பங்கு ஜனங்கள் விவஸாயத்தால் ஜீவிக்கிறார்கள். ஸ்வதேச ராஜ்யங்களிலிருந்து கணக்குகள் பூர்த்தியாய் வராததனால் இந்தியாவில் ஸாகுபடியாகும் நிலத்தின் விஸ்தீரணம் இவ்வளவு என்று திட்டமாய்த் தெரியவில்லை. ஆனாலும், மொத்த ஜனத்தொகையில் ஒவ்வொருவருக்கும், ஒரு ஏக்கராவுக்குக் குறைந்த நிலமே இருக்கிறது என்றும், விவஸாயத்தால் மட்டும் ஜீவிக்கும் ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் $1\frac{1}{4}$ ஏக்கராவுக்குமேல் இல்லை என்றும் தாராளமாய்ச் சொல்லலாம். இப்படிப் பயிரிடப்படும் நிலத்தில் ஒரு பாகத்து விளைவுபொருள் அன்ய தேசங்களுக்குப்போய் விடுவதால் அந்த பாகத்தைக் கழித்து விட்டு பாக்கியிருக்கும் நிலத்தைக் கணக்குப்போட்டால், ஜனத்தொகையில் ஒவ்வொருவருக்கும் $\frac{2}{3}$ ஏக்கர்தான் கிடைக்கிறதென்று தெரியவரும். இப்படித் தலைக்கு $\frac{2}{3}$ ஏக்கரா நிலத்தைக் கொண்டுதான் இந்தியர்கள் உண்டும் உடுத்தும் ஜீவிக்க வேண்டியதாயிருக்கிறது. உலகத்திலுள்ள வேறு எந்த தேசத்திலும் இந்த மாதிரி நிலத்தை நம்பி இருப்பதில்லை என்னலாம். இன்னம், குடியானவனுடைய ஸராஸரி வரும்படி ரொம்பக் குறைவு என்னலாம். ஒரு ஏக்கரா நிலத்தில் எல்லாச் செலவும் போகக் கிடைக்கும் வரும்படி ஒருவருடைய ஜீவனத்துக்குப் போதாதென்று நமக்குத் தோன்றுகிறது. இரண்டு பெரிய நபர்களும், மூன்று குழந்தைகளுமுள்ள ஒரு குடும்பத்துக்கு 5 ஏக்கர் நிலம் இருக்கிறதென்று வைத்துக் கொண்டாலும், அந்த நிலத்தின் வரும்படி போதாதென்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இந்தியர்களுடைய அபிப்ராயப்படிக்கும், அவர்கள் மிகவும் செட்டாய்ச் செலவு செய்வதை உத்தேசித்தும், நல்ல பாசனமுள்ள ஐந்தேக்கர் நிலம் அப்படிப்பட்ட ஒரு குடும்பத்துக்குப் போதும் என்று சொல்லலாம். ஆனாலும், எல்லா நிலமும் நல்ல நில மில்லையே. ஒவ்வொரு குடியானவனுக்கும் ஐந்து ஏக்கர் நில மிருப்பதில்லையே. சில விவஸாயிகளுக்கு 5 ஏக்கருக்கு ரொம்பவும் அதிகப்பட்ட நிலமும், ஆகையால் சிலருக்கு 5 ஏக்கராவுக்குக் குறைந்த நிலமும் இருக்கின்றன. நிலமும் 5 ஏக்கராவுக்குக் குறைந்திருந்து, நிலவளப்பமும் மட்டாயிருந்தால் அந்த நிலத்தையுடைய விவஸாயிருக்கு ரொம்பவும் பணத்தட்டு ஏற்பட்டு அவன் தன் ஜீவனத்தை ஸரிவர நடத்தக் கஷ்டப்படுவான். அப்படிப்பட்டவனும் அவன் குடும்பமும் இந்தியர்களுடைய அபிப்ராயப்படிக்கும் தரித்ரர்களே.

இந்த விவஸாயிகளுக்கு அடுத்த படியாக பூஸொத்தில்லாத ஜனங்கள் ரொம்பப்பேர் இருக்கிறார்கள். அவர்கள் பணக்காரர்களான விவஸாயிகளிடத்தில் வேலைசெய்து பூமியிலிருந்தே தங்களுடைய ஜீவனத்துக்கு வேண்டியவைகளை யடைகிறார்கள். இன்னம் சில க்ராமவாஸிகள் நிலத்தில் நேராக பாடுபடாவிட்டாலும், வேறு விதமாய் நிலத்திலிருந்தே ஜீவனம் அடைகிறார்கள். க்ராமத்திலுள்ள கொல்லர், தச்சர், (இவர்கள் கலப்பை முதலிய விவஸாயக் கருவிகள் செய்பவர்கள்) வண்

ஞன், சக்கிலியன், அம்பட்டன், ஆகிய இவர்கள் எல்லாரும், விவஸாயினிடமிருந்து, ஸ்வதந்திரமாக அறுவடை காலங்களில் ஒரு குறிப்பிட்ட அளவு தான்யமும் மற்ற காலங்களில் வேறு வரும்படியும் பெறுகிறார்கள். இந்த மாதிரியான இந்திய க்ராம வாழ்க்கை ரொம்பவும் உயர்ந்த தென்றாவது கஷ்டங்களில்லாதது என்றாவது சொல்வதற்கில்லை." என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்திய க்ராம வாழ்க்கை இவ்வித நிலைமையில் இருக்கிறது. இந்தியர்களில் பத்தில் 9 பேர் இவ்விதமாகவே காலங் கழிக்கிறார்கள். பாக்கி ஜனங்கள் 5000-குடி ஜனத்துக்கு மேற்பட்ட பட்டணங்களில் வஸிக்கிறார்கள். இந்தியாவில் பெரிய பட்டணங்கள் இருக்கின்றன வென்று சொல்லுகிறார்கள். அவைகளை யெல்லாம் ஒருவருடைய கைவிரலிலே எண்ணிவிடலாம். இரண்டு லக்ஷத்து ஜனத்தொகைக்கு மேற்பட்ட ஜனங்களுடைய, நகரங்கள் இந்தியாவில் 10-க்கு மேல் இல்லை. இந்தப் பட்டணங்களில் நான்கு துறைமுகப் பட்டணங்கள். இவைகள், ப்ரிடிஷாருடைய பணத்தாலும், வ்யாபாரத்தாலும், வ்ருத்தியானவை. டெல்லி, லாகூர், லக்நௌ, அமதபாத், ஆகிய நான்கு பட்டணங்கள், பழய ராஜ்யங்களின் ராஜதானிகள். ஒன்று (காசி) ஹிந்துக்களின் பெரிய க்ஷேத்ரம். இங்கிலாந்திலோ நூற்றுக்கு 90-பேர் பதினாயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள பட்டணங்களில் வஸிக்கிறார்கள். நூற்றுக்கு 25-பேர் $2\frac{1}{2}$ லக்ஷத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள பட்டணங்களில் வஸிக்கிறார்கள்.

இந்தியப்பட்டணங்களில் உள்ள பாக்கியான நூற்றில் 10-பேர்களைப்பற்றி விவஸாயிகளைப் போல் அவ்வளவு ஸுலபமாய்ச் சொல்லிவிட முடியாது. அந்த நூற்றில் பத்துபேர், வ்யாபாரம், ராஜாங்கத்தில் உத்யோகம், தேசக் காப்பு, வீட்டுவேலை, ஸுகாதார வேலை, ஸுக ஜீவனம், வீடு முதலியவை கட்டுதல், வண்டி ஓட்டுதல், படித்தவர்களுக்கு ஏற்பட்ட வேலை, முதலிய பலவேலைகளைச் செய்து ஜீவிக்கிறார்கள். இவர்களுடைய ஸ்திதி தாழ்ந்த தல்லவென்று இந்தியர்கள் நினைக்கலாம். ஆனால் இவர்களுடைய நிலைமைக்கும், ஐரோப்பா, அமெரிக்காவில் நாகரீகம் பெற்ற தேசங்களில் இவர்களைப்போல் அலுவல்செய்து ஜீவிப்பவர்களுடைய நிலைமைக்கும் தாரதம்யம் இல்லை. இவர்களுக்கு வரக்கூடிய வரும்படி இன்னதென்று வருமான வரிக்கணக்கினால் நமக்குத் தெரியும்.

இந்தக் கணக்குகளைப் பார்த்தால் இவர்களுடைய நிலைமையைப்பற்றி நாம் ஒன்றும் ச்லாகிப்பதற்கில்லை என்று தெரிகிறது. சில கணக்குகளை எடுத்துக் காட்டுவோம். அவைகளால் இப்பொழுதுள்ள ஸ்திதி இன்னதென்று ஸரியாய்த் தெரியும்.

ஸர்க்கார், இன்கம்டாக்ஸ் வரி வாங்குவதில் ரொம்ப ஊக்கம் காட்டியும், 1909-10-ம் வருஷத்தில் வருமானிவரி கொடுத்தவர்கள் 2,75,623 பேர்தான். அந்த வரியில் பெரும் பாகம் கல்கத்தாவிலும், பம்பாயிலும் வஸூல் செய்யப்பட்டது.

ஸுமார் 25 வருஷமாய் போஸ்டாபீஸ் ஸேவிங்கஸ் பாங்கிகள் இருந்து வருகின்றன. என்றாலும், 1910-11-ம் வருஷத்தில் ஸேவிங்கஸ் பாங்கிகளில் போடப்பட்ட தொகை 16,91,88,225 ரூபாயே. டிபாஸட் போட்டவர்களின் தொகை 14,30,451.

| | | |
|---|---|---|
| 1. உத்யோகஸ்தர்கள் | ... | 4,59,771 |
| 2. குடும்பிகள் | ... | 2,41,104 |
| 3. வ்யாபாரிகள் | ... | 59,735 |
| 4. விவஸாயிகள் | ... | 32,395 |
| 5. கைத்தொழில் செய்பவர்கள் | | 54,061 |
| 6. மற்றவர்கள் | ... | 5,83,385 |

ஸேவிங்ஸ் பாங்கிக்குப் பணம் வாங்கின போஸ்டாபீஸ்கள் 8929.

சென்ற 5 வருஷங்ளாக ஸாதாரண பாங்கிகளில் பணம் போடுவதை வ்ருத்தி செய்ய ரொம்ப ப்ரயத்னப்பட்டும் இந்தியாமுழுவதிலும், 11 கோடி ரூபாய்க்குக் குறைச்சலாகவே பாங்கிகளில் டிபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

யந்த்ர சக்தியால் நடத்தப்பட்ட பாக்டரிகள் ப்ரிட்டிஷ் இந்தியாமுழுவதிலும், 1910-ம் வருஷத்தில் 2146 தான் இருந்தன. இவைகள் கம்பெனியாராலாவது, மற்ற ஜனங்களாலாவது நடத்தப்பட்டவை. அவைகளைப்பற்றிய கணக்கு பின்வருமாறு.

| விவரம் | பாக்டரிகளின் தொகை. | வேலையாட்களின்தொகை |
|---|---|---|
| பஞ்சு ப்ரெஸ்கள் | 1057 | 99,077 |
| பருத்தி மில்லுகள் | 215 | 2,16,883 |
| சணல் ப்ரெஸ்கள் | 103 | 28,327 |
| சணல் மில்லுகள் | 59 | 2,04,053 |
| அரிசி மில்லுகள் | 224 | 20,368 |
| மா அரைக்கும் மில்லுகள் | 32 | 3,111 |
| சர்க்கரை பாக்டரிகள் | 21 | 5,424 |
| மரமறுக்கும் மில்லுகள் | 96 | 10,583 |
| இரும்பு பித்தளை பட்டரைகள் | 58 | 24,368 |
| அவுரி பாக்டரிகள் | ... | 17,337 |
| ஓடுசெய்யும் பாக்டரிகள் | 14 | 5,293 |
| அச்சாபீஸ்கள் | 18 | 13,971 |
| கப்பல்கட்டுமிடங்கள் | 9 | 10,392 |
| ரெயில்வே வொர்க்ஷாப்புகள் | 47 | 72,000 |
| பெட்ரோலியம் பாக்டரிகள் | 6 | 8,735 |

இந்தியாவில் ரெயில்வேக்களின் நீளம் 1911-ம் வருஷத்தில் 33,000 மைல். இந்த ரெயில்வேக்களில் 7,699 ஐரோப்பியர்களும், 9,554 ஆங்க்லோ இந்தியர்களும், 5,22,741 இந்தியர்களும் வேலைபார்த்தார்கள். இந்தக் கணக்கில் ரெயில்வே வொர்க்ஷாப்பில் வேலைசெய்த 72,000 ஜனங்களும் சேர்ந்திருக்கிறார்களென்று தோன்றுகிறது.

மேலே சொன்னவைகளிலிருந்து என்ன தெரிகிறது? இந்தியர்களின் காலக்ஷேபத்துக்கு ஆதாரமாயுள்ளவைகளில் ஒன்றாகிய விவஸாயத்தை வ்ருத்திசெய்தும் நிலத்தில் அதிகமாஸூலில் உண்டாகும்படி செய்தும், மற்ற ஆதாரமாகிய கைத்தொழிலை விவஸாயத்தில் வேலை செய்பவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் கைப்பற்றும்படி செய்தும் வந்தாலொழிய ஜனங்கள் அதிகப் பணம் சேர்க்க முடியும் என்று எதிர்பார்க்கமுடியாது. விவஸாயம், கைத்தொழில் இவைகளை சீர்திருத்துவது போலவே காடுகள், சுரங்கம், மீன்பிடித்தல், வ்யாபாரம், ஆகிய இவைகளையும் கவனித்து சீர்திருத்தவேண்டும். விஷயங்களை எடுத்துச் சொல்லி மனப்பூர்வமான அபிப்ராயத்தை சொன்னால் மாத்திரம் ஒரு காரியமும் ஆகாது. பொருள்களை எப்படி ஸௌகர்யமாய் உண்டாக்கலாம், உண்டாக்கின பொருள்களை வெவ்வேறு ஊர்களுக்கு எப்படிக்கொண்டு போகலாம், பொருள்கள் நஷ்டமாய்ப் போவதை எப்படித் தடுக்கலாம், வீண் ச்ரமத்தை எப்படி நீக்கலாம், செல்வமானது வேறு நாடுகளுக்குச் செல்வத்தை எப்படித் தடுக்கலாம், என்ற பல விஷயங்களை ஆராய்ந்து அவைகளுக்குள்ள காரணங்களைத் தெரிந்து சொல்ல வேண்டியது அவசியமாயிருக்கிறது. நமது தேசத்தின் பொருளாதார நிலைமையை வ்ருத்தி செய்வதற்கு, நமது தேசத்தின் ராஜாங்கம், ஜனஸமூகம், மதம், வித்யை, ஸன்மார்க்கம், இவைகள் என்ன நிலைமையில் இருக்கின்றன என்பதை நன்றாயறிந்து கொள்ளவேண்டியது அவச்யமாயிருக்கிறது.

விவஸாயம், கைத்தொழில், மூலதனம், வேலையாள், பாங்கி வ்யாபாரம், இன்ஷ்யூரென்ஸ், தொழில் கல்வி, வ்யாபாரம் முதலியவைகளைப்பற்றிப் பேசிவிட்டுப் பின்பு தமது ப்ரஸங்கத்தின் முடிவில் தமது அபிப்ராயங்

களை லாலா ஹரிக்ருஷ்ண லால் வெளியிட்டிருக்கிறார். அவை பின்வருமாறு:—

(1) ஒரு தலைமுறைவரையிலாவது, கல்வி கற்ற சிறுவர்கள் உத்யோகங்களில் சேராமல் ஏதாவதொரு வ்யாபாரத்தைக் கைப்பற்ற வேண்டும். அவர்களுடைய பெற்றோர்களும், வேறு எந்த உத்யோகத்தையும் நாடாமல் கைத்தொழிலையும், வ்யாபாரத்தையும் பின்பற்றும்படி அவர்களுக்குத் தக்க யோக்யதையுண்டாக்க முயலவேண்டும். சிறுவர்கள் இப்படி தொழிலையும் வ்யாபாரத்தையும் நடத்துவதாக எண்ணினால், அவர்களுடைய கல்யாணத்தை வேதத்தில் சொல்லியிருக்கும் 25 வருஷம் என்னும் வயஸு எல்லையையும் தாண்டி அதற்கு மேலும் தள்ளிவைக்கவேண்டும். அப்படிக் கல்யாணத்தைத் தள்ளிவைக்க முடியாவிட்டால், கல்யாணமாகும் பெண்ணானவள் தன் கணவனுடன் எந்த தேசத்துக்கும் போக ஸம்மதப்படவேண்டும். அவள் தன் கணவன் நடத்தும் அல்லது அவன் சேர்ந்திருக்கும் தொழிலில் அவன் போட்டிருக்கும் முதலே அவளுடைய மேலான ஆபரணமென்று நினைக்கவேண்டும்.

(2) ஸர்க்காரும், பணக்காரர்களும், ஸ்வதேச ராஜாக்களும், ஜனங்களும், உடனே காலதாமஸமன்னியில் தேச மெங்கும் வ்யாபார கலாசாலைகள் ஏற்படுத்தவேண்டும். அந்தக் கலாசாலைகளில் வ்யாபார விஷயமாய் எல்லாம் கற்பிக்கப்படுவதோடு வ்யாபாரத்துக்கு உதவும் தற்கால பாஷைகளும் கற்பிக்கப்படவேண்டும்.

(3) ஏற்கனவே இருக்கிறவும் ஏற்படப்போகிறவுமான ஸர்வ கலாசாலை (யூனிவர்ஸிடி) களில் இந்தியாவைப்பற்றிய பொருளாதாரமும் விவஸாயமும் ப்ரத்யேகமாய்க் கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(4) ஜனஸமூகத்தில் ப்ரமுகர்களும் முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் சிறுவர்களும் பொருளாதார சாஸ்த்ரத்தை, முக்யமாய் இந்தியாவின் நிலைமையைக் குறித்ததாக, வாசித்தறியவேண்டும். இதனால் அநேகம் பேர்களுக்கு சாச்வதமான கீர்த்தி ஏற்படுவதோடு இந்தியாவைப்பற்றிய பொருளாதார சாஸ்த்ரமும் புதிதாக ஏற்படும்.

(5) ஐரோப்பிய நாடுகளில் வர்த்தக ஸங்கங்கள் (சேம்பர் ஆப் காமர்ஸ்) இருந்து அந்தந்த தேசங்களுக்கு நன்மை செய்வதுபோல் இந்தியாவிலும் எல்லா விடங்களிலும் சேம்பர் ஆப் காமர்ஸ்கள் ஏற்பட்டு தேசத்துக்கு நன்மை செய்யவேண்டும். மற்ற கார்யங்களோடு கார்யமாய், யோக்யமான திறமையுள்ள கல்வியில் தேர்ந்த இந்திய வாலிபர்களுக்கு வ்யாபார உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுக்க முயலவேண்டும்.

(6) நூல் நூற்றல், நெசவு, பருத்தி வ்யாபாரம், பாங்கி வ்யாபாரம், இன்ஷ்யூரென்ஸ் முதலிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஸங்கங்கள் ஏற்பட்டு, அவ்வவைகளின் கார்யங்களை கவனித்து வரவேண்டும்.

(7) பாங்கி வ்யாபாரம், இன்ஷ்யூரென்ஸ், வெளி நாட்டோடு வ்யாபாரம் செய்தல், இவைகளே நமது முதல் வேலைகளா யிருக்கவேண்டும்.

(8) கவர்ன்மெண்டார் தங்களுடைய டெக்னிகல் டிபார்ட்மெண்டுகளில் உயர்ந்த உத்யோகங்களில் பாதி உத்யோகங்களை இந்தியர்களுக்கு விட்டுவிட வேண்டும். அந்த டிபார்ட்மெண்டுகளாவன: ரெயில்வே, டெலிக்ராபும் போஸ்டாபீஸும்; பாரஸ்ட்; ஸர்வே; ஜீயாலஜிகல் (ப்ருதிவி சாஸ்திரம்) மீடியராலஜிகல் (கால இயல்பு சாஸ்த்ரம்) டிபார்ட்மெண்டுகள்; பாசனம் (இரிகேஷன்); மின்ஸாரம்; யந்த்ர வொர்க் ஷாப்புகள்; மின்ஸார ஸப்ளைகள்; ஸிவில் இஞ்ஜினியரிங்; முதலியவைகள்.

(9) மாகாண கௌன்ஸில்களிலும், இம்பிரியல் கௌன்ஸிலிலும் வ்யாபார விஷயமாகவும் கைத்தொழில் விஷயமாகவும் ஸர்க்காருக்குத் தெரியப்படுத்த மெம்பர்கள் நியமிக்கப் படவேண்டும்.

(10) இந்திய கவர்ன்மெண்டாரின் வ்யாபார டிபார்ட் மெண்டார், ஐரோப்பியர்களுடைய தேவைகளை கவனிப்பது போலவே இந்தியர்களுடைய தேவைவையும் கவனிக்க வேண்டும். வெளிநாட்டாருக்கு அடிக்கடி உதவி செய்வது போல இந்தியருக்கும் உதவிசெய்ய வேண்டும்.

(11) ஸ்வதேச ராஜ்யங்கள் இந்தியாவில் ஐந்தில் ஒரு பங்காயிருப்பதால், அந்த ராஜ்யங்களும் இந்தியாவின் பொருளாதார நிலைமையை வ்ருத்திசெய்ய உதவவேண்டும். அந்த ராஜ்யங்கள் தனிமையாக முயற்சி செய்வதற்குப் பதிலாக கவர்ன்மெண்டாருடனும் இந்திய ஜனங்களுடனும் ஒத்து உழைக்கவேண்டும்.

(12) ஐரோப்பிய கைத்தொழில் கம்பெனிகள், பாங்கிகள், இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள், இறக்குமதி செய்பவர்கள், முதலியவர்கள் இந்தியர்களை க்ளர்க் வேலையோடு நிறுத்தாமல், புத்திசாலித்தனம், பொறுப்பு, திறமை இவைகளோடு செய்யவேண்டிய வேலைகளை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

(13) ஸ்வதேசி என்பதை வாஸ்தவமாகச் செய்து, வ்யாபாரத்து மூலதனத்தைச் சேர்ப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

(14) பாங்கிகள், இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் வ்ருத்தியாகி, அவைகள் நமது தேசத்தில் ஸர்வ ஸாதாரணமாகவேண்டும்.

(15) தொழில் கல்விக்கு போர்டுகள் (ஸபைகள்) ஏற்படவேண்டும்.

(16) பத்ரிகைகள் உபயோகமற்ற ஸமாசாரங்களையும், விவாதங்களையும் ப்ரசுரிக்காமல் பொருளாதார விஷயமாய் ரொம்பவும் கவனம் செலுத்தவேண்டும்.

(17) இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸுக்கு இப்பொழுதுள்ள 5,000 ரூபாய்க்குப் பதிலாக 25,000 ரூபாய் உதவவேண்டும். அதிலுள்ள லிப்பந்திகளை அதிகமாக்கி அவர்கள் தேசத்தில் பற்பல விடங்களுக்குப் போய் ஜனங்களுக்கு விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், சுரங்கவேலை, கோவாபரேஷன், இன்னம் இவை போன்றவைகளில் தேர்ச்சி யுண்டாகும்படி செய்யவேண்டும்.

(18) இவைகளெல்லாவற்றையும் விட தேசத்தில் கலகமில்லாமல், வெளிநாடுகளோடு யாதொரு சண்டையு மில்லாமல், தேசத்தில் ஒருவரோடொருவர் சச்சரவு செய்யாமல், தேசமெங்குப் ஸமாதானமாயிருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

---

## PROFITS AND RISKS.

### லாபமும் நஷ்டமும்.

வீட்டு விஷயங்களிலும், ஜனஸமுக விஷயங்களிலும் இருப்பதுபோலவே, வ்யாபாரத்திலும் கார்யங்கள் முழுவதும் ஸரியாய் நடப்பது அரிது. லாபம் வரும் என்று அறிகுறிகள் இருந்து, கார்யங்களும் ஸௌகரியமாய் தடைகளில்லாமல் நடப்பதாய்த் தோன்றும்போது ஏதாவது ஒரு தடை அல்லது சிறிய தொந்தரவு ஏற்பட்டு நமக்கு மன அருவெறுப்பைக் கொடுத்துக் கடைசியில் பெரிய நஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது.

இப்படி அடிக்கடி கஷ்டநஷ்டங்களை தன் வாழ்நாளில் அனுபவிப்பதனால்தான் ஸாதாரண வ்யாபாரி, லோகத்தில் ஸுகமே கிடையாதென்று எண்ணி வெறுப்படைகிறான். வ்யா

பாரியானவன், வ்யாபாரம் கெட்டுப்போயிருக்கிறது, அல்லது இன்னம் நன்ருயிருந்தால் நல்லது என்று எப்பொழுதும் குறைகூறுவது அவன் கேவலம், அதிக பேராசை கொண்டிருப்பதினாலல்ல. பின் என்னவென்றால், தன்னுடைய வ்யாபாரத்தில் எல்லாம் ஸரியாக நடந்துவருகிறது என்று தோன்றும்போது பெரிய நஷ்டம் திடீரென்று அடிக்கடி நேருவதினால் தான்.

ஸாதாரண வ்யாபார நடவடிக்கை ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

கல்கத்தாவில் சாக்குகள் ரொம்ப நெய்கிருர்கள். ஆகையால் கல்கத்தாவிலுள்ள ஒரு வ்யாபாரி அமெரிக்காவிலுள்ள ஒரு வ்யாபாரிக்கு லக்ஷம் ரூபாய் பெறுமான கோணிப்பைகள் விற்கிறான் என்று வைத்துக்கொள்வோம். கோணிப்பைகள் செய்யப்படும் யந்த்ரசாலைகளிருந்து வாங்குகிற விலைக்கும், அமெரிக்கா வர்த்தகர்களுக்கு விற்கும் விலைக்கும் நூற்றுக்கு 1-முதல் $1\frac{1}{2}$ வீதம் வித்யாஸம் இருக்கலாம், அப்படியானால் லக்ஷம் ரூபாய் வ்யாபாரத்தில் 1000 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரையில் லாபம் கிடைக்கும். இந்த லாபத்தை அவன் உழைத்துத்தான் அடையவேண்டும்.

நல்ல கோணிப்பைகள் செய்கிறதும், ஸாமான்களைக் குறித்த காலத்தில் தவக்கமன்றிக் கொடுக்கிறதுமான ஒரு நல்ல மில்லுக்கு ஆர்டர் கொடுக்கவேண்டும். மில்லிலிருந்து ஸுமார் 3, 4 மாதத்தில் பைகள் அனுப்பப்படலாம். மில் கம்பெனிக்கு பைகளைப் பாக் செய்வது, மார்க் (அடையாளம், பெயர் முதலியவை) போடுவது, கப்பலில் ஏற்றியனுப்புவது முதலியவற்றிற்கு வேண்டிய தகவல்கள் கொடுக்கவேண்டும். பணத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். ஸாமான்களை கப்பலில் ஏற்றுவதற்கு வேண்டிய ஸாதகங்கள் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். இப்படிப் பலவிதமான வேலைகளும் செய்து முடிக்க வேண்டும். அப்புறம் சில மாதங்களுக்குப் பிறகுதான் தன்னுடைய லாபத்தைக் கண்ணால் பார்க்கலாம். மில்லில் வேலை நிறுத்தல் ஏற்பட்டாலும் அல்லது மில்லே நின்றுபோனாலும் வர்த்தகனுக்கு ரொம்ப மனக்கவலைக்கு இடமாகும். சாதுரியமாய்க் காரியத்தை நடத்தவேண்டி வரும். ஒரு ஸமயம் அமெரிக்கா வ்யாபாரி கொஞ்ச ஸாமான் போதுமென்ருல் பாக்கிக்குள்ள லாபமும் போய்விடுகிறது. கடைசியாய் ஸாமான் முழுவதையும் கப்பலில் ஏற்றியாயிற்றென்றும் அதற்குரிய ஷிப்பிங் டாக்யுமெண்டென்றும், பில் ஆப் லேடிங் என்றும் சொல்லப்படும் தஸ்தாவேஜிகளும் கிடைத்துவிட்டன என்றும் வைத்துக்கொள்வோம். அப்புறம் பில்லுகளை அனுப்பிப் பணம் வாங்கவேண்டிய வேலையிருக்கிறது.

அந்யநாடுகளுக்கு சரக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்கள் தாங்கள் அனுப்பும் சரக்கு அந்ய தேசம் போய்ச் சேர்ந்து அங்கிருந்து பணம் வரும் வரையில் வெகுவாய்க் காத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். லக்ஷம் ரூபாய்க்கு சரக்கனுப்புகிறவன் அதற்கு தன்கையிலுள்ள முதல் முழுமையையும் போட்டு வாங்கிவிட்டால் மறுபடியும் அந்ய நாட்டிலிருந்து பணம் வருகிற வரையில் வ்யாபாரம் செய்யாமல் சும்மா அல்லவோ உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டும்.

இப்படிக் காத்துக்கொண்டிருக்காமல் சரக்கு ஏற்றுமதி செய்ததற்கு ருஜுவாகிய பில் ஆப் லேடிங் முதலிய தஸ்தாவேஜ்களை பாங்கிக்காரர்களிடத்தில் வைத்துப் பணம் வாங்கித் தாங்கள் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுப்பார்கள்.

வ்யாபாரி ஸாதாரணமாய் ஸாமான்களை அனுப்பும்போதுதான் பில்லுகளை வைத்துப் பணம் வாங்குவது. ஒரு தரகர் மூலமாக தன்

பில்லை ஒரு பாங்கிக் கம்பெனிக்கு விற்கிறான். வ்யாபாரிக்கு அமெரிக்க வர்த்தகர் கொடுக்க வேண்டிய பணத்துக்கு ஒரு உண்டியல் எழுதி கப்பல் தலைவனிடமிருந்து பெற்ற சரக்கு ரசீதுகளுடனும் அமெரிக்கா வர்த்தகன் கொடுக்கவேண்டிய பணத்துக்குக் கணக்குடனும், பாங்கிக்கு விற்பனை செய்கிறான். பாங்கிக் கம்பெனி ஒரு கமிஷன் ஏற்படுத்திக்கொண்டு பணத்தைக் கொடுத்து உண்டியல் முதலானவைகளை வாங்கிக்கொள்ளுகிறார்கள். அந்த பில்லை (உண்டியலை) மற்ற ரசீதுகள் கணக்குகளுடன் தங்களுடை பாங்கிக்காரர்கள் தங்களுடைய அமெரிக்கா ஏஜெண்டுகளுக்கு அனுப்புகிறார்கள். ஏஜெண்டுகள் பில்லை அமெரிக்கா வ்யாபாரியிடம் காட்ட, வ்யாபாரி அதில் கையெழுத்துப்போட்டு ஒரு குறிப்பிட்ட காலத்தில் (பில் வந்த நான்குமாஸத்துக்குப் பிறகு) பணஞ் செலுத்துவதாக ஒப்புக்கொள்ளுகிறான். அமெரிக்கா வ்யாபாரி யோக்யனாயிருந்தால் அவனை நம்பி கப்பல் தலைவன் கொடுத்த ரசீதுகளை பாங்கிக்காரர்கள் கொடுப்பார்கள். அவனும் பணஞ்செலுத்துவதற்கு முன்னாலேயே கப்பலிலுள்ள ஸாமான்களைப் பெற்றுக்கொள்ளுகிறான். கல்கத்தாவிலுள்ள வ்யாபாரியும் தன் பணத்தை யடைந்து கோணிப்பைகள் செய்துகொடுத்த பில்லுக்கு பணத்தையும் கொடுத்துவிடுகிறான். இதனால் கல்கத்தா வ்யாபாரிக்கு இந்த வ்யாபாரத்தில் ஸம்பந்தம் விட்டுப்போய்விட்டது என்று சொல்வதற்கில்லை. பில்லுக்குப் பணம் கொடுப்பதாகச் சொன்ன அமெரிக்கா வர்த்தகர்கள் இன்ஸால்வெண்டாகப் போய்விடலாம். அப்படியானால் பாங்கிக் கம்பனியார் பணத்துக்கு கல்கத்தா வ்யாபாரியே ஜவாப்புதாரி இந்த வ்யாபாரியே பணம் கொடுக்கவேண்டிவரும். இதனால் இவனுக்கு வரும் என்று நினைத்த லாபமாத்ரமல்லாமல் ஸாமான்களின் க்ரயத்தையும் இழக்க நேரிடும். நஷ்டமும் ஏற்படும்.

இந்த வ்யாபாரத்தில் இன்னம் எத்தனையோ சிக்கல்களும், தொந்தரவுகளும் இருக்கின்றன என்பது தெரியவரும்.

அனுப்பின ஸாமான்கள் சொன்ன மாதிரியில்லை என்று அமெரிக்க வர்த்தகன் சொல்லுகிறான் என்று வைத்துச்கொள்வோம். அல்லது மில்லிலேயே சற்று அஜாக்ரதையாயிருந்ததனாலோ, வேண்டுமென்று மட்டச்சரக்காய்ச் செய்து கொடுத்ததனாலோ ஸாமான்கள் நன்றாயில்லை என்று வைத்துக்கொள்வோம். அதனால் எவ்வளவு சங்கடங்கள் உண்டாகலாம். அதிக உத்ஸாகமுள்ள ஒரு சிறு வியாபாரி இத்தனை லக்ஷம் கோணிப்பைகள் அல்லது கம்பளிக்கட்டுகள் அனுப்பியாயிற்றென்றும் அதனால் குறைந்தது ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்து விட்டது என்றும் சொன்னால் அதை அப்படியே நம்புவதற்கில்லை. ஏனென்றால் அப்பொழுது தான் வ்யாபாரம் ஆரம்பமாயிருக்கிறது. அந்த வ்யாபாரம் முடிந்த பின்னல்லவா லாபம் கணக்கிடவேண்டும்.

## STORY AND BIOGRAPHY
## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

### THE LOST NOTES
### காணுமல்போன நோட்டுகள்.

I

"அடே, ஸுந்தரம் கைப்பெட்டியை எடுத்துக்கொண்டுவா, கணக்கு எழுதவேணும். உன்னிடத்திலிருந்த மைக்கூட்டையும் பேனாவையுங்கூடக் கொண்டுவா."

"இதோ கொண்டுவந்து விட்டேனப்பா. பெட்டித் திறவுகோல் உங்களிடத்திலிருக்கிறதோ?"

"என்னிடமில்லை. அலமாரியிலிருக்கும் எடுத்துக்கொண்டுவா."

ஒரு சிறுபையன், 16 வயதிருக்கும், தனது

உடம்பை வளைத்துக்கொண்டு மிகவும் ச்ரமத்துடன் ஒரு பெரிய கனமான பெட்டியைத் தூக்கிக்கொண்டுவந்து தன் தந்தை முன்டாகத் தரையில் வைத்துவிட்டு அவர் கேட்ட மற்ற மைக்கூடுபேனுவையும் கொடுத்துவிட்டு, வீட்டில் ஒரு அறைக்குள் போய் வாசித்துக் கொண்டிருந்தான்.

பெரியவர், பையனுடைய தகப்பனுர், பெட்டியைத் திறந்து, இரண்டு நிமிஷநேரம் அதிலுள்ள கடிதம் முதலியவைகளை எல்லாம் கீழே எடுத்துவைப்பதில் செலவழித்துப் பின்பு மறுபடியும், "அடே, ஸுந்தரம், இங்கேவா," என்ருர். ராமன் அவர் முன்னுல்வந்து, "ஏன் அப்பா, கூப்பிட்டீர்கள்?" என்ருன். "காலையிலே பெட்டியைத் திறந்தாயா?" "இல்லையே." "நிஜத்தைச்சொல்." "நான் எதற்காகத் திறக்கிறேன்? நீங்கள் ஒன்றும் திறக்கும்படி சொல்லவில்லையே, பெட்டியில் காசிருக்கா, பணமிருக்கா? நான் ஏன் திறக்கிறேன்?" "அதிலே தானடா பணம் வைத்திருந்தேன். நோட்டாக மாற்றிவைத்திருந்தேன். அதை நீ எடுத்தாயா?" "இன்றையதினம் அந்த அறைப்பக்கம் போகவே யில்லையே. காலையிலே கோவிந்தன் வீட்டிற்குப்போய் வ்யாஸம் எழுதிவிட்டு அதைக் கொண்டு வந்து இங்கு எங்கேயோ வைத்து விட்டேன், அதைக்காணும், இது வரையில் தேடிப் பார்த்தவண்ணமாயிருக்கிறேன். பெட்டியைத் திறந்தேனு என்கிறீர்கள்."

"பின் அந்த உள்ளே யார்தான் போனுர்?"

"அந்தப்பெண் இருக்கிற லக்ஷணத்தையெல்லாம் தின்றுவிடுகிறதென்று தான், அம்மா காலை முதல்கொண்டு அந்த உள்ளைப் பூட்டி வைத்திருந்தாளே."

"என்னடாது, வைத்திருந்தபணம் எங்கேயடா போய்விடும்?"

"எவ்வளவுபணம் வைத்திருந்தீர்கள்?"

"உன் அம்மாவைக்கூப்பிடு, ஏய், இங்கே வா."

ஸுமார் முப்பத்தைந்து வயதுள்ள ஓர் மாது மெதுவாய் நடந்துவந்து "எதுக்குக்கூப்பிட்டீர்கள்?" என்று சொல்லிக்கொண்டு அவர் முன்னிலையில் நின்ருள்.

"நீ பெட்டியைத் திறந்தாயா?"

"நான் என்னத்திற்காகத் திறக்கிறேன்."

"நேற்றையதினம் குப்பய்யரிடம் 500 ரூபாய் கடன் வாங்கப்போகிறேன் என்று சொன்னேனல்லவா? அதை நோட்டாகவே வாங்கிக்கொண்டுவந்து பெட்டியில் வைத்தேன். இப்பொழுது திறந்து பார்த்தால் பணத்தைக்காணும்.

"காலை முதல்கொண்டு இரண்டு நாழிகைக்கு முன்னுல் வரையிலும் கதவு பூட்டித்தான் இருந்தது. ராஜம் கூட அந்த உள்ளே போகவில்லை."

"பின்னே பணம்போனவழி?"

"பெட்டியில் வைத்திருந்தால் பெட்டியில் தானே இருக்கும்," என்ருன் பையன். "பெட்டியை நன்ருய்ப் பாருங்கள். நோட்டுதானே, கடிதாசோடு கலந்திருக்கும், தெரியாது." என்று பையன் சொல்லவே தந்தையும் தனயனுமாக பெட்டியைச் சோதிக்கலானுர்கள். தாயாரும் இவர்களைக் கவனித்துக்கொண்டு நின்ருள். கொஞ்சதூரத்தில் அடக்க ஒடுக்கமாய் ரொம்ப லக்ஷணமுள்ள ஒரு சிறுபெண், 13 வயதிருக்கும், நின்றுகொண்டு முன் சொன்ன மூவரையும் பார்த்துக்கொண்டிருந்தாள். பெட்டியைத்தேடினது பயன்படாமல் போயிற்று.

"வேறு எங்கேயாவது வைத்தீர்களோ?" என்று கேட்டாள் பெரியவரின் மனைவி.

"வேறு எங்கேயும் வைக்கவில்லையே. குப்பய்யர் தாம் அதிகாலையில் வெளியில் போவதாயும், ஆகையால் தம்மை எழுப்பவரவேண்டும்,

அப்படி வந்தால்தான் பணம்கொடுக்கமுடியும், இல்லாவிட்டால் தாம் ஊருக்குப்போய் வரப் பத்து நாள் சொல்லுமென்றும் சொன்னார். காலையிலே போய் வாங்கிக்கொண்டு வந்தேன். நீ காவேரிக்குப்போய்விட்டாய். இந்த அறையின் கதவு பூட்டியிருந்தது. சாவிக்காகத் தேடினேன். கதவுநிலை மேலிருந்தது. திறந்து நோட்டுக்களைப் பெட்டியில் வைத்துப் பூட்டிபழையபடி அறையைப்பூட்டிவிட்டுத்திறவுகோலை இருந்தவிடத்தில் வைத்துவிட்டுப்போய் விட்டேன். அடே, நீ ஏதாவது எடுத்தாயா? சொல்."

"நான் எதற்காகப்பா, எடுக்கிறேன். எனக்கென்ன செலவு?"

"ட்ராமா, கூத்து, ஸர்க்கஸ் எதற்காகவாவது வேண்டுமென்று எடுத்துக்கொண்டாயோ? மணியகார்பிள்ளை 150 ரூபாய் எடுத்துக்கொண்டு பட்டணம் ஓடினானே, அது மாதிரி நீயும் எங்கேயாவது—"

"நானும் என்ன சிறுபயலா, அப்படி ஓட? வைத்திருந்தால் அந்தப் பெட்டியில் தானே இருக்கும். நான் பார்க்கிறேன்." என்று சொல்லிக்கொண்டே பெட்டியை மறுபடியும் சோதிக்கலானான். தந்தையார் சிறுவர்களுக்குப் பொதுவாயுள்ள அயோக்யதையைப்பற்றிக் கொஞ்சம் ப்ரஸங்கம் செய்துவிட்டு, பணத்தை யிழந்ததற்காக மிகவும் துக்கப்பட்டுக்கொண்டிருந்தார். ரூ. 500 ஒரு ஏழைக்குடும்பத்துக்கு நஷ்டமாவதென்றால் அது அவர்களால் ஸகிக்கக்கூடியதல்லவே. தமது துக்கத்தை சொல்லாலும் செய்கையாலும் வெளிப்படுத்தி தமது பையன்தான் அப்பணத்தை எடுத்தொளித்திருக்கவேண்டுமென்று குற்றம் சாட்டினார் இந்த முறை பையன் பதில் சொல்லவில்லை. அவன் மிக ச்ரத்தையாய் கடிதங்களைப் புரட்டிக்கொண்டிருந்தான். தாய் ப்ரமித்தவளாய் நின்று கொண்டு கணவனையும் குமாரனையும் பார்த்துக்கண்ணீர்விட்டழுதாள் எட்டி நின்றிருந்த சிறுபெண்ணும் சிறிது அருகினில் வந்து நடப்பவைகளை கவனித்தாள்.

"என்னுடைய வ்யாஸம் அகப்பட்டது. இதெப்படி வந்ததிங்கே? நான் கூடத்திலல்லவா வைத்திருந்தேன். இதையார் பெட்டியில் வைத்தார்."

அவர்களெல்லாரும் சிறிது ப்ரமைகொண்டார்கள். "நீ கொண்டுவந்த கடிதம் நீதானேடா இதில் வைத்திருக்கவேண்டும்? நான் எப்படிவைத்திருக்கமுடியும்? இப்பொழுது உண்மையைச் சொல்லிவிடு. நோட்டுகளை எங்கே வைத்திருக்கிறாய்? நோட்டுகளை எடுக்கிற அவஸரத்தில் வ்யாஸத்தைப் பெட்டியில் வைத்திருக்கிறாய். நோட்டுகளைக் கொண்டுவந்து கொடுத்துவிடு." என்றார் தகப்பனார். பையன் தனக்கொன்றுமே தெரியாதென்று சாதித்தான். தனது வ்யாஸத்தை யாரோ பெட்டியில் வைத்து விட்டார்களென்றும் குறை கூறினான். "அது நம்பத்தக்கதாயில்லையே. இதைவிட வேறே என்ன ருஜுவேண்டும் நீ எடுத்தாயென்பதற்கு. போகிறது; உடனே தெரிந்ததே, நீ எடுத்துக்கொண்டு எங்கேயாவது கப்பி நீட்டிவிட்டால்." என்ன சொல்லியும் பையன் தான் எடுக்கவேயில்லை யென்றான். பயமுறுத்தினார்கள். வைதார்கள். கெஞ்சினார்கள். அடித்தார். ஒன்றுக்கும் அவன் தான் எடுத்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. இதற்குள் ஜனக்கூட்டம் கூடிவிட்டது. ஸங்கதி தெரிந்தவுடன் சிலர், "ஸுந்தரம் அப்படி எடுக்கப்பட்டவனல்லவே. அவன் ரொம்ப யோக்யனாயிற்றே. அவனை விசாரிக்காமல் ஏன் அடிக்கவேண்டும்" என்றார்கள். சிலர் "வேறென்ன ஸாக்ஷி வேண்டும். இதுதான் நன்றாய் வ்யக்தமாய்த் தெரிகிறதே. பெட்டியைத் திறந்திருக்கிறான். நோட்டுகளைக் கண்டவுடன் அதை எடுத்துக்கொண்டு பெட்டி

யைப் பூட்டும் அவஸரத்தில் தனது வ்யாஸமா? அதென்ன காம்போசிஞ? அதை வைத்து விட்டு வந்துவிட்டான். வெட்ட வெளிச்ச மாய்த் தெரிகிறதே.'' என்ருர்கள்.

ஸுந்தரம் தற்கால நாகரீகம் மிகுதியும் வாய்ந்த பையனுக விருந்தால், தான் அப் பணத்தை எடுத்தாலும் ஸரி, எடுக்காவிட்டா லும் ஸரி, தனது தந்தை இவ்வளவு தொந் தரை செய்ததற்கு, ஒன்று, தந்தையுடன் எதிர்த்துப் போராடியிருப்பான்; அல்லது சண்டை தொடங்கின உடனே எங்கேனும் ஓடியிருப்பான். இவ்விதம் நல்ல பூசை பெற் றுக்கொண்டு அவர் சொல்லும் வசை மொழி களைக் கேட்டுக்கொண்டிருக்க மாட்டான். ஸுந்தரத்தின் தாயும் பிள்ளையினுடைய செய் கைக்கு மிகவும் வாடி அவனுக்குச் சிலவசை மொழிகள் கூறினுள். பெற்ருேர்கள் கூறிய மொழிகள் சொன்னபடி பலிதமாயிருந்தால், பையன் அன்று ஒரே நாளில் பல முறையும் பல காரணங்களால் இறந்து மீண்டும் மீண்டும் உயிர்த்திருக்கவேண்டும். இருவரும் தன்னை நிர்ப்பந்திக்கிறதைப் பொறுக்கமாட்டாமல் வீட்டின் பல விடங்களிலும் தப்பிப்போய் எட்டி நின்ருன். என்ன செய்தென்ன. அவர் கள் கோபம் அடங்குவதாயில்லை. தந்தையார் "உள்ளம் கவர்ந்தெழுந்தோங்கு சினம்" அடக்க இயலாதவராய் ஒரு பெரும் தடி கொண்டு தலையில் நையப்புடைத்து ரக்த காயம் உண்டுபண்ணி ஓரிடத்தில் உட்கார்ந்து இளைப்பாறினுர். பையன் கொல்லைக் கூடத் தில் விழுந்து கிடக்கிருன். தந்தை வாயிற் புறத்தில் உட்கார்ந்து வாய்புதைத்துக் கண் ணீர் விடுகிருர். தாய் கூடத்தில் தூணேடு சாய்ந்து தேம்புகிருள். 500 ரூபாய் என்பது குறைந்த தொகையல்லவே.

அந்தச் சிறிய பெண் மாத்திரம் அடிபட்டுக் கிடக்கும் ஸுந்தரத்தினிடம் சென்று அங்கு நின்ருள். அப்பொழுது ஸுந்தரம் "அப்பா! என் ஜீவன் போகவில்லையே! இதற்கா பிள்ளை பிறந்தேன். ஒன்றுமறியாத எனக்கு இவ் வளவு ஏன் வரவேண்டும்? ஜகதீசா!" என்று சொல்லித் திரும்புகையில் பெண் நிற்பதைப் பார்த்து, "ராஜம், ஒரு கந்தைத்துணியும், ஜல மும், சிறிது சர்க்கரையும் கொண்டுவா, என் கண்ணே, நீயாவது எனக்குதவியாயிரு" என்று பரிதாபமாய்ச்சொல்ல, அதற்கு முன் அவனுடன் பேசியறியாத அப்பெண், "இதோ கொண்டுவந்துவிட்டேன்" என்று சொல்லிக் கண்ணீர்விட்டு வருத்தப்பட்டுக்கொண்டே உள்ளே சென்று வேண்டியவற்றைக் கொணர் ந்து அவனுடைய காயங்களை அலம்பிச் சர்க்க ரை வைத்துரத்தம் வராதபடி துணியால் கட்டி அவனுக்கு வேண்டிய சிச்ருஷை செய்தாள். "எனக்குத் தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா." என்ருன் பையன். அவளும் சீக்ரம் கொண்டுவந்து கொடுத் தாள். "எனது வேஷ்டி ஒன்றும் மேல் துண்டு ஒன்றும் கொண்டுவா" அவைகளையும் கொண்டுவந்து கொடுக்கவே, "ராஜம், நான் போய் வருகிறேன். இந்த வீட்டில் இருக்க எனக்கு இஷ்டமில்லை. திருடன் என்று பேர் வைத்துக்கொண்டு இங்கு இருக்கலாமா? நானே அதில் ஒரு தூசு கூட அறியேன். என் தகப்பனுர் தான் ஏனனவோ என்பேரில் ஸந்தேகப்பட்டுவிட்டார், நீ மாத்திரம் என் பேரில் ஸந்தேகம் கொள்ளாதே. நான் பொய் சொல்லவில்லை. நான் ஒன்று மறியேன்."

இவைகளை அவன் சொன்னபிறகு ஒரு நிமி ஷம் ஒருவரும் பேசவில்லை. பெண் பேசமுய ன்ருள். மறுபடி சொற்களை மனவிற்குள் அடக்கிக்கொண்டாள். மனம் ஸமாதானம் கொள்ளவில்லை. பின்பு தைர்யம் கொண்டவ ளாய், "நீங்கள் எங்குபோகிறீர்கள்? நீங்கள் போய்விட்டால், எனக்கார் துணை?" என்று

தடுமாற்றத்துடன் கேட்டாள். "கதி இல்லாதவனுக்கு இன்ன இடம் என்றுண்டா? மனம் போன போக்கெல்லாம் போகவேண்டியது தான். உனக்கு உன்மாமா இருக்கிறார் மாமி இருக்கிறாள்." "அப்படிச் சொல்லலாமா. நீங்களல்லவா எனக்குத் துணைவர். நீங்களல்லவா—" "அதெல்லாம் ஒன்றும் சொல்லாதே. உனக்குமாங்கல்யபலம் ரொம்ப அதிகம். உனக்கு அத்ருஷ்டமிருந்தால் நான் திரும்பிவருகிறேன். இல்லாவிட்டால் என்னைக் காணமுடியாது. அவருக்குக்கோபம் தணிந்து நான் வரவேண்டுமென்று விரும்பினால் அப்பொழுது பார்த்துக்கொள்வோம். என்னிடத்தில் ஒரு காசும் இல்லை. 500 ரூபாய் திருடினதாகமாத்திரம் பேர். ஈசா என்னை இப்படிக் கஷ்டப் படுத்துவாயா."

"என்னிடம் ஒரு ரூபாயிருக்கிறது" என்று சொல்லியதைக் கொண்டுவந்து கொடுத்தாள் ராஜம். அவன் அதை வாங்கிக்கொண்டு, "நீதான் ஆபத்துக்காலத்தில் உதவுகிறவள்." என்று சொல்லி அவளைத் தன் பக்கமணைத்து ஒரு முத்தம் கொடுத்துவிட்டுக் கொல்லைப்புறமாய்ப் போய்விட்டான். அவளும் அவன் செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தாள்.

## II

முதற்பிரிவில் கூறிய ஸம்பவங்கள் நடந்து ஸுமார் இரண்டு வருஷத்துக்கு மேலாயிற்று. அதே வீட்டில் வாயிலில் இரண்டொரு பரங்கிப்பூ வாடிக்கிடந்தன. கோலங்கள் சிறுவர்களால் அழிக்கப்பட்டு அலங்கோல மடைந்திருந்தன. ஆசிரியராகிய நாம் அவ்வீட்டுக்குள் பாவனையென்னும் உடலத்துடன் சென்றபோது மாலையில் 25 நாழிகைப் பொழுதிருக்கலாம். வீட்டிலுள்ளோர், மூவர், கூடத்திலிருந்தார்கள். அவர்களுள் ஒருவரே புருஷர். அவர் தரையில் ஓர் ஆஸனப்பலகையில் உட்கார்ந்திருந்தார். ஓர் மாது, அவர் மனைவி, சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்தாள். ஓர் பெண், 15 வயதிருக்கும், ஓர் மூலையில் ஒரு பெரிய புஸ்தகத்தை வைத்துக்கொண்டு வெறித்த நோக்குடன் உட்கார்ந்திருந்தாள். இவர்கள் யாவரென நாம் கூறவேண்டுவதவச்யமில்லை.

"அவனால் நமக்கு உண்டான கஷ்டம் இவ்வளவு அவ்வளவல்ல." என்றார் ராமய்யர். "அவன் போனது முதற்கொண்டு கஷ்டத்துக்கு மேல் கஷ்டம் வந்துகொண்டிருக்கிறது."

"என்ன செய்கிறது. தலைவிதி" என்றாள் அவர் மனைவி.

"தலைவிதி பணத்தை எடுக்கச்சொல்லிற்றா? ஆனமட்டும் கேட்டேனே. கெஞ்சினேனே. ஒன்றுக்கும் அசையவில்லையே."

"அதுவும் அவன் தலைவிதிதான்."

"மணியகாரருக்குப் பணம் கொடுக்கவேண்டுமென்று 500 ரூபாய் கடன் வாங்கினேன். அதுவும் போயிற்று. ஐந்நூறும் ஐந்நூறும் ஆயிரமாயிற்று. அதற்கு வட்டி இருநூறு ரூபாய். அவர்கள் பணத்தைக் கொடு என்று அரித்தார்கள். என்னசெய்கிறது. நிலத்தை எல்லாம் விற்றாயிற்று, ஈட்டுக்கடன்பேரில் பணம் கொடு என்று யாரைக்கேட்டாலும் பணமில்லை என்றார்கள். போக்யம் வைக்கவும் ஸம்மதப்படவில்லை. நிலம் விற்றாயிற்று. என்னசெய்கிறது? அதுவும் நமது தலைவிதி." என்று பெரியவர் தமது தலையில் மனம் கசிந்து அடித்துக்கொண்டார். அவர் மனைவி கண்ணீர்விட்டுத் துக்கித்தாள்.

"சோற்றுக்குத் திண்டாட்டமாய்ப் போகவே நகை யெல்லாம் விற்றோம். பாத்திரங்கள் முதலியவற்றை யெல்லாம் விற்றோம். ஆயிற்று அந்தப் பணமும். இன்றோடு தீர்ந்துவிட்டது. போகிப் பண்டிகையுடன் கைப்பணம்ஆஸ்தி யெல்லாம் தீர்ந்தது. வீட்டையோ

தொடுவதற்கில்லை. அதன் மேலுள்ள கடனோ தினம் வளர்ந்து கொண்டிருக்கிறது. எருமை மாடோ செத்துப்போய்விட்டது. நாளை ஸங்க்ராந்தி பொங்கலுக்குப் ஸாமான் வேண்டுமே, பணத்துக்கென்ன செய்வது," என்றிப்படியாகப் பலவிதமாக புருஷனும் பெண்சாதியும் வெகு நேரம் அங்கலாய்த்துவிட்டு,

"அவனுக்கு ஆயுஸு பலம் ரொம்ப இருக்கிறது. நாளைக்கு ஸங்க்ராந்தி இல்லாவிட்டால் அசுபமென்றல்லவா எண்ணவேண்டும்." என்றார்.

இந்தப் பேச்சுகளை யெல்லாம் கேட்டிருந்த நமது கதாநாயகி "மாமா, அசுபம் வரவேண்டாம். என்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது. அதைத்தருகிறேன். நாளையதினம் ஸங்க்ராந்தி நடக்கவேண்டும். அசுபமான பேச்சேவர வேண்டாம். அதைக் கேட்க என்மனம் என்னவோ போலிருக்கிறது" என்று சொல்லி உள்ளே சென்று தனது சிறிய பெட்டியிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டுவந்து தனது மாமனாரிடம் கொடுத்தாள். ராமய்யர் அதைப் பெற்றுக் கண்ணில் ஒற்றி, "நாளைய தினம் சுபதினமாகவே இருக்கட்டும்" என்று ஸந்தோஷத்துடன் கூறினார்.

"அப்படியே யாகட்டும்" என்று அவர் மனைவியும் மொழிந்தாள்.

"சீதாபோனபோது, ராஜம் சிறு பெண். அண்ணா, என் பெண்ணுக்கு உன்னைத்தவிர வேறு யாரும் பந்துக்களில்லை. என் புக்ககத்தில் எல்லாரும் எனக்கு வேண்டாதவர்கள். அவர்களும் நெருங்கின பந்துவல்ல. என் பெண்ணை நீதான் காப்பாற்றவேண்டும். நம்ம ஸுந்தரத்துக்கு அவளைக் கொடுத்துவிடு. ஒன்றுக்குள் ஒன்றாயிருக்கட்டும். நான் வேண்டிக்கொள்வது அதுதான். ஸுந்தரமும் ராஜமும் அகமுடையான் பெண்சாதியிருப்பார்கள் என்று நீ வாக்குக் கொடுத்தால் நான் ஸந்தோஷமாய் உயிர் விடுவேன்," என்றாள்.

"நானும் 'அப்படியே ஆகட்டும். ஸுந்தரத்துக்கு ராஜத்தையே கல்யாணம் செய்துவைக்கிறேன். நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. என் பெண்ணைப்போல் பாவிக்கிறேன். என்னகமுடையாளும் அப்படியே ஒன்றுக்குள் ஒன்று ஸம்பந்தம் செய்யவேண்டு மென்கிறாள்' என்றேன். அதன்படியே நடந்தது. அவன் ஓடிவிட்டானே. யோக்யனென்று நினைத்தேன். பாவிப் பயல் மோசம் செய்துவிட்டானே."

"மாமா, அப்படி ஒன்றும் சொல்லாதேயுங்கள். அவரைப்பற்றி ஒன்றும் சொல்லாதேயுங்கள். எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவரைப்பற்றி ஏதாவது சொன்னால் என் மனம் ஸங்கடமடைகிறது" என்று அழுது சொல்லிக்கொண்டே அவ்விடம் விட்டு அகன்று சென்றாள். பையனின் பெற்றோரும் சிறிது நேரம் துக்கித்துவிட்டு தங்கள் கார்யத்தில் கவனம் செலுத்தலானார்கள்.

அன்றிரவு ராஜத்துக்கு மிகவும் ச்ரமமாய் விட்டது. அவள் தன் கணவனை விட்டுப்பிரிந்தது முதல் துக்கத்திலேயே மூழ்கிக்கிடந்தாள். தன் கணவனைப் பிரிந்தது முதல் அவன் சொன்ன சொற்களை நினைந்து நினைந்து வருந்தினாள். கணவனைப் பிரிந்தால் என்னகெடுதி என்று எண்ணிப் பார்த்தவளல்ல. ஏதோ ஒரு பீதி, இன்னதென்று இயம்ப இயலாதது அவள் மனதில் குடி கொண்டது. ஒரு வருஷம் கழித்து அவள் ருதுவாகி மனம் விசாலமடைந்ததும், அவள் பய மதிகரிக்கலாயிற்று. ருதுவாகாத விதவைகளும், பக்வமடைந்து கணவனை யிழந்தவர்களும், இன்ன மற்ற அமங்கலிகளும், அமங்கலமானவர்கள் என்று பிறரால் தூற்றப்பட்டு சுப காரியங்களில் கலக்கப்பெறுமல் தனித்து நிற்பதை யறிய அவளுக்குக் கவலைக்கிடமாயிற்று. தன்கதியும் அவ்வாறாகுமோ

என ஏங்கினுள். பிற பெண்கள் தம் கணவ னுடன் உல்லாஸமாய்க் காலங்கழித்து வரு வதைக் கண்டும் கேட்டும் புஸ்தகங்களில் வாசித்தும் காதல் நோயின்னதென ஒருவாறு மனத்தில் பாவிக்கவே அந்நோய் ஒரு புறம் சில ஸமயம் வாட்டலாயிற்று. இவ்வாறு இரு வகையிலும் மனந்தளர்ந்து ஸந்தோஷம் தவிர்ந்து கவலை மேலிட்டவளாய் வருந்தினுள். தன் கணவனுடைய உண்மையான நிலைமையை அறிய இயலாதவளாய் ஏங்கலானுள். அவரு டைய தந்தையும் தாயும் பல தடவைகளில் அவரைப்பற்றி தூஷிப்பது பொறுக்காமல் அவர்களிருக்குமிடம் விட்டு விலகி வேறு இட த்துக்குச் சென்று கண்ணீர்விட்டழுவாள். "'நீ மாத்திரம் என்பேரில் ஸந்தேகப்படாதே நான் பொய் சொல்லவில்லை' என்றுரே, அவர் என்னிடத்தில் ஏன் பொய் சொல்ல வேண்டும். ஊரைவிட்டோடும்போதும் தம் மிடம் பணம் கொஞ்சமுமில்லை என்றுரே. நான் கொடுத்த ரூபாயை அன்புடன் ஏற்றுக் கொண்டாரே. அவரா திருடக்கூடியவர்? இவர்கள் தான் என்ன முரட்டுத்தனமாய் பழி வார்த்தை சொல்லுகிறுர்கள்" என்றிவ்வாறு புலம்புவாள். ஸுந்தரம் அவளிடம் விடை பெற்றுச் செல்லுங்கால் அவளுக்குக் கொடுத் துப்போன ப்ரதி யுபகாரத்தை நினைக்கும்போ தெல்லாம் அவளுக்கு வருத்த முண்டாகும். அவரைத் திரும்பவும் காணும் பாக்யம் எப் பொழுது கிடைக்கும் என்றேங்குவாள்.

பெற்றோர்களும் சிறிது சிறிதாக தங்களு டைய புத்ரன்மேல் உள்ள கோபத்தை யொ ழித்து அவன் ஓடிவிட்டதற்காக வருத்தப்பட் டார்கள். "அவன் திரும்பி வந்துவிட்டால் போ துமே. எப்படியாவது பிச்சை எடுத்தாவது ஜீவிக்கலாமே. அவனைக் காணுமல் என்மனம் படும்பாடுஇவ்வளவு அவ்வளவல்லவே'. என்று ஊரில் பலரிடத்தும் சொல்லி வருவார்கள்.

ராஜம் அன்றிரவு நித்திரையே கொள்ள வில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு அழு தாள். தன் விதியை நொந்தாள். ஸுந் தரத்தை நினைந்து உருகினுள். அவன் கூறிப் போன மொழிகளை எண்ணி வருந்தினுள். "நான் அத்ருஷ்டசாலியானுல் இந்த 2 வருஷ காலத்துக்குள் திரும்பிவந்துவிட மாட்டாரா! அவர் சொன்ன வார்த்தைகளெல்லாம் வீண் வார்த்தைகளெனத் தோன்றுகிறது. இனிமேல் வரப்போகிறதைப்பற்றி யார் என்ன சொல்ல முடியும். அவர் சொன்னவை யெல்லாம் எனக்குத் தேறுதலாகச் சொன்ன வார்த்தை கள்" என்று எண்ணி மனங்கசிந்தாள். இப் படிப் பலவிதமாக எண்ணி தான் பூமியி லிருப்பது பாரமாதலால் தனது நல்ல நிலை மையிலேயே உயிர்விடுதல் மேலானதென நிச் சயித்தாள்.

பொழுதுவிடிந்தது. ஆனுல் அவளுக்குஇன் னம் விடியுங்காலம் வரவில்லை. ஆயினும் தன து மாமியுடன் படுக்கையைவிட்டெழுந்தாள். அவளுடன் வீட்டு வேலைகளை கவனித்தாள். அந்தணர் அதிகாலையிலேயே ஆற்றங்கரைக் குச் சென்றுவிட்டார். அவர் மனைவியும் நாலு நாழிகையானதும் தனது மருமகளை ஆற்று க்கு வரும்படி அழைத்தாள்.

"எனக்குத் தலைவலிக்கிறது. உடம்பு என் னவோ செய்கிறது. நான் வேண்டுமானுல் பிறகு போய்க்கொள்ளுகிறேன். இல்லாவிட் டால் கிணற்றிலே ஸ்நானம் செய்கிறேன்." என்றுள் ராஜம்.

மாமியாரும் ஆற்றுக்குபோய் விட்டாள். தான் மாத்திரம் தனியாயிருக்கவே அவளுக் குப் பலபல யோசனைகள் தோன்றின. அவற் றின் பயனுக அவள் ஒரு பெரிய கயிற்றை ஓர் அறையில் உயரத்திலிருந்து கட்டி, கயிற்றில் சுருக்குப்போட்டு ஏணிமேலேறி அந்தச்சுருக் கை தனது கழுத்திலிட முயன்றுள். பிறகு பயங்கொண்டு கீழே இறங்கினுள். மறுபடி யும் ஏறினுள்.

"ஜகதீசா, என் கணவர் பிரிந்த பிற்பாடும் நான் உயிர் வைத்துக்கொண்டிருக்கவேண் டுமா. என் எண்ணத்தை நிறைவேற்ற தைர் யம் கொடு, உன்னை நமஸ்கரிக்கிறேன். அத்ரு ஷ்டமிருந்தால் இத்தனைநாளாக அவர் வராம

லிருப்பாரா? எனக்கு மாங்கல்யபலமிருந்தால் நான் உயிரோடிருக்குமளவும் அவருக்கு நன்மைதான். அதனால் எனக்கு ஆயுஸு அதிகமென்று எப்படிச் சொல்லலாம். ஜகதீசா, என்னுயிரை வாங்கிக்கொள்ளும். அவரைக்காணாமலிருக்கவென்னால் முடியவில்லை." என்று சொல்லிக்கொண்டே கழுத்தில் சுருக்கிட்டு ஏணியிலிருந்து கீழே குதித்தாள்.

உடனே படீரென்று கதவுதிறந்தது. "என்னைக்கண்டு உயிரோடு இரு" என்று ஒருவர் சொல்லிக்கொண்டே உள்ளேவந்தார். வந்ததும் பெண் இருக்கும் நிலைமையைப்பார்த்து உடனே ஏணிமேலேறி அவளைத்தூக்கி கயிற்றை வாங்கிவிட்டு கீழே இறக்கினர். அதற்குள் அவள் கண்மூடி ஸ்வாசமும் இல்லாமல் போய்விட்டது. வந்தவர் அவளைத் தம்மடிமேலிருத்தி வேண்டிய சைத்யோபசாரமெல்லாம் செய்து அவள் மூர்ச்சைபோயிருந்ததால் (சுருக்குடன் அரைநிமிஷமும் இருக்கவில்லை) அவளுக்கு ஸ்மரணை உண்டாக்கினர்.

ராஜத்துக்குச் சிறிது தன்னினைவு ஏற்படவே அவள் தனது கண்களைத் திறந்துபார்க்க தன் கணவன் மடியில் படுத்திருப்பதை யறிந்து சரேலென்று எழுந்திருந்து ஒருபுறத்தில் நின்றாள். "ராஜம், என்னகாரியம் செய்தாய், இப்படி செய்யலாமா? உனக்கார்துணை என்றாயே, எனக்கார்துணையென்று இப்படிச்செய்தாய்" என்று சொல்லியவளை யணைத்து முத்தமிட்டார். நாம் அவர்கள் ஸம்பாஷித்தவைகளையெல்லாம் சொல்லவேண்டியதில்லை.

கால்மணி நேரத்துக்கெல்லாம் ஸுந்தரத்தின் பெற்றோர் வரவே, ஸுந்தரம் அவர்காலில் பணிந்து வணங்கினன். அவர்களும் ஆசிகூறினர்கள்.

என்றாலும் தந்தைக்கு மகன்மேல் இன்னம் ஸ்ந்தேகமிருந்தது. அதை யப்போது தெரிவித்தால் எங்கு பையன் ஸங்க்ராந்தியின் ஸந்தோஷத்தைக் கெடுத்துவிடுவானோ என்றெண்ணி சும்மாயிருந்தார். எல்லாரும் அன்று ஸந்தோஷமாகவே யிருந்தார்கள். 1 மணி ஸுமாருக்கு ப்ராமணர் பூஜையாரம்பிக்க யத்தனிக்கையில் கூடத்திலுள்ள ஒரு நீண்டகுறுகியவாயுடன் இருந்த ஒரு பிறையில் அடைத்திருந்த பழங்கந்தைகள் அவர் மேல்பட்டுவிட்டன.

"ஏ, கழுதை, இங்கேவா, இந்தத் துணிகளை எடுத்துவிடு என்று எத்தனை தரம்சொல்லுகிறது? பார் என்மேல் பட்டுவிட்டது. நான் மறுபடியும் ஸ்நானம் செய்யவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே குச்சியால் கந்தைகளை வெளியில் எடுத்துத் தள்ளினர். பிறையின் உள்புறத்தில் ஏதோ வெளுப்பாயிருந்தது. அதுவும் கந்தையாயிருக்கலாமென்று எண்ணி குச்சியால் தள்ளக் கடிதச்சுருளாயிருந்தது. "இதென்ன கடுதாசிகள், பார், ஸுந்தரம்." என்றார் அந்தணர். அவன் எடுத்துப்பார்த்தான். உடனே ப்ரமைகொண்டு சுவரில் சாய்ந்தான். "அதென்னடா அது?"

அவன் பதில் சொல்லாமல் அவைகளை அவரிடம் கொடுத்தான். "ஏய், இதைப்பார், காணாமற்போன நோட்டுகள். பாழும்பணமே, உன்னாலல்லவோ இவ்வளவு கஷ்டங்களும் நேர்ந்தன! அப்பா! ஸுந்தரம் உன்மேலிருந்த ஸந்தேகமெல்லாம் போய்விட்டது." என்றார். யாவரும் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

"இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது, நோட்டுகளை இந்தப் பிறையில் வைத்துவிட்டுத்தான் திறவுகோலைத் தேடினேன்."

"நானும் இதில்தான் எனது வ்யாஸத்தை வைத்தேன்" என்று யோசனையாய்ச் சொன்னான் ஸுந்தரம்.

"ஸரிதான் நோட்டுகளுக்குப்பதிலாக வ்யாஸத்தை எடுத்துப் பெட்டியில் வைத்துவிட்டேன்!" என்றார் ப்ராமணர்.

அன்றையதினம் எல்லாரும் பொங்கலை மெதுவாக ஸாப்பிட்டார்கள். ஸந்தோஷத்தால் விலாப்புடைக்கத் தின்றார்கள். பத்ரிகை நேயர்களே, நீங்களும் ஸங்க்ராந்தியை ஸந்தோஷமாய்க் கொண்டாடுங்கள். இனிக் கதையை முடிப்போம். ஓடிப்போன ஸுந்தரம் கும்பகோணம் சென்று சில கனவான்களுடைய உதவியால் தன் படிப்பை வ்ருத்திசெய்து ஒரு ராஜாங்க உத்யோகத்தில் அமர்ந்து தனது பெற்றோர் தன்னைக் காணவிரும்புவதாக தன்னூர் நண்பன் ஒருவனாலறிந்து அவர்களையும் தன தன்புக்கிடமான மனைவியையும் காண ஊருக்குவந்தான். அவனும் அவன் மனைவியும் சந்தோஷித்து விளையாடியதை இடமதிகரிப்பதால் எழுதவில்லை. நேயர்கள் மனத்தில் பாவித்துக் கொள்வார்களாக. சுபம்! சுபம்!!

# SELECTIONS.
## விசேஷத்திரட்டு.

### SCHOOL GARDENS IN CEYLON.
### இலங்கையில் வித்தியாசாலைத் தோட்டங்கள்.

வித்தியாசாலை உபாத்திமாரும் அவர்களது மாணவருமாக ஒருங்கு சேர்ந்து வித்தியாசாலையைச் சுற்றிவரக் கிடக்கின்ற நிலத்தை உழுது கொத்திப் பண்படுத்திப் பயிர்நாட்டி வித்தியாசாலைகளோடு சம்பந்தப்பட்டனவாய் மாணவர்களுக்கு ஒழிவான நேரங்களைக் கிருஷிமுயற்சியிற் செலவழிக்கச் செய்யுமிடங்களே வித்தியாசாலைத் தோட்டங்களெனப்படும்.

இவ்வகைத் தோட்டங்களின் நோக்கங்களாவன:-

1. பாடசாலைப் பிரகாரங்களைப் பிரபையாக்கி அவைகளை அலங்காரப்படுத்திவைத்தல்: அஃதாவது கவர்ச்சியற்ற வெறுங்கட்டடமாயிராது பயிர்களாற் சிறப்பித்து மாணவர்களுக்கு உவந்த ஒருபொழுதுபோக்கு ஸ்தானமாக்குதல்;

2. பொழுது போக்காகவும் அதனோடு பிரயோசனப்படத்தக்கதாகவுந் தோட்ட வேலையை இடையிடையே செய்துவருதலினால் வகுப்பிலே நாடோறும் ஒரேவிதமான வேலையைச் செய்வதினாலுண்டாகுங் கஷ்டத்தை இலகுவாக்குதல்;

3. பாடசாலைவளவைப் பயிர்செய்வதற்காகக் கூறுபாடுசெய்யுமிடத்து ஒழுங்கு, முறைமை, துப்புரவு, சித்திரப்பழக்கம், ஆகிய இவைகள் எவ்வகையென உதாரணத்தோடு காட்டுதல் ;

4. இயற்கைப் பொருள்களை அவைகட்கு இயல்பாயுள்ள இடங்களிலேயே ஆய்ந்துணரும் இயற்கை அறிவிற்கு ஏற்ற ஓரிடத்தை அமைத்தல்;

5. உபயோகமும் அலங்காரமுமான பயிர்களைச் செய்வதாகிய உத்தியான வித்தைக்குப் பொருட்பாடமாக உதவுதல்;

6. பாடசாலைச் சீவியத்தைத் தொழிற்பாடசாலையோடமைத்து கிருஷிக சாஸ்திரத்தின் பிரதமபாகத்திலே பயிற்றுதல்;

7. வித்துகளையும் பயிர்களையும் அவைகளைப்பற்றிய விபரங்களையும் சுற்றுக் கிராமங்களிலே பரப்புதற்கு மத்தியஸ்தானங்களாக ஆக்கிக்கொள்ளுதல்;

8. கமத்தொழிலை மேனிலைக்குக் கொண்டுவருவதிற் கண்ணுயிருக்கும் கழச்சங்கத்தாரையும் கமக்காரரையும் இணைக்கும் ஏதுக்களாக ஆக்கிக் கொள்ளுதல்;

9. தோட்டங்களைக் கண்கூடாகக் கண்டேயாயினும் பாடசாலைகளின் மாணவர்கள் மூலமாயேனுங் கமக்காரனைப் புதுமையும் விசேஷமுங்கூடிய பலனைக்கொடுக்கக்கூடியதுமான பயிர்களெவையென அறியச் செய்து அவைகளின் செய்கைகளில் உசிதமுறையாகச்செய்ய ஏவுதல்;

10. பாடசாலைப் பிள்ளைகளிடத்தே பயிர்ச்செய்கையிலே ஒரு நவீன விருப்பத்தை யெழுப்பி அவர்களுக்கு இயற்கை யறிவின் வாஞ்சையை யூட்டி அவர்களை உண்ணாட்டுச்சீவியத்திலுங் கமமுயற்சியிலும் மனத்திருத்தியுள்ளவர்களாக விருக்குமாறுசெய்தல் ;

11. தங்கள் இருப்பிடங்களிலே தோட்டங்களையுண்டாக்குமாறு பாடசாலைப் பிள்ளைகளைத் தூண்டிவிடுதல்.

12. பாடசாலைப் பிள்ளைகள் தம் கைகளினால் வேலைசெய்வது இழிவென எண்ணாது தக்க ஒரு பெருமையென்று எண்ணுமாறு செய்தலும் அவர்கட்கிடையிலும் மறு பாடசாலைகட்கிடையிலுந் தீமை விழைக்காத எதிரிடையை உண்டாக்கி விடுதலும் ஆகிய இவைகளே.

வித்தியாசாலைகளைச் சுற்றிவரத் தோட்டச்செய்கைக்கு வளமான நிலமும் நீரும் பொருந்தியிருக்கவும் பயிர்ச்செய்கை நடாத்தப்படாமலிருக்கின்ற விடங்களிலே அம்முயற்சியைத் தொடக்கி விடுவதற்காகவும், அரசாட்சியாரால் வித்தியாசாலைத் தோட்டங்களைக் குறித்தமைக்கப்பட்டிருக்கும்பிரமாணங்களுக்கு அமையத் தங்களால் இயன்ற உதவியைப் புரிவதற்கும், அம்முயற்சியை உசிதமுறையாய் நடாப்பிப்பதற்குமாக அரசினர் கிருஷிகவேலையில் அதனைப் புறம்பான அதிகாராங்கமாக்கி அதற்கோர் அத்தியட்சரையும் உதவிக்காரரையும் உத்தியோகஸ்தர்களாக ஏற்படுத்தியிருக்கின்றனர். இவ்வேலை சிறிதுகாலமாக கலாசங்கத்தாராலேயே நடப்பிக்கப்பட்டுவந்தது. 1906-ம் வருடந்தொடக்கம் இவ்வேலையை இராசாங்க தாவர வேலைப்பகுதியின் ஒரு பிரிவாக்கித் தோட்டங்களின் அத்தியட்சருங் கலாசாலை அதிபராகிய வித்தியாகர்த்

தரும் இப்பொழுது ஒத்து நடாத்தி வருகின்றனர். இத்தோட்டங்களை அத்தியட்சரும் அவரின் உதவிக் காரரும் மேற்பார்த்துச் சோதித்துத் தங்கள் கருத்தை வித்தியாகர்த்தருக்கு அறிவிக்க திறமெனக் கணிக்கப் படுந் தோட்டங்களுக்காக உதவி நன்கொடைப் பாட சாலைத் தோட்டமாயின் விசாலத்துக்குத் தக்கபடி செய்யப்படுகின்ற நிலம் மூன்றிலொரு ஏக்கராயின் முப்பது ரூபாவும், அதற்குமேற்பட ஒரு ஏக்கர் வரை யிலாயின் ஐம்பது ரூபாவும் உபகாரமாக உதவி நன் கொடைப் பணத்தோடு சேர்த்தும் அரசாட்சிப் பாட சாலையாயின் தோட்டச் செய்கைக்காகக் கொடுக்க விருக்கும் பணத்தை வருடச் சோதனைக்காகக் கொ டுக்கப்படும் உபகாரப் பணத்தோடு சேர்த்தும் மேல திக இலாபமாக வித்தியாகர்த்தரால் அளிக்கப்படு மெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வித்தியாசாலைத் தோட்டங்களின் அத்தியட்சரா கிய உத்தியோகஸ்தரின் முக்கிய ஸ்தானம் கொழும் பிலேயுள்ள அரசாட்சித் தாவர தோட்டமேயாம். இது மூன்று ஏக்கர் விசாலமுள்ளது. இவ்விடத்தே பூச்செடிகளின் விதைகள், கனிமரங்களின் விதைகள் பல மேடைகளிற் போட்டுண்டாக்கப்பட்டுச் சிறு கன்றுகளாகவும் பயிர் விதைகளாகவுஞ் சேர்த்துப் பாடசாலைத் தோட்டங்களுக்கு இலவசமாக அனுப்பப் பட்டு வருகின்றன. 1901-ம் வருடத்திலே 5 வித்தி யாசாலைத் தோட்டங்கள் மாத்திரம் இருந்தன. இப் பொழுதோ இலங்கை முழுவதிலும் 250 தோட்டங் கள் வரையிற் செய்யப்படுகின்றன. இவைகளில் அதி கப் பற்றுன்வை அரசாட்சிப் பாடசாலைத் தோட்டங் களேயாம். இத்தோட்டங்களின் பெருக்கமே அவை களினாலாகும் பயனுக்குச் சாட்சியாகின்றது.

நம் தேசத்திலும் இதுபோன்ற பிறதேயங்களிலும் ஆங்கில கல்வி நாளொருவண்ணம் பொழுதொரு மே னியாக அபிவிருத்தியுற அதன் நற்பிரயோசனங்க ளோடு துர்ப்பிரயோசனங்களும் பற்பலவாக விளை தல் யாவரும் நன்கறிந்த விஷயமேயன்றோ? ஆங் கில கல்விப் பெருக்கத்துச்குப் பின் கமத்தொழில் கற்றோரால் அதிகமாகக் கவனிக்கப்படா தொழித லும், தம் கமத்திலே மேழிபிடித்துத் தாமாக வேலை செய்தலை இழிவென மதித்தலும் ஆகிய இவைகளே துர்ப்பிரயோசனங்களுட் சிரேஷ்டமானவை யென லாம். ஒரு தேசத்தின் செலவும், விருத்தியும் அதன் கிருஷிக முயற்சியிலேயே பெரும்பான்மையாகத் தங்கியிருந்த உண்மையேயாகவும், நம்தேசத்து ஆங் கில கல்விகற்றோர் தொழில்களுளெல்லாம் விசேஷ மான கமத்தொழிலை அவமதித்து உத்தியோகமொன் றையே நாடித் திரிகின்றனர். கிருஷிக முயற்சியை நன்றாய் விருத்தி செய்தற்கேற்ற நானாவித நவம் நவ மான வழிகள் மேலைத்தேய வாசிகளாற் கைக்கொள் ளப்படுகின்றன. அவைகளைக் குறித்துப் பேசுங் கிருஷிக நூல்களும் அவைகளுக்குத் துணைக்கருவி களாகிய பிற நூல்களும் ஆங்கில பாஷையிற் பரந்து கிடக்கின்றன. ஆதலால் ஆங்கில பாஷையைக் கற் போர் அவைகளையுங் கற்றுக் கமத்தொழிலை வெறுப் புறாது விருப்புற்று விருத்திபண்ணித் தமக்கும் பிறர் க்கும் பயன்படுமாறு ஒழுகவேண்டியது கடனேயாக வும், அதற்கு முற்று மெதிராகக் கமத்தொழிலில் அருவருப்புக்காட்டித் தம் தேசத்துக்கு மிக்க நஷ் டத்தை விளைக்கின்றனர். இப்போதுள்ள முதியோர் களது காலஞ்செல்ல இவ்வித்தியாசாலைத் தோட்டங் களிலே கல்விகற்றுத் தேறும் மாணவர்கள் முதிர்ந்த மனுஷராகுங் காலத்து அவர்கள் மூலமாயேனும் நம் மூர்க் கிருஷிக அபிவிருத்திக்குறைவு நிவாரணமாகு மென்பது நம் நம்பிக்கையேயாம்.

---

## LORD PENTLAND ON CO-OPERATION.

## கவர்னர் லார்ட் பேண்ட்லண்ட் கோவாபரேஷனைப்பற்றி.

சென்னையில் டிஸம்பர் மாஸம் 21 22-ம், தேதி யன்று நடந்த சென்னை ராஜதானி முதல் கோவாபரெட்டிவ் கான்பரென்ஸில் நமது கவர்னர் லார்ட் பெண்ட் லண்ட் இங்கிலீஷில் செய்த ப்ரஸங்கத்தின் மொழி பெயர்ப்பை சுதேச மித்திரனிலிருந்து எடுத்து ப்ர சுரிப்பதோடு அந்த கான்பரென்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்களையும் தருகிறோம். லார்ட் பெண்ட்லண்டி ன்ப்ரஸங்கம் பின்வருமாறு :—

இந்த சபைக்கு நீங்கள் என்னை அழைத்தது எனக் குப் பெருமையாக இருக்கிறது. ஐக்கிய முயற்சி சம்பந்தமாய் முதலாவதாய்க் கூடும் இந்த கான்ப ரென்ஸுக்கே பிரதிநிதிகள் ஏராளமாய் வந்திருப்பது மிகவும் திருப்தியாயிருக்கிறது. சென்னை மாகாணத் தில் மாத்திரமேயல்லாமல் இந்தியா முழுமையும் ஐக் கிய முயற்சியைப் பரவச்செய்யப் பாடுபட்ட ஸர் ப்ரெடெரிக் நிக்கல்ஸன் செய்த வேலையைப்பற்றி

இம்மாகாணம் பெருமைசெய்து கொள்ளத்தகும். ஒற்றுமையால் பலமுண்டாகிறது. ஐக்கிய முயற்சி என்றால் பரஸ்பர உதவி என்றும் ஒரு பொது நோக்கத்துக்காகப் பலர் சேர்ந்துழைத்தல் என்றும் பொருள். ஆகையால் ஐக்கிய முயற்சி பரவவேண்டுமானால் மனுஷிய புத்தியாலும் அனுதாபத்தாலும் அதை எவ்வளவு ஆதரிக்கக் கூடுமோ அவ்வளவும் ஆதரிக்க வேண்டியது அவசியம்.

பற்பல தேசங்களில் ஐக்கிய முயற்சி பற்பல ரூபங்களைப் பெற்றிருக்கிறது. இந்தியாவில் ஐக்கியநாணயச் சங்கங்களை ஸ்தாபிப்பதில் இம்முயற்சி பெரிய வெற்றி அடைந்திருக்கிறது. இம்முயற்சியைத் தொடங்கி சுமார் ஏழு வருஷங்களே முடிந்தும், 1905-6 வருஷமுடிவில் 25 சங்கங்களே ஸ்தாபிக்கப்பட்டிருக்க, இவ்வருஷம் ஜூன்மாத முடிவில் 56,856 மெம்பர்களை உடைய 669 சங்கங்களும் 3சங்க கூட்டங்களும் இருந்தன என்பது மிக திருப்தியான அபிவிருத்தி. தக்கபந்தோபஸ்தின்மேல் சொற்ப வட்டிக்குப் பணம் கிடைக்குமாறு இச்சங்கங்கள் செய்கின்றன. ஐக்கிய நாணயச்சங்கங்களால் இம்மாகாணத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற கடன் தொகைகள் வேறு வழிகளில்வாங்கப்பட்டிருந்தால் மேற்கண்ட சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் வட்டியைக்காட்டிலும் லட்ச ரூபாய் அதிக வட்டி கொடுக்கவேண்டி வருமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

சொல்ப வட்டியின் அசௌகரியம்.—ஆனால் சொல்ப வட்டிக்குப் பணம் கிடைப்பதால் கடன் ஜாஸ்தியாய் விடுகிற அசௌகரியமிருக்கிறது. ஆயினும் நாளடைவில் இந்த அசௌகரியம் மறைந்து போகலாம். ஆகையால் ஐக்கிய முயற்சிக்காக உழைப்பவர்கள் தாங்கள் செட்டாயிருப்பதுடன், செட்டினால் விளையும் நன்மையை விஸ்தாரமாய்ப் பிரசங்கம் செய்யவேண்டும்.

ஐக்கிய நாணயச் சங்கங்களால் விளையக்கூடிய நன்மைகள் இன்னும் விளைந்துவிடவில்லை. பால்யப் பருவமாயிருக்கிற அவைகளை வளரச்செய்வது உங்கள் கடமை.

ஐக்கியமுயற்சியின் அபிவிருத்திக்குச் சாதனங்கள். பிறரால் ஆளப்படாது தாமே ஆள்வதே கூட்டுறவு முயற்சியின் விசேஷமாகையால் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்தவர்களின் புத்திவன்மையையும், கவனத்தையும், நாணயத்தையும் பொருத்ததாகவே அம்முயற்சியின் அபிவிருத்தி இருக்கும். ஒவ்வொரு கிராமச் சங்கமும் தன்னுடைய நிர்வாகத்தை புத்திசாலித் தனமாய் நடத்தி, அயலிலுள்ள சங்கங்களுடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தை நன்குணர்ந்து அவ்வாறு நடந்தால் கூட்டுறவு முயற்சி நிலைபெற்று விருத்தி யடையவே வேண்டும்.

கல்வியின் அவசியம்.—சங்கங்கள் ஒழுங்காய் நடைபெறுகின்றனவா என்று பரிட்சை செய்வதும் கணக்குப் பரிசோதனை செய்வதும் மாத்திரம் போதாது. கூட்டுறவு முயற்சி நன்றாய் நடைபெறுவதற்குக் கல்வி அவசியம். கூட்டுறவு என்ற தத்வம் ஜனசமுகத்தின் புத்தியிலும் அன்பிலும் வேரூன்ற வேண்டும். ஆகையால் கூட்டுறவின் தத்வங்களைக் கிராமத்திலுள்ளவர்கள் நன்றாய் அறிந்து கிராமச் சங்கங்களை நன்றாய் நிர்வாகம் செய்யுமாறு நீங்கள் போதனை செய்யவேண்டும். அவ்வித போதனை செய்வதற்கு நீங்கள் என்ன முயற்சி செய்கிறீர்களென்று புதிதாய் வந்த எனக்குத் தெரியவில்லை. மேற்கண்டவாறு செய்யக் கவர்ன்மெண்ட் முயற்சி எடுக்கவேண்டியது அவசியமா என்று நான் இப்பொழுது ஒன்றும் சொல்லவில்லை. நீங்களே அவ்விஷயத்தில் பிரயாசை எடுத்துக்கொண்டால் கூட்டுறவு முயற்சியில் கவலையுள்ள எல்லா இடங்களிலிருந்தும் உதவி பெறுவீர்களென்று நம்புகிறேன்.

இத்தேசத்தில் கூட்டுறவு முயற்சி அடைந்திருக்கும் வெற்றிக்கு 1912-ம் வருஷத்தில் செய்யப்பட்ட சட்டமே தகுந்த சான்றாகும். ஏனென்றால் கூட்டுறவுதத்வத்தை விசாலமாய்ப் பிரயோகஞ் செய்ய அந்த சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. லேவாதேவி செய்வதற்கும், விவஸாயப்பொருள்களையும் கருவிகளையும் உற்பத்தி செய்யவும் விற்கவும் வாங்கவும், விவஸாயவிதைகளையும் எருக்களையும் சேகரஞ்செய்து கொடுக்கவும், ஆடுமாடுகளை இன்ஷியூர் செய்யவும், இன்னும் அநேக விஷயங்களுக்கும் அந்தச் சட்டம் இடங்கொடுக்கிறது. பொதுவாய் எல்லாப் பொருளாதார முயற்சிகளுக்கும் தொழில் முயற்சிகளுக்கும் அனுகூலமாக அந்தச் சட்டம் இருக்கிறது. ஆகையால் கூட்டுறவு முயற்சியை விஸ்தாரமாய் உபயோகத்துக்குக் கொண்டுவரலாம். அவ்வாறு செய்ய இந்த மாகாணத்தில் வழியிருக்கிறது.

அக்ராஸனாதிபதியாகிய ஸர்ஜான் அட்கின்ஸன் பேசக்கூடியதாயிருக்கையில், நான் விஸ்தாரமாய் இவ்விஷயத்தைச் சொல்ல வேண்டியதில்லை. ஒரு உதாரணம் மாத்திரம் சொல்லுகிறேன். சுத்தமான பருத்தி விரையைக் கிருஷிகர்களுக்குச் சேகரம் செய்து கொடுக்க விவஸாய இலாகா ஆரம்பித்திருக்கிறார்கள். நல்ல விதையை உபயோகிப்பதால் நல்ல பருத்தி விளைந்ததென்று தெரிகிறது. சென்ற வருஷத்தில் 170,000-ராத்தல் நல்லவிதை நான்கு ஜில்லாக்களில் செலவாயிருக்கிறது. இவ்விஷயத்தில் கூட்டுறவு முயற்சி கவனம் செலுத்தலாம். ஒரு கிருஷிகரைக்காட்டிலும் சகாயமாய் கூட்டுறவுச் சங்கம் வாங்கக்கூடும். ஏனென்றால், விதையை ஏராளமாய் வாங்குவதால் வாங்கப்பட்ட இடத்திலிருந்து தேவையான இடத்துக்குக் கொண்டுபோகும் செலவு முதலியன சகாயமாகும்.

விதையே அல்லாமல், உரத்தையும் சகாயமாய்ச் சம்பாதித்துச் செலவுசெய்யக்கூடும். இவைபோன்ற வேலைகளை ஐக்கிய நாணயச் சங்கங்கள் செய்வதென்றால், அவற்றின் பொறுப்பு பெருஞ் சுமையாய் விடுமாகையால், தனிச் சங்கங்கள் ஏற்பட்டு அத்துறைகளில் வேலைசெய்து நன்மையை அடையக்கூடும். விவஸாய அபிவிருத்தியில் கூட்டுறவுச் சங்கங்கள் உழைக்கக் கூடுமென்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஒரு விஷயத்தில் கூட்டுறவால் நன்மை உண்டாக, மற்றொரு விஷயத்திலும் கூட்டுறவை ப்ரயோகம் செய்யத்தானாய்த் தோன்றும். நன்மை உண்டாக உண்டாக முதலும் நம்பிக்கையும் பெருகும். பிற்காலத்தைப்பற்றி நாம் அவசரப்படக்கூடாது. வியாபார முயற்சியும், தொழில் முயற்சியும் ஆழ்ந்த ஆஸ்திவாரத்தை உடையதாய், மெதுவாய்ப் பரவவேண்டும். அம்முயற்சிகள் கூட்டுறவையே அஸ்திவாரமாக உடையதாயிருக்கவேண்டும். கூட்டுறவால் ஜனங்களுடைய பளுக் குறைவதுடன், தொழில் முறைகளில் அவர்கள் பழகித் தங்களுடைய நித்திய வாழ்வில் அதை ஒரு சன்மார்க்கத் தூண்டுதலாய் உணர்வார்கள். இத்தேசத்துக்குக் கூட்டுறவு புதிதுமல்ல. பூர்வீக காலந்தொட்டு நிதிகளென்றும், பஞ்சாயத்துகளென்றும் ஸ்தாபனங்கள் இத்தேசத்தில் இருந்திருக்கின்றன. அல்லாமலும் கிராம பாங்கிகளை நன்றாய் நடத்தக் கற்றுக்கொள்வதால், ஸ்தல சுய ஆட்சியில் பழக்கமுமுண்டாகிறது. அல்லாமலும் கூட்டுறவால் ஜாதிபேதம் வகுப்பு பேதம் முதலிய எண்ணிறந்த பேதங்கள் மறைந்து, எல்லோரும் ஒன்று சேருவதன் நன்மை தானாகவே வெளிப்படுகிறது.

இன்று ஆலோசனை செய்ய நீங்கள் கூடியிருக்கும் விஷயத்தில் உங்களுக்கு ஜெய முண்டாகட்டும். நீங்கள் ஆலோசனை செய்யுமாறு இந்த சபை திறக்கப்பட்டாய் விட்டதென்று சொல்ல எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

---

## RESOLUTIONS OF THE MADRAS CO-OPERATIVE CONFERENCE

## சென்னைராஜதானி ஐக்கிய நாணய கான்பரேன்ஸ் தீர்மானங்கள்.

### I சங்கங்கள் அபிவிருத்தி.

1. இந்த ராஜதானியில் இன்னும் அனேக கிராம நாணயச்சங்கங்கள் வாஸ்வதத்தில் தேவையாய் இருக்கின்றனவென்று இந்த மஹாநாடு (கான்பரென்ஸ்) நம்பி, இந்த எத்தனத்தின் வளர்ச்சியைத் திருப்திகரமானவும் அபாயமில்லாதவுமான வழியில் துரிதப்படுத்தவேண்டியஏற்பாடுகளைச் செய்யும்படி கவர்ன்மெண்டாரைவேண்டிக் கொள்ளுகிறது.

2. இந்த மஹாநாடு கூலி வேலைக்காரர்களுக்கும், கைத்தொழிலாளிகளுக்கும் என்றே ப்ரத்யேகமாய் ஏற்பட்டிருக்கும் உற்பத்திச் சங்கங்கள் மிகவும் நன்மையை விளைவிக்கும் என்று எண்ணினபோதிலும் ஜாதி, மதம், வகுப்பு வித்தியாசங்களை ஆதாரமாய்க் கொண்டு சங்கங்களை அமைப்பது கூட்டுத்தொழிலின் பிரதானமான கொள்கைக்கு விரோதமாய் இருக்கு மாகையால் கூடியமட்டும் விலக்கப்பட வேண்டுமென்று அபிப்ராயப்படுகிறது.

3. ஐக்ய முறையில் உற்பத்திச்சங்கங்களையும் பிரிவினைச் சங்கங்களையும் ஏற்படுத்துவது இந்த இராஜதானியின் கைத்தொழில் அபிவிருத்திக்குச் சாதகமாய் இருக்குமென்று நம்புவதுடன் இவ்விரண்டு அம்சங்களுடன் நாணய விவகாரங்களில் சேர்ப்பது உண்மையான ஐக்யக் கோட்பாடுகளுக்கு விரோதமல்லவென்று இந்தக் கூட்டத்தினர் திண்ணமாய் எண்ணுகிறார்கள்.

4. இந்த ராஜதானியில் பொறுக்கி யெடுக்கப்பட்ட தகுதியான இடங்களில், கீழே குறிப்பிட்ட காரியங்களுக்கு, விசேஷ விவஸாய ஐக்கியச்சங்கங்கள் ஸ்தாபிக்க இது ஏற்ற சமயம் என்று இந்த மஹாநாடு எண்ணுகிறது:—

(i) எரு, விதைகள், கருவிகள், யந்திரங்கள் முதலிய வைகளைச் சேர்ந்து வாங்குதல்.

(ii) லாபகரமாய் விளைவுப்பொருள்களை விற்பனை செய்தல்.

(iii) விவஸாயத்தில் மேலான முறைகளைப் பரவச்செய்தல்,

(iv) புதிய மேலான முறைகளின் பயனை ரூபிப்பதும், போதிப்பதும்.

II. சங்கங்களின் விவகாரம்.

5. சிவில் கோர்ட்டுகள் டிக்ரி தேதிமுதல் ஒப்பந்த வட்டி வீதத்துக்குக்குறைந்த வட்டி தீர்ப்புச் செய்வதாலும், கடன் திருப்பிக்கொடுக்க குறித்த கெடுவை ஒத்திப்போடுவதாலும் சங்கங்களுக்கு உண்டாகும் மிகுந்த கஷ்டத்தை உத்தேசித்து முறைப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஐக்கியச் சங்கங்களைப் பற்றின வரையில் இவ்விஷயங்கள் சம்பந்தமாகத் தற்கால அனுஷ்டானத்தையும் சிவில் ப்ரோஸீஜர் கோடில் அடங்கிய சட்டவிதிகளையும் மாற்ற வேண்டியது அத்யாவசியமென்று உறுதியாய்ச் சொல்லுகிறது.

6. சங்க மெம்பர்களுடைய பொது நன்மை விஷயங்களென்றால் 1912-வருஷம் 11-வது ஆக்ட் 24-வது பிரிவில் குறிக்கப்பட்ட தர்ம விஷயங்கள் தான் என்றும், லிகரலாபத்தில் க்ஷேமநிதிக்குப் பிரித்து வைத்ததுபோக பாக்கியில் நூற்றுக்குப் பத்துக்குமேல் அவ்விஷயங்களில் உபயோகப்படுத்தக்கூடாதுஎன்னும் நிபந்தனைக்கு உட்படும் என்றும், ரிவினியூ போர்டாரவர்கள் மேல் குறித்த சட்டப் பிரிவைக் கொள்ளுவது பிழை என்றும், அச்சட்டத்தின் உட்கருத்துக்கு ஒவ்வாதென்றும், முக்கியமாய்ப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களில் சட்டப்படி லாபத்தில் க்ஷேமநிதிக்குப் போன பாகம்போக மெம்பர்களுக்குப் பாத்தியமுள்ள பாகத்தை உபயோகப்படுத்துவதைப்பற்றி செய்யும் நிர்ப்பந்தம் ஆக்ஷேபணைக்கு உள்படுமென்றும் இந்தக் கூட்டத்தினர் நினைக்கிறார்கள்.

7. பழைய கடன்களை நாளடைவில் கரைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் புதுப்பித்துங் கணக்கில் மட்டும் வரவு வைத்தும் கடன்களைத் தீராமல் செய்தல் ஐக்கிய நாணயம் ஏற்படுத்துவதின் எண்ணங்களுக்கு முழுதும் விரோதமென்றும், ஆகையால் பஞ்சாயத்தார்கள் குறிப்பிட்ட காலங்களில் கடன்களைத் திருப்பி கொடுக்கக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும், கடன்களைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய காரியங்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பது இந்தக் கூட்டத்தின் கருத்து.

8. மெம்பர்கள் வெளியில் வாங்கியிருக்கும் கடன்களினின்று அவர்களை மீட்பதை சங்கங்கள் திட்டமான குறியாக வைத்துக்கொண்டு, மெம்பர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களெல்லாம் உண்டுபண்ண ஒழுங்காயும் பலமாயும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பது இந்த மஹாநாட்டின் அபிப்பிராயம்.

III. கணக்குப் பரிசோதனையும், மேல் விசாரணையும்.

9. பின்வருவன கான்பரென்சின் அபிப்ராயங்கள் :—

(i) கூட்டுத்தொழில் சங்கங்களைப் பரிஷ்காரமாய் மேல் விசாரணைசெய்யும் அதிகாரம் கால அளவில் துணைச்சங்கங்களுக்கும் யூனியன்களுக்கும், கூட்டுச் சங்கங்களுக்கும் பிடரால் பாங்குகளுக்கும் வந்து சேரவேண்டும் ;

(ii) துணைச்சங்கங்கள் சீக்கிரம் ஏற்படுத்தவேண்டும் ;

(iii) சாத்தியமான இடங்களிலெல்லாம் ஜில்லாக் கூட்டுச்சங்கங்கள் அமைக்க வேண்டும் ;

(iv) கூட்டுச் சங்கங்களும் துணைச் சங்கங்களும் உண்டாக உண்டாக சர்க்கார் தணிக்கைசெய்யும் வேலையையும், மேல்விசாரணை செய்யும் வேலையையும் குறைத்துக்கொண்டு, கடைசியில் சோதனைத் தணிக்கை செய்தலும், மொத்தக் கணக்குக் கோடித்தலும், துணைச்சங்கங்கள் உண்டுபண்ணுவதில் கூட்டுச்சங்கங்களுக்கு உதவி செய்வதையும் வைத்துக் கொள்ள வேண்டும் ;

(v) ஜில்லா முழுதும் கூட்டுச் சங்கங்களும் துணைச்சங்கங்களும், ஏற்படும் வரையில் மேல்விசா

ரணை செய்யவேண்டியமட்டும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும்.

10. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கணக்குத் தணிக்கை செய்வதற்காக இப்போது வரி வசூல் செய்யக்கூடா தென்பது இந்த மஹாநாட்டின் அபிப்ராயம்.

## IV. போது.

11. இந்தக் கூட்டத்தார் இந்த ராஜதானியிலுள்ள வித்தியாரம்பப் பள்ளிக்கூடங்களில் ஐக்கியவிஷயம், ஏற்பட்டிருக்கும் பாடங்களில் சேர்க்கப்பட வேண்டுமென்று தீர்மானமாய் எண்ணுகிறார்கள்.

12. சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யவும், சங்கங்களை நடத்தவும் நியமிக்கப்பட்டிருக்கும் பரிசோதகர்கள் முதலிய உத்தியோகஸ்தர்களுக்குக் கூட்டுத் தொழில் முறையைப்பற்றியும், சங்கங்கங்கள் கணக்கு வைத்தலைப்பற்றியும் சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்ள இவர்களுக்குத் தகுந்த பரிக்ஷை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்பது இந்தக் கூட்டத்தவரின் அபிப்பிராயம்.

13. பின்வரும் காரியங்களைச் செய்ய நிர்வாகத்தினரை நியமிக்கவேண்டிய சமயம் இதுதான் என்று இந்த மஹாநாட்டின் தீர்மானம் ;

(i) வருஷா வருஷம் மஹாநாடு கூட்டவேண்டிய ஏற்பாடுகள் செய்தல்.

(ii) தகுந்த இடங்களில் ஜில்லா மஹாநாடுகள் கூட்டுவது.

(iii) இங்கிலீஷிலும், இந்த ராஜதானியில் பேசப்படும் பாஷைகளிலும் ஒரு கூட்டுத்தொழில் வர்த்தமானப் பத்திரிகை போடுவது.

(iv) தங்களுக்கு அப்போதைக்கப்போது கவர்ன்மெண்டாரிடம் வேண்டிய விஷயங்களைத் தெரிவித்துக் கொள்ளுவது.

14. இந்த மஹாடு மாதம் 35 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட்டுத் தொழிற் சங்கங்களுடன் சம்பந்தப்படுவதில் சில அமிசங்களில் ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனைகளை ரத்து செய்தல் யுக்தம் என்று கவர்ன்மெண்டாருக்கு வற்புறுத்திச் சொல்லுகிறது.

15. இந்தியன் டிரஸ்டு பண்டுகளைக் கோவாபரேடிவ் சொசைட்டிகளில் போடும்படி இந்தியன் டிரஸ்டு ஆக்ட் திருத்தப்படவேண்டுமாய் இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

---

## MAKARA SANKRANTHI.

### மகர சங்கிராந்தி.

இந்துசாதனம் என்னும் பத்திரிகையில் ஒரு நிருபர் மகரஸங்க்ராந்தியைப்பற்றி எழுதியதிலிருந்து சில பாகங்களை எடுத்து ப்ரசுரிக்கிறோம்.

மகரமென்பது பன்னிரு இராசிகளுள் ஒன்று ; அதற்குரிய மாதம் தை ; சங்கிராந்தி என்பது மாதப் பிறப்பின் பெயர் என உணர்ந்தறிக. மகர சங்கிராந்தியை நந்தேசத்தவர் தைப் பொங்கல் தினமென்பர். எத்தினத்திலும் இத்தினம் விசேஷ புண்ணியகாலமாகுமென்றும், இம்மகர சங்கிராந்தியிலன்று பரமசிவத்தைப் பூசித்து நேசித்து வழிபடுபவர் யாவரும் நற்கதியைத் தடையின்றி அடைவர் என்றும் நூல்களுஞ் சொல்லும்.

தேவர் தினத்துப் பகற்காலமானது, தைமாதம் முதல் ஆனி முடிவான ஆறுமாதங்களுமாம். இராக்காலமானது, ஆடிமுதலாய் மார்கழி யீறான ஏனைய ஆறுமாதங்களுமாம். இதனூற்றான் மனுஷவருஷமொன்று கொண்டது தேவர்களுக் கொருநாளாயிருக்கின்றது. எனவே, சூரியன் தநுவிற் சஞ்சரிக்குங் காலமாகிய மார்கழிமாதமே, தேவர்களுக்குச் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னதாகிய பிராமிய முகூர்த்தமாகும். இக்காலம் எக்காலத்தினும் மிக்க விசேடமுடையதாம். இந்தக் காலத்தில் ஈசனை வழிபடுபவர் இஷ்ட சித்தியையும் முத்தியையுந் திண்ணிதே அடைவர் என நூல்கள் சொல்லும்.

பூவுலக செல்வத்துக்கு அதிகாரணமாகிய யாகத்திற்குப் பிரதானமான தேவதைகளை விழிக்கச்செய்தாற்போலும் ஆண்மக்களான யாவரையும் தத்தங் காரியங்களை வீரியமாய் ஆரம்பிக்கும்படியாகச் செய்யுங் காலமும் உத்தராயண ஆரம்பகாலமானபடியாலும், மகரசங்கிராந்தி பெரிதும் விசேடமுடையது.

மகரசங்கிராந்தியானது, நம் அரிய ஆரிய சோதிஷ சாஸ்திரத்திற் சொல்லப்பட்டபடி, மேஷம் முதற்

பன்னிரண்டு இராசிகளாகப் பிரிக்கப்பட்ட இராசிச் சக்கரத்தில் பத்தாவது பாகமாகிய மகரமெனும் இராசியின், முதலாவது பாகத்தோடு நாடுங்காற் சூரியன் சம்பந்தப்படுங்காலமாம். அதாவது, பூமியின் புறத்திலிருந்து பார்க்கின்றவர்கட்கு அசுவதி முதலான இருபத்தேழு நட்சத்திரங்களாய் வகுக்கப்பட்ட நட்சத்திர சக்கரத்தில், இருபத்தோராவது நட்சத்திரத்தின் முதற்பாகத்துடன் சூரியனுடைய முதற்பாகஞ் சமரேகையில் இருப்பதாகத் தோன்றக்கூடிய காலமாகுமென்று சோதிஷ சாஸ்திர வித்துவான் ஒருவர் கூறினார்.

இதன்பின் கூறப்படும் விபரத்தாலேயே, மகர சங்கிராந்தி வரலாறு அறியப்படும்: மகரசங்கிரமே சத்தி என்றும், ஓர் சத்தியானவள், தக்ஷிணாயனம் ஆறுமாதமும் மனிதருக்கு மூதேவி ரூபமாகவும், பசுக்களுக்குப் பாயும் வேங்கை ரூபமாகவும் பீடித்துக் கொண்டிருந்தாள் என்றும், அப்பீடையானது பசுபதியாகிய சிவபெருமானுவடய திருவருளால் நிவாரணமாகி, உலகத்திற் சகலருஞ் சௌக்கியமடைந்தமையால், சூரியன் வடபக்கத்திற்றிரும்பும் நாளாகிய தைமாத முதற்றேதி மகர சங்கிராந்தியாகிய உத்தராயண பிரதம புண்ணிய காலத்தில், எல்லாருஞ் சூரியன் இந்திரன் முதலிய தேவர்களைப் பூசித்துப் பாற் பொங்கல் நிவேதனஞ் செய்து, பிதிர் தேவதைகட்குத் திலதர்ப்பணம் புரிந்து, வேதியருக்குப் போதியமட்டுங் கோதானமுதல் தசதானமுங் கொடுக்கவேண்டியது என்றும், ஆடிமாதம் ஆதியாய் மார்கழி மாதாந்தம் வரையும் நாடும், வீடும்முற்றாய் மூதேவி அடைந்திருந்தபடியால், அவற்றைச் சுத்திகரித்து, பழம் பாண்டங்களைக் கழித்துப் புதுப் பாண்டங்களைப் பாவித்து, அவற்றிற் சங்கிராந்திதினம் அமுதிடல் வேண்டும் என்றும், அன்றியும் மூதேவியால் யாவரும் பீடிக்கப்பட்ட அந்த தக்ஷிணாயன காலத்தில் புலிகள் பசுக்களைக்கொன்று, தின்றுக் கொண்டிருந்தபடியால், சர்வவியாபக சிவபிரானானவர் சங்கிரமே சத்தியைவாட்டி, பசுக்களைக்கொண்டு புலிகளை ஓட்டி, அதஞ்செய்து பசுக்களுக்கும், மனுஷருக்குஞ் சௌக்கியத்தைத் தந்தருளிய காரணமாக மறுநாட் காலையில் பசுக்களுக்கு ஸ்நானம் செய்வித்து அலங்காரமிட்டுப் பசுக்களை முன்னே போகுமாறு செய்து, பின்னே அச்சிவபிரானை எழுந்தருளச் செய்தே, யாவரும் அவரைப் பக்தியாய்ப் பூசித்து, வழிபட்டு, வழுவாது முக்தி, சித்தியை எய்தி, உய்ய வேண்டியது என்றும், நூல்கள் கூறும். மகரசங்கிராந்திக்கு முன்னதாகிய தினமே, போகிப்பண்டிகையாம். போகிபண்டிகையாவது, ஒவ்வொருவருடத்திலும், நிகழும் மார்கழி மாதாந்தத்திலே, மனிதர் உலகத்தின் பல விளைவுகளை அடைந்துய்யும்படி மழையைப் பெய்யச் செய்யுமாறு தேவேந்திரனைப் பத்தியாய்த் தியானித்து, பழய பாண்டங்களையும், கந்தையாதி ஆடைகளையும், பீடை நிவாரணகாரணம் நோக்கி, நீக்கி, எல்லாரும் நல்லாய் அப்பியங்க ஸ்நானஞ்செய்து, சித்த சுத்தபத்தியுடன் ஒழுகிப்புதிய பாண்டங்களிலே பொங்கலிட்டு, அப்பதியை முப்பொறியினாலும் பூசித்து, வழிபடும் தினமாமென நூல்கள் சொல்லும். (போகி-இந்திரன்.) வருடந்தோறும் நிகழுந் தைமாத முதல் தேதியாகிய மகரசங்கிராந்தி உத்தராயண பிரதம புண்ணியகாலத்திலே, சர்வாத்மாக்களுக்கும் அநுக்கிரகிப்பவராகிய அநாதி பரமசிவத்தின் திருவருளை வேண்டி அவருக்கும், பயிர்களின் உற்பத்தியை வேண்டிச் சூரியனுக்கும், அதனடுத்துவரு மிரண்டாந் தேதியாகிய மாட்டுப்பொங்கற் றினத்திலே, பசுமாடுகளின் விருத்தியைவேண்டிச் சர்வாத்மாக்களையுங் காத்தருளுபவராகிய கோபால கிருஷ்ணபகவானுக்கும், மார்கழி மாதாந்த நாளான போகி பண்டிகையிலே, பயிர்களைச் செழிப்போடு வளருமாறு மழையை வேண்டித்தேவேந்திரனுக்கும், முறையே பொங்கல், பூசைமுதலிய பல வழிபாடுகள் புரிந்தபின்னரே, மனுஷர் யாவரும் புதிதுண்ணலும், தானியங்களைக் கொய்து சேகரித்தலும் முறைமையாகுமென நூல்களுங் கூறும்.

## REVIEW OF THE PRESS.
## பத்ரிகை ஆராய்ச்சி.

### THE PROPOSED TAMIL DICTIONARY.
### புதிய தமிழ் அகராதி.

சென்ற மாஸத்தில் சென்னை யூனிவர்ஸிட்டியார் ப்ரசுரம் செய்ய உத்தேசித்திருக்கும் அகராதியைப் பற்றி ஒரு குறிப்பு எழுதியிருந்தோம்.

அகராதியைத் தயார் செய்து முடிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டிக்கு மதுரைப்பாதிரி ரெவரண்ட் ஜே. எஸ். சாண்ட்லர் சேர்மன் என்றும், ரெவரண்ட் ஏ. வி. கிலேட்டன், ராவ் பகதூர் எம். ரெங்காச்சாரியார், ராவ் ஸாகிப் டி. ராம க்ருஷ்ணபிள்ளை, இவர்கள் மூவரும் மெம்பர்க ளென்றும், இவர்கள் நால்வரில் ரெவரண்ட் ஜே. எஸ். சாண்ட்லர் தென்னிந்தியாப் பாதிரிமார்களாலும், ரெவரண்ட் ஏ. வி. கிலேட்டன், விலோன் பாதிரிமார்களாலும், ராவ்பகதூர் எம். ரெங்காச்சாரியார் சென்னைக் கவர்ன்மெண்டாலும், ராவ்ஸாகிப் டி. ராம கிருஷ்ண பிள்ளை சென்னை யூனிவர்ஸிடியாராலும் நியமிக்கப்பட்டிருக்கிறார் களென்றும், ஏற்கனவே 5-வது மெம்பராய் மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருந்த மிஸ்டர். பி. பாண்டித் துரைத் தேவர் காலஞ்சென்றுவிட்டமையால் அந்தக் காலிஸ்தானத்தை யூனிவர்ஸிடியார் நிரப்புவார்களென்றும் கவர்ன்மெண்ட் உத்தரவில் சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழில் புதிய அகராதி யொன்றைத் தயார்செய்து ப்ரசுரிக்க வேண்டுமென்ற ப்ரேரணை இன்ன விடத்திலிருந்து புறப்பட்டதென்று தெரியும்படி அந்த உத்தரவில் வெளிப்படையாய் ஒன்றுஞ் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆனால் டாக்டர் சாண்ட்லர் 1911-ம் வருஷம் அக்டோபர் 11-ல் எழுதிய கடிதத்திலும் அதனில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கும் கடிதங்களிலும் அகராதி விஷயமாய் இன்ன விதமாய் வேலை நடத்தப்பட வேண்டுமென்று அவருடைய கமிட்டியால் செய்யப்பட்ட ப்ரேரணைகளடங்கிய விவரமிருக்கிறதென்று கவர்ன்மெண் உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கிறபடியால் ப்ரஸ்தாப அகராதி ஸம்பந்தமாய் டாக்டர் சாண்ட்லர் ஏதோ சில ப்ரேரணைகள் செய்திருக்கவேண்டுமென்று சுதேச மித்திரன் பத்ரிகை ஊகிக்கிறது. கவர்ன்மெண்ட் உத்தரவு இவ்வளவு தெளிவாயிருக்க, மெயில் பத்ரிகை யூனிவர்ஸிடியார் வெகுநாளாய் ஒரு அகராதி ப்ரசுரிக்க முயற்சி செய்துகொண்டிருந்தார்களென்றும், அவர்கள் காலஞ்சென்றுவிட்ட டாக்டர் போப் அறைகுறையாயெழுதி வைத்து விட்டுப்போன அகராதியைக்கூட சில வருஷங்களுக்கு முன்னே தருவித்துகொண்டார்களென்றும் சொல்லுகிறபடியால் கவர்ன்மெண்டார் அதையறிந்தே அப்பத்ரிகை சொல்லுகிறபடி யூனிவர்ஸிடியார் மூலமாக ரெவரண்ட் டாக்டர் சாண்ட்லரின் ப்ரேரணைகளை யனுஸரித்து ஒர் அகராதி தயார் செய்யப்போகிறார்களென்று காண்கிறது என்பதாகவும் சொல்லப்படுகிறது.

இது விஷயமாய் சில பத்ரிகைகள் தங்களுடைய அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கின்றன. அவற்றை யிங்கு குறிப்பிடுகிறோம்.

சுதேசமித்திரன் பத்ரிகை "இப்போதைய கமிட்டி ப்ரெஸிடெண்டும், மெம்பர்களும், தமிழில் ஆழ்ந்த படிப்புள்ளவர்களாக மாட்டார்களாகையால், காலஞ்சென்றுவிட்ட மிஸ்டர் பாண்டித்துரைத் தேவரின் ஸ்தானத்துக்கு சென்னை ப்ரெஸிடென்ஸிக் காலேஜ் தமிழ்ப் போதகர் மகா மகோபாத்யாய ஸ்வாமி நாதய்யர் அவர்களை யூனிவர்ஸிடியார் நியமிக்க வேண்டும். லட்சம் ரூபாய் செலவுசெய்து கவர்ன்மெண்டார் வெளியிடப்போகிற அகராதிக் கமிட்டியில் அவர் ஒரு மெம்பரில்லையானால் அவ்வகராதிக்கு எவ்வித கௌரவமு மேற்படமாட்டாது" என்று எழுதுகிறது.

மேலும், "கவர்ன்மெண்ட் பதிப்பிக்கப் போகிற அகராதி கடைத்தெரு அகராதிகளைப் போலவேயே யிருக்கக்கூடாது. தமிழறிந்த நிபுணர்கள் சேர்ந்து இயற்றிய புஸ்தகமாகுமென்று எல்லோரும் மதிக்கும்படியான புஸ்தகமாய் அஃதிருத்தல் வேண்டும். ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டால் அது தமிழ் பாஷைக்குரிய வார்த்தை, அல்லது பிறபாஷைகளிலிருந்து வந்த சொல், பிற பாஷையிலிருந்து வந்த சொல்லானால், இன்ன பாஷையிலிருந்துவந்த சொல், என்று குறிக்கப்படவேண்டும். அதன் பிரயோகங்கள் மேற் கோள்களுடன் குறிப்பிடப்படவேண்டும். பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லாயிருந்தால்,

அர்த்தபேதங்கள் எடுத்துச் சால்லப்பட்டிருக்கவேண்டும். இக்காலத்தில் வழங்காச் சொல்லாயிருந்தால் அதனைக் குறிப்பிட்டு முற்காலத்தில் அதற்கு இன்ன பொருளென்று தெரிவிக்கவேண்டும்." இந்த மாதிரியான அகராதியை இயற்ற 5 வருஷகாலமும், லக்ஷ ரூபாயும் போதாது, அதிக காலமும், செலவும் ஆகுமென்றாலும் அகராதி சலாக்யமானதாயிருக்கவேண்டுமாதலால் கவர்ன்மெண்டார் பொருளுதவி செய்யப்பின் வாங்கக்கூடாது என்கிறது.

இந்த அகராதியைத் தயார் செய்வதற்கு யார் தகுதியானவர் என்பதைப்பற்றி "லோகோபகாரி" எழுதுகிறது.

"மேற்குறித்துள்ள அகராதியைச் செய்வதற்குத் தமிழில் தர்க்க இலக்கண இலக்கிய சமய நூற்களின் பயிற்சி மிகுதியுமுடையவரே தகுந்தவர்களாவார். அவ்விதம் பயிற்சி பெற்றிராதவர்களை அகராதிவேலை செய்வதில் அமர்த்தியிருப்பது விந்தையாகவே யிருக்கின்றது. தர்க்க நூற்பயிற்சியில்லாதவர்க்கு, இலக்கண நூலும், இலக்கண நூற்பயிற்சியில்லாதவர்க்கு இலக்கிய நூல்களின் ஸ்வரூபமும். நன்றாக விளங்குவதில்லை யாதலின், தர்க்க இலக்கண இலக்கிய நூலுணர்ச்சியில்லாதவர் எவ்விதம் வார்த்தைகளின் ஸ்வரூபங்களை யறிந்து அகராதிவேலை செய்தல் கூடும்? அகராதி வேலைசெய்ய ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டியில் பாண்டித்துரைத்தேவரும் ஒருவராக விருந்தார். அவர் காலஞ் சென்றதால் அவருக்குப் பதிலாகத் தர்க்க இலக்கண இலக்கிய சமய நூற்களிற் பெரிதும் பயற்சி பெற்றிருக்கும் ஒருவரை நியமிப்பது தகுதியாம். அவ்விதமின்றி இலக்கணத்தையேனும் வரலாற்று முறைமையிற் செவ்வையாகக் கற்றிராத ஒருவரை நியமிப்பது பொருந்தாத காரியமேயாகும்."

இன்னம் இதைப்பற்றி எழுதிப்போகையில் "கலாசாலைகளிலும், காலேஜுகளிலும் தமிழ்ப்பாஷையை ஓங்க வொட்டாது செய்திருக்கும் யூனிவர்சிட்டியார் தமிழ்ப்பாஷையில் ஒரகராதி செய்ய வுத்தேசித்தது விந்தையாகவே யிருக்கிறது" என்றும் சொல்லுகிறது.

வைசிய மித்திரன் என்னும் பத்ரிகையில் ஒரு நிருபர் இது விஷயமாய் யோசனைகள் சொல்லுகிறார்.

1. "நன்கு கற்று ஆராய்ந்து அறிந்த நம் தமிழ் வல்லோர்கள் தத்தமக்கு எட்டியவரை யுள்ள தமிழ் மொழிகளையெல்லாம் திரட்டி தத்தம் விசேஷ அபிப்பிராயங்களுடன் இந்தக் கமிட்டியாருக்கு அனுப்பிக்கொண்டுவரவேண்டியதோடு கமிட்டியாரால் ஏதாவது ப்ரச்னை கேட்கப்பட்டால் தகுந்த ஸமாதானம் கால தாமதமன்றி வரைந்து விடுத்தல் ஓர் கடமையாகும்.

2. இந்தக்கமிட்டியில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழறிந்த வித்வான்களில் ஒருவரைத் தெரிந்தெடுத்திருக்க வேண்டியது ஓர் அவசியமுமாகும்.

3. இந்த அகராதியில் ஒரு எழுத்து பேதப்பட்டாலும் அப்பிழைப்பட்ட சொல்லின் அர்த்தம் அனர்த்தமாயும் அர்த்தமின்மையாயும் வந்து முடியும். ஆகவே இந்நூலில் அட்சரசோர மென்பது கனவிலும் நாடாதபடி இனிது முடிப்பதில் கமிட்டியார் அதிக கவனம் செலுத்த வேண்டும்."

திராவிடாபிமானி என்னும் பத்ரிகை ஆங்கில பத ப்ரயோகத்தைப்பற்றிவிஸ்தாரமாய் எழுதியிருக்கிறது.

"தற்போது அநேக ஆங்கில பதங்கள் வழக்கத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக காங்க்ரஸ், கவர்ன்மெண்ட், ரெயில், ஸ்லேட், பென்ஸல், இன்ஸ்பெக்டர், ஸூப்ரின்டெண்ட், போலீஸ், கவர்னர், ஸ்கூல், போஸ்ட், ஆபீஸ், முதலிய பதங்களுக்கு அர்த்தத்துடனும் அகராதியில் காணப்படவேண்டியதுடன் வழக்கத்திற்கு வந்துவிட்ட ஆங்கில தெலுங்கு பதங்களும் மற்றப் பாஷை பதங்களும், சேர்க்கப்படவேண்டும். பிறகு தமிழில் இனி பேசவேண்டியதாயும் இன்றியமையாததாயுமுள்ள 'புராக்ரஸி' 'நாஷனலிஷ்டு' 'டெஸ்பாச்' முதலிய பதங்களுக்கு சமயோசிதமான மறு பதங்களோ அல்ல அந்தப் பதங்களையே உபயோகித்து அவற்றின் விவரமோ தெரிவித்து விளக்கப்பட்டிருக்கவேண்டும்."

மேலே குறிப்பிட்ட பத்ரிகைகள் சொல்லும் அபிப்ராயங்களை நாம் பெரும்பாலும் அங்கீகரிக்கிறோம்.

இந்த அகராதியில் பிறபாஷைகளிலிருந்து வந்த சொற்களைச் சேர்க்கிறதா.? சேர்ப்பதானால் அந்த வார்த்தைகளின் ரூபம் என்ன என்பதை நிச்சயிக்க வேண்டும். உதாரணமாக, Hearing (ஹியரிங், ஈரங்கி) Return (ரிட்டரன், ரெட்டணம் பண்ணுகிறது) Bank (பாங்கி, பாங்க்), Magistrate (மாஜிஸ்ட்ரேட், மேஸட்ரிட்). பிழையான வார்த்தைகள் இவை எனவும், அவை ஏன் பிழை என்பதற்குக் காரணமும், எவ்வளவுமட்டில் மரூஉ மொழிகளை பாஷையில் சேர்க்கலாமென்பதும் நிர்ணயிக்கவேண்டும் சிலகாலத்துக்கு முன்னால் யூனிவர்ஸிட்டியார் தமிழ் வ்யாஸம் எழுதும் முறையை நிர்ணயம் செய்தபோது அங்கீகரித்த தீர்மானங்களை அகராதி கமிட்டியார் அவர்கள் எழுதப்போகும் அகராதியில் அனுஷ்டிப்பார்களென்று நம்புகிறோம்.

# BOYS' SECTION.

## பையன்கள் பகுதி.

### Members of Old Royal Families.

இந்தியப் பூர்வீக ராஜஸந்ததியார்கள்.—பர்மாவை அரசாண்டுவந்த தீபா அரசனின் ராணிகளுக்கு ஸகியாயிருந்த பர்மிய ஸ்த்ரீ தற்போது மாந்தலேயில் ஒரு கடைவைத்து ஜீவனஞ் செய்துவருகிறாள். இந்தியாவிலோ, அத்தகைய நிலைமையை யடைந்தவர்கள் அநேகரைக்காணலாம். டெல்லியில் வீற்றிருந்து அரசுபுரிந்த கடைசி அரசனுடைய பேரன் ஒருவர், பம்பாயில் சிறு வ்யாபாரச்சாலை யொன்று திறந்து, தாம் நடத்தும் தொழிலைப்பற்றிப் பின்வருமாறு விளம்பரம் செய்திருக்கிறார்:—"கைக்கடியாரம், பெரிய கடியாரம், ஸங்கீதவாத்யம், ஹார்மோனியம், பியானோ, பொனோக்ராப் முதலியவைகளை ஸகாயமாயும், த்ருப்திகரமாயும், பழுதுபார்த்துக்கொடுக்கிறோம். வேலை கொடுக்கும் எந்த ப்ரபுக்களுடைய வீட்டிற்காவது பங்களாவிற்காவது வந்து வேலையைப் பெற்றுக்கொள்ள ஸந்தோஷமுள்ளவர்களாயிருக்கிறோம்" என்று விளம்பரம் போட்டிக்கிறாராம்!

### Who is Robinson Crusoe ?

ராபின்ஸன் க்ரூஸோ யார்?—"டானியல் டீபோ என்பவரால் எழுதப்பட்ட ராபின்ஸன் க்ரூஸோ என்னும் யாத்ரிகரது சரித்ரத்தைப் படிக்காத மாணவர்களில்லை யென்பது எமதபிப்பிராயம். இப்போது நமக்குக் கிடைத்துள்ள ஸமாசாரத்தால், ராபின்ஸன் க்ரூஸோ என்பவர் ராபர்ட் நாக்ஸ் என்பவராயிருக்க வேண்டுமென்றும், இவர் கப்பல் உடைபட்டு திட்டேறிய தீவு சிலோன் என்றும் தெரிகிறது" என்று ஒரு பத்ரிகை கூறுகிறது.

இது உண்மையானால் அவர் (ராபின்ஸன் க்ரூஸோ என்னும் பெயரால் அழைக்கப்படும் யாத்ரிகர்) லங்கைக்கு வெகு ஸமீபத்திலுள்ள ஒரு சிறு தீவில் கரையேறியிருக்கவேண்டும். அவர் கண்ணில் நாகரீகம் வாய்ந்த ஒரு மனிதராவது அகப்படாமலிருந்தது ஆச்சரியமே. மேலும் நாகரீகமில்லாத நரமாம்ஸ பக்ஷணிகள் இந்தியாவிலாவது, லங்கையிலாவது இருந்தார்கள் என்று சொல்வது கொஞ்சமேனும் பொருந்தாததாகும். வேறு என்ன ஆதாரத்துடன் இந்தவதந்தி ஏற்பட்டதோ ?

### The League of the Helping Hand.

கைகொடுத்து உதவும் ஸங்கம்.—மிஸ்டர் எப். டி. ப்ரூக்ஸ் என்ற ஓர் ஐரோப்பியர் அநேக வருஷங்களாய் அடையாற்றில் வஸித்து வருகிறார். ஸம்ஸ்க்ருத பாஷையை நன்றாய்க் கற்று வேதாந்த நூல்களில் மிகத் தேர்ச்சிபெற்றவர். பகவத்கீதையை ஆங்கிலசெய்யுள் நடையில் மொழிபெயர்த்திருக்கிறார். தியஸாபிகல் ஸொஸைடியைச் சேர்ந்தவராயிருந்தும், சிறிது காலமாய் அதிலிருந்து பிரிந்து தனியே வேலை செய்து வருகிறார். ஐரோப்பியரைப்போல் உடை தரிக்காமல் நம்மவர்களைப்போல் அரையில் வேஷ்டி கட்டிக்கொண்டு மேலுக்கு உத்தரியம் போட்டுக் கொண்டிருக்கிறார். ஹிந்துக்களைப்போல் சாக பதார்த்தங்களையே ஆகாரமாக ஸாப்பிடுகிறவர். மிகக் கீர்த்திபெற்ற குழந்தைகளின் பத்ரிகையின் ஆசிரியரால் உலகத்தின் நன்மையை நாடி இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற லீக் ஆப் தி ஹெல்பிங் ஹாண்டு என்று சொல்லப்படும் கைகொடுத்து உதவும் ஸங்கம் என்றதற்குக் கிளைகளாய் அநேக ஸங்கங்களை இந்தியாமுழுமையும் அவர் ஸ்தாபித்து வருகிறார். இந்த ஸங்கத்தில் சிறுவர்களே சேரலாம். சிறுவர்கள் பிறருக்கு உதவிசெய்வதே அந்த ஸங்கத்தின் நோக்கம். அந்த ஸங்கங்களின் கிளைகள் அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஸங்கங்களினால் ரொம்ப நன்மையுண்டென்று தெரிகிறது.

### Good Advice.

நற்போதம்.

ஞமனையும்வெல்லும் சமநிலை கைக்கொள்,
ஞாயந்தவிர்ந்து தீயவைசெய்யேல்,
ஞிமிர்மலர்த்தேன் போலமிர்தமாய் மொழி,
நீரகமின்றிய வூரகத்திரேல்,
நுதலுக்கிட்டு வுதரத்திற்கிடு,
நூல்பலகற்று மேல்வழியறி,
ஞெலுவனிடத்தில் வலிமைகள் பேசேல்,
ஞேயம்விட்டாலும் ஞாயம்விடாதே,
ஞையனக்கெஞ்சுஞ் செய்கையையொழி,
ஞொள்கித்திரியுங் கொள்கை கைக்கொள்ளேல்,
நோக்கமறிந்து யார்க்கு முதவு.

ரஞ்சித போதினியில் வே. முத்தனசாரி,

### A Sepoy that Escaped from Prison.

சிறையிலிருந்து தப்பிய சிப்பாய்.—கிரிஞகின் என்னுமிடத்தில் துஷ்டத்தனமாய் நடக்கும் சிப்பாய் களுக்குத் தனிச்சிறையுண்டு. இச்சிறையிலுள்ள சிப் பாய்களில் ஒருவன் சில தினங்களுக்கு முன் தந்திர மாய்த் தப்பி யோடிவிட்டானும். இவன் தப்பியோ டிய விதமாவது:—இச்சிறைக் கைதிகள் விறகு கட் டைகளை வண்டிகளில் அடுக்கவேண்டிய ஸந்தர்ப்பங் கள் சிற்சில ஸமயங்களில் நேரும். அந்த ஸந்தர்ப்பத் தில் ஒருநாள் இச் சிப்பாய் தன் ஸ்நேகிதர்களது தூண்டுதலின்பேரில் ஒரு சாக்குக்குள் தான் ஒளிந்து கொண்டு விறகு வண்டியில் உட்கார்ந்தான். இவ னுடைய ஸ்நேகிதர்கள் இவன்மேல் கொஞ்சம் விற கையும், வண்டியின் முன்பாகத்திலும் பின் பாகத்தி லும் நிரம்ப விறகையும், அடுக்கிவிட்டார்கள். பார்ப் போருக்கு இவன் உள்ளிருப்பது தெரியாமலு மிருந் தது. வண்டி ஜெயிலைவிட்டு வெளியே வந்ததும் சற்று நேரத்திற்கெல்லாம் சாக்கைக் கிழித்துக் கொண்டு வெளியிற் குதித்து ஓடிவிட்டான்.

### Young Rajputs Association.

ரஜபுத்ர வாலிபர்களின் ஸங்கம்.—சென்னையி லுள்ள ரஜபுத்ர வாலிபர்கள் ஸங்கத்தின் முதலாவது வருஷோத்ஸவம் சென்ற டிஸம்பர்மீ 22-ந்தேதி யன்று சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள எலிமெண்டரி பள்ளிக்கூடக் கட்டிடத்தில் கொண்டாடப்பட்டது. அப்போது அக்ராஸனம் வகித்த ராய்பகதூர் டாக் டர் ஜனார்தனலிங்காரு, ரஜபுத்ரர்கள் தங்களுடைய ஜனஸமூகம் நன்னிலைமைக்கு வரும் பொருட்டு, உண்மையான நேசத்துடன், மனஸாலும் காயத்தா லும் உழைத்து தங்களுடைய முன்னோர்களைப் பின் பற்றி நடக்க வேண்டுமென்றும், அதுவே அவர்களு டைய கடமையாகுமென்றும், அங்கு வந்திருந்த அனை வர்மனஸிலும் பதியும்படி வற்புறுத்திக் கூறினர்.

## LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

### Lady Companions.

தோழிமார்கள்.—மைஸூர் யுவராஜா தமதுமனை விக்கு தோழிமார்களாயிருக்கும்படி உயர்ந்த அந்த ஸ்துள்ள இரண்டு பார்ஸி ஸ்த்ரீகளைத் தெரிந் தெடுத்திருக்கிறார். அவர்களிருவரும் மைஸூர் வந்து சேர்ந்துவிட்டார்கள். அவர்களில் ஒரு மாது ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் பேத்திப்பெண் என்று தெரிகிறது. இந்த இரண்டு பார்ஸி ஸ்த்ரீகளும் ஐரோப்பா கண்டத்தில் 20 வருஷம் போல வாஸஞ் செய்தவர்களென்றும், ஸகல அம்சங்களிலும் நாகரீ கம் மேலிட்டவர்களென்றும், சொல்லப்படுகிறது.

### A Servian Girl Soldier.

போர்செய்யும் ஒரு ஸெர்வியப் பெண்.— ஸோபியோவினேவிச் என்னும் ஒரு ஸெர்விய இள ம்பெண் ராணுவ உடைதரித்துப் போர்முகத்தில் நின்று துருக்கியருடன் போர்செய்து வருகிறாள். இவளுக்கு வயது இன்னும் இருபதாகவில்லை. இவள் போர் முடிந்த பிறகு ஒரு யுத்த வீரனை கல்யாணஞ் செய்துகொள்ளுவே னென்று கூறுகி றாள். இவள் விரும்பிய புருஷனும் இவளிருக்கும் சேனையிலேயே இருக்கிறானும். இவள் தன் தகப் பன் இறக்குந் தருணத்தில் தனக்குக் கூறிய உறுதி மொழியைக் காப்பாற்ற இவ்விதம் ராணுவ உடை தரித்துப் போர் செய்கிறாளாம்.

### The Social Conference.

ஆசாரத் திருத்தக் கான்பரென்ஸ். —பங்கிப்பூரில் சென்ற டிஸம்பர்மாஸம் 29ம் தேதி நடந்த ஆசார சீர் திருத்த கான்பரென்ஸில் குறிப்பிட்ட ஒரு வய ஸுக்கு முன் விவாகம் செய்யக்கூடாதென்றும், தாழ்ந்த வகுப்பாரை உயர்த்த வேண்டுமென்றும், அயல் தேசங்களுக்குப் போய்த் திரும்பி வந்தவர்களை ஹிந்து ஸமூகத்தில் மீளச் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்றும், ஸ்த்ரீகள் திரையிட்டுக் கொண்டு வாழுங் கடுமையைக் குறைக்கவேண்டுமென்றும், உள் பிரிவு களுக்குள் விவாகஞ்செய்ய வேண்டுமென்றும், ஒரு புருஷன் ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்த்ரீகளை விவாகம் செய்துகொள்வதையும், விசேஷ வயஸு தாரதம் யமுள்ள விவாகங்களையும், ஸதிர்க் கச்சேரிகளையும், குடியையும், வரதட்சிணையையும், விசேஷ காலங்க ளில் வீண் செலவு செய்து அழிப்பதையும், தடுக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. வயஸுவராத பெண்களின் யாதுகாப்புக்காக மிஸ்டர்

தாதாபாய் கொண்டுவந்திருக்கிற மசோதாவை முற்றிலும் ஆதரிப்பதாகவும் தீர்மானஞ் செய்யப்பட்டது.

**Ladies' Conference at Bankipore**

**பங்கிப்பூர்ல் ஸ்த்ரீகளின் கான்பரேன்ஸ்.**—காங்க்ரெஸை யொட்டி நடக்கும் பல கான்பரென்ஸ்களில் ஸ்த்ரீகளின் கான்பரென்ஸுமொன்று. இந்தத் தடவை பங்கிப்பூரில் ஸுமார் 100 ஸ்த்ரீகள் சேர்ந்து ஸபை கூடினார்கள். இந்த ஸபைக்கு மிஸ்டர் மதோல்காரின் ஸம்ஸாரம் தலைவராயிருந்தார். மிஸ்டர் மதோல்காரின்ஸம்ஸாரம் ஒரு மஹராஷ்ட்ரஸ்த்ரீ. பல ஜாதி ஹிந்து ஸ்த்ரீகளில் மஹராஷ்ட்ர ஸ்த்ரீகள் தன் மதிப்பும் தைரியமும் கொண்டவர்கள். வடஇந்தியா ஸ்த்ரீகளைப் போல படுதாவில் மறைந்து வஸிக்கிற வழக்கம் அவர்களுக்குள் இல்லை.

மிஸ்டர் மதோல்காரின் ஸம்ஸாரம் பால விவாகத்தைத் தடுக்க வேண்டுமென்றும், ஸ்த்ரீகளுக்கு உயர்ந்த கல்வி கொடுக்க வேண்டுமென்றும், இந்த வழிகளில் ஹிந்துக்கள் திருந்தும்படியாக ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு ஸபை இருக்கவேண்டுமென்றும் சொன்னார். பால விவாகமும் ஸ்த்ரீகளின் அறியாமையும் நீக்கப்பட்டுப் போனால், ஹிந்துக்களின் முன்னேற்றம் நிச்சயமென்று சொல்லலாம். பால விவாகத்தால் ஹிந்துக்களின் மனோவலிவும் சரீரவலிவும் குறைந்து கொண்டு வருகின்றன. ஸ்த்ரீகளின் அறியாமையால் ஸமூகத்தின் முன்னேற்றம் தடைப்பட்டு வருகிறது.

**Ladies' Recreation Club.**

**ஸ்த்ரீகளின் உல்லாஸ ஸங்கம்.**—இந்தக் க்ளப்பு (ஸங்கம்) 1911-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் மைலாப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது 140-மெம்பர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது லேடி பெண்ட்லண்டு ப்ரஸிடெண்டாக இருக்கிறார். மூன்று இந்திய ஸ்திரீகளும், மூன்று ஐரோப்பிய ஸ்திரீகளும் அதற்கு வைஸ் ப்ரஸிடெண்டுகள். சென்ற டிஸம்பர் மாஸம் 17-தேதியன்று இந்த க்ளப்பின் மெம்பர்கள் கூடி அதன் வருஷாந்தர உத்ஸவத்தைக் கொண்டாடினார்கள். அநேக பெரிய மனிதர் வீட்டு ஸ்த்ரீகள் வந்திருந்தார்கள். அந்த ஸமயம் லேடி பெண்ட்லண்ட் அக்ராஸனம் வகித்தார். லேடி பெண்ட்லண்டுக்கு ஒரு நல்வரவு பத்ரம் வாசிக்கப்பட்டது.

அப்பொழுது லேடி பெண்ட்லண்ட் "இந்த க்ளப்பைப்பற்றி நான் சென்னைக்கு வருவதற்கு முந்தியே லேடி கார்மைகேல் எனக்கு எழுத்து மூலமாய் அறிவித்திருக்கிறார். இந்த க்ளப்பில் நடைபெறும் வேலை முதலியவைகளைக் கண்டும் கேட்டும் மிக த்ருப்தி யடைந்தேன். இது நாளுக்கு நாள் வ்ருத்தி யடையவேண்டும் என்பது என் கோரிக்கை" என்று சொன்னார்.

**Varasulka.**

**வரசுல்கம்.**—ஸமீபத்தில் திருவாதியில் நடந்த பண்டித பரிஷத்தில் மாப்பிள்ளைக்குப் பெண் வீட்டுக்காரர் பணம் கொடுப்பதைப்பற்றி விவாதம் நடந்தது. மாப்பிள்ளைக்குப் பணம் கொடுக்கும் வழக்கம் கெட்டது என்று பெரும்பாலோர் அபிப்ராயம் கொடுத்தார்கள். சிலர் இதற்கு ஸாதகமாயும் பேசினார்கள்.

கன்னிகையை தானஞ் செய்யும்பொழுது தட்சணை கொடுக்க வேண்டியது அவச்யம் என்றும், தட்சணை இல்லாத தானம் ப்ரயோஜனப் படாது என்றும், வஸ்திரதானம், கோதானம், திலாதானம் முதலியவைகளுக்கே தட்சணை வைத்துக் கொடுக்கும்பொழுது, சாகும் வரையிலும் பெண்ணைக் காப்பாற்றவேண்டி யிருக்கிறபடியால், கன்னிகாதான காலத்தில் தட்சணை கொடுக்கவேண்டியது அவச்யம் என்றும், ஆனால் அதிகப் பணம் கொடுக்கும் வழக்கத்தை ஸ்ரீமான்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து விட்டார்கள், என்றும், அவர்கள் தான் இந்த வழக்கத்தை நீக்கவேண்டும் என்றும் ஒரு பண்டிதர் சொன்னார்.

இவ்விதம் வரதட்சணை கொடுப்பதில் பல குடும்பங்கள் ரணபாதைப்பட்டு அழிந்து போகின்றனவென்றும், பங்காளத்தில் சிறுவர்கள் வரதட்சணை வாங்காமலே விவாகம் செய்து கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள் என்றும், இங்குள்ள சிறுவர்களும் அந்தமாதிரி தீர்மானஞ் செய்து கொள்ளவேண்டியது அவச்யமென்றும், அதனால் ஜனஸமூகங்களுக்கு க்ஷேமம் உண்டாகும் என்றும், பண்டித அப்பா தீட்சதரும் புதுக்கோட்டை ராமசாஸ்த்ரீகளும் பேசினார்கள்.

# AGRICULTURE.
## விவஸாயம்.

### Paddy Yield.

நெல் மாஸூல்.—வயல்களில் விதையைப் பரவவலாய்த் தெளிக்காமல், நாற்றுவிட்டு நாற்றுகளைப் பிடுங்கி நடுவதால் மாத்ரம், நெல்லின் மாஸூல் இரண்டு மடங்குக்கு அதிகரிக்கிறதென்று ஒரு விவஸாயப் பத்ரிகை சொல்லுகிறது. ஸரியான விதைகளைப் பொருக்கிப் பயிர்செய்தால் இன்னம் அரை மடங்கு மாஸூல் அதிகமாகக் காணுமாம்.

### Well Sinking.

கிணறு வெட்டுதல்.— கிணறு வெட்டுபவர்கள் பல இடங்களில் அதன் பக்கங்களை, கல், சாந்து, ஸிமெண்ட், போட்டுக் கட்டுவது அவச்யமான காரியம். பக்கத்திலிருந்து அழுக்குத் தண்ணீர் உள்புகாமல் பக்கங்களை உயர்த்திக் கட்டவேண்டும். ஆனால் சிலர் பக்கத்திலுள்ள ஊற்றுக் கண்களை யெல்லாம் மூடி ஸிமெண்ட் அல்லது சாந்து போட்டுக் கட்டி விடுகிறார்கள். இந்தக் கிணறுகளில் தண்ணீர் மிகக் குறைவாயிருக்கும். கிணற்றுக் கட்டுகளின் அடி பாகத்தில் பக்கத்திலிருந்து ஊற்றுக்கள் பொசிந்து வரத் தக்கதாய்த்வாரங்கள் விட்டுக் கல்லடுக்கவேண்டும். ஸிமெண்ட் அல்லது சாந்தால் அடைத்துக் கட்டுவது யுக்தியல்ல. சில இடங்கள் கீழே போகப்போக நெடுக மணலாயிருக்கும். அப்படியான இடங்களில் கிணறுகளின் அடி பாகத்தில் செங்கல்லை அடுக்கிக் கட்டுதல் அவ்வச்யமாயிருக்கும்.

### Bamboo.

மூங்கில்.—தஞ்சாவூர் ஜில்லாவில் மூங்கில் ஸுமார் மூன்று வருஷத்துக்குள் ஜாடாவாய்ப் பூத்துப் போய் விட்டபடியால் சவுக்குக் கழிகளை உபயோகப்படுத்தி வருகிறார்கள். வேலி முள்ளுக்கு இரும்பு வேலி போடப் பணமிருக்கிறவர்கள் உபயோகிக்கிறார்கள். எளியவர்கள் வேறு வழியில்லாமல் சப்பாத்து முதலிய கள்ளிகளைக்கொண்டு வேலி அடைத்து வருகிறார்கள். மாயவரத்தைச் சேர்ந்த சேந்தன்குடி மிராசுதார் முத்து வேலுப்பிள்ளை இதை யுணர்ந்து 500 மூங்கில் கன்றுகளையும் மற்றும் இதர கன்றுகளையும் ப்ரயாஸையோடு பயிர்செய்து பலருக்கு உதவி வருகிறாரென்று ஒரு நிருபர் சுதேசமித்திரனில் எழுதியிருக்கிறார். இது நல்ல நன்மையைத் தருகிறபடியால் மற்ற மிராசுதார்களும் இதேமாதிரி கன்றுகள் பயிர் செய்வார்களானால் எங்கேயும் மூங்கில் பெருகுவதோடு மற்ற கன்றுகளும் பயிராகி எளியவர்களுக்கும் வலியவர்களுக்கும் உதவியாகும். தகுந்த லாபமும் வரும்.

### Some Green Manures.

சில பசுந்தாள் உரங்கள்.— ஆடாதோடை, (ஒர் நூதன எரு) உஷ்ணப்ரதேசங்களில் வளரும் செடிகளுள் ஆடாதோடையும் ஒன்று. இச்செடி ஸுமார் 4 அல்லது 5 அடி உயரம் வளருகிறது. ஒரு செடியின் நுனியை கொழுந்துடன் கிள்ளி மண்ணில் புதைத்து ஸ்வல்பத் தண்ணீர் விட்டு வந்தால் சில நாளுள் வேர் உண்டாகி செடி முன்னிருந்த கொழுந்துடனே செழிப்பாய் வளருகிறது. இந்தச் செடிகளை இதுவரையிலும் இந்நாடுகளில் நல்ல வேலிக்கால்களாக மட்டும் உபயோகப்படுத்திவந்தார்கள்.

அநேக விவஸாயிகள் தகரை, அவுரி முதலிய செடிகளின் தழை முதலியவைகளை நிலத்திற்கு உரமாக்கிக் கொண்டதுபோல இப்பொழுது அநேகர் ஆடாதோடைத் தழைகளையும் நிலத்தில் தண்ணீர் கட்டி உழுங்காலத்தில் சேர்த்து உழுது நிலத்தை உரப்படுத்துகிறார்கள். ஏராளமான நைட்ரஜனை தனக்குள் நரம்புகளிலும் இலைகளிலும் அடக்கிவைத்துக் கொண்டிருக்கும் ஆடாதோடை, நிலத்தில் சேர்த்து உழுதவுடன் நைட்ரஜனை நிலத்தில் பரவச்செய்து அற்ப வேருடைய நெற்பயிரை பலப்படுத்துகிறது. இப்பொழுது அதிகப் பணமில்லாமல் கிடைக்கும் இவ்வாடாதோடை எரு நிலமுடையோரெல்லாராலும் நன்கு மதிக்கப்படுகிறது. இனி நம் நாடுகளில் ஆடாதோடையின் வளர்ச்சி அதிகமாகலாம்.

காட்டாமணக்கு.—இச்செடிக்கு ஜலம் ஜன்மம் முழுவதிலும் வேண்டுவதில்லை. மணற்பாங்கான ஆற்றோரங்களிலும் உஷ்ண ப்ரதேசங்களிலும் செழுமையாய் வளருகிறது. இதில் சீமைக்காட்டாமணக்கு ஸராஸரி இரண்டடி உயரம் வளர்ந்து கருத்த இலைகளுடனும், நாட்டுக் காட்டாமணக்கு ஸராஸரி ஐந்து அல்லது ஆறடி உயரம் வளர்ந்து வெண்ணிறம் வாய்ந்த பசுமையான இலைகளுடனு மிருக்கும்.

இவ்வாமணக்குத் தழைகளும் ஆடாதோடைக்கடு

த்தபடி நிலத்திற்கு நல்ல உரமாகின்றன. அநேக விவஸாயிகள் இக்காட்டாமணக்குச் செடிகளை வ்ருத்தி செய்யும் பொருட்டும் நிலத்தின் எருவின் பொருட்டும் அச்செடிகளின் தழைகளை மட்டும் அறுக்கிறார்கள். இச்செடிகளின் தழைகளை கழிக்கக் கழிக்கச் செடிகளும் செழிக்கும்.—லோகரஞ்சனி.

**Paddy Suited for Saline Soil.**

களர் நிலத்திற் கேற்ற நெல்.—"நீர்ச்சுட்டு நிலங்களில் பயிராகும் வல்லரங்கன் குழத்துக் குலைவாளை நெல்தினுஸுகள் களர் (உவர் பொங்கி பயிரழியும் பூமி) நிலத்துக்கேற்றதாய் அனுபவத்தில் வெளியாகிறது. நீர்க்கட்டு நெல் தென்ஜில்லா நெல் மோட்டா தினுஸே. திருவள்ளூர் தாலூக்கா வெங்கிடாபுரம்கிராமத்தில் பூம்பாளை ரங்கநாதன் என்ற நெல்தினுஸு ஸன்னமாயும் போஜனத்துக் கேற்றதென்று வெளியாயின. அந்த 2 தினுஸும் வருத்தி இந்த வருஷம் பயிர் செய்ததில் களர் நிலத்தில் நல்ல பலன் கிட்டுகிறது."—வெ. ப. தி.

**Scour.**

இளங்கன்றுக் கழிச்சல்.—இந்தக் கழிச்சல் இளங்கன்றுகளுக்கு வரும் வ்யாதி. இது கன்றுகள் பால் குடிக்குங்காலத்தில் வந்தால் அவைகள் கழியும். மலம் வெள்ளையாக இருக்கும்; ஆனால், சில வேளைகளில் இந்த வ்யாதி பசும் புல் தின்ன ஆரம்பித்தபோது உண்டாகிறது; அப்படியுண்டானால் மலம் பச்சை நிறமாக இருக்கும். இந்த வ்யாதி எப்போது வந்தாலும் கன்றை கவனமாகப் போஷித்து ஏராளமாகக் கஞ்சி கொடுத்து சீமைச் சுண்ணம்பு, சுக்கு, மிளகாய், இவைகளில் வகைக்குக் காலேமாகாணி ரூபா யெடை பொடி செய்து தினங் கொடுத்துவரவேண்டும்.

**The Coimbatore Agricultural Association.**

கோயமுத்தூர் விவஸாய ஸங்கம்.—கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்ட் போர்டு ஹாலில் சென்ற நவம்பர்மீ 24உ யன்று விவஸாய ஸங்கம் கூடிற்று. அந்த ஸமயம் பல முக்ய விஷயங்கள் பேசப்பட்டன. டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர்களுள் சிலரும் சில ரயித்துகளும் வந்திருந்தார்கள். கலெக்டர் மிஸ்டர் ஹெம்மிங்வே அக்ராஸனம் வகித்தார். இந்தஸங்கத்தின் முக்ய அம்சம் திருப்பூரில் கூடிவரும் கால்நடை, குதிரை, இவைகளின் காட்சிகளே ஆகும். இவ்விதக் கால்நடைக் காக்ஷி ஏற்பட்டு ஐந்து வருஷம் ஆகிறது. இது ஸம்பந்தமான வரவு செலவு கணக்குகளின் ஜாப்தாவை வைஸ் ப்ரஸிடெண்ட் மிஸ்டர் டி. ராமஸ்வாமி அய்யங்கார் தயார்செய்து கொண்டு வந்தார். 1912-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதியில் பாக்கிநின்ற தொகை ரூபாய் 7575-7-0. இந்தக் காட்சிக்கு டிஸ்ட்ரிக்ட் போர்டார் 500-ரூபாய் பணவுதவி செய்திருக்கிறார்கள். கொள்ளேகாலம், ஈரோடு, கோயமுத்தூர் இம்மூன்று தாலூக்கா போர்டார்கள் சேர்ந்து 190 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ப்ரைவேட்டாக ஸந்தாத் தொகையில் வஸூலானது ரூபாய் 863-2-0. வட்டிக்குக் கொடுத்ததில் வந்த தொகை ரூபா 609-9-11, ஆக மொத்தம் வரவு ரூபாய் 9737-11-11. காட்சி ஸம்பந்தமாய் கொட்டகை கட்டினதற்கும், இனும் கொடுத்ததற்கும் இன்னும் சில கார்யங்களுக்கும் செலவான ரூபாய் 1,293-2-6 போக பாக்கி நிற்கும் தொகை ரூபாய் 8,444-9-5.

திருப்பூர் மார்க்கெட்டுக்கு எதிரில் காட்சி கூடுகிற நிலத்தை விலைக்கு வாங்கி விடுவது உத்தமம் என்று மிஸ்டர் ஆல்ப்ரெட் சாட்டர்டன் தம்மிடம் ப்ரஸ்தாபித்ததாக, ப்ரெஸிடெண்ட் மிஸ்டர் ஹெம்மிங்வே ஸபையில் சொன்னார். சிறந்த கால்நடைகள் குதிரைகள் இவைகளைக் கொண்டுவருகிறவர்களுக்கு வழக்கமாய்க்கொடுத்துவந்த இந்தியா கவர்ன்மெண்ட் வெள்ளி மெடல்களை நிறுத்திவிட்டு, தங்கமெடல்களைக் கொடுப்பது உசிதம் என்றும், ஸங்கத்தார் இதுவரையிலும் சிறந்த கால்நடைகளுக்குப் பணம் பரிசாகக் கொடுத்துவந்ததை நிறுத்திவிட்டு மெடல்கள் கொடுத்துவரவேண்டும் என்றும், தாம் அபிப்ராயப் படுவதாக ப்ரஸிடெண்ட் சொன்னார். இந்த விஷயங்களைப்பற்றி வெகுநேரம் ஸபையில் வாதம் நடந்தது. மேற்கண்ட மூன்று விஷயங்களை ப்ரெஸிடெண்ட், வைஸ் ப்ரெஸிடெண்ட், ஸப் கலெக்டர், தாசில்தார், ராவ்ஸாஹேப் விட்டல்தாஸ் ஸேட், ஆனந்தஜிஸேட், மிஸ்டர் கோவிந்தகவுண்டன் இவர்கள் சேர்ந்து ஒரு ஸப் கமிட்டியில் ப்ரஸ்தாபித்து முடிவுக்குக் கொண்டுவருவார்கள்.

# COMMERCE.
# வ்யாபாரம்.

## Trade in Barley and Gram.

வால் கோதுமையிலும், கோள்ளிலும் வ்யாபாரம்.—சில வருஷங்களுக்கு முன் ஐரோப்பா கண்டத்தில் வால் கோதுமையும், கொள்ளும் ஸ்வல்பமாகவே இறக்குமதி செய்யப்பட்டன. இப்பொழுது வரவர அவற்றின் வ்யாபாரம் வ்ருத்தியாகி வந்திருக்கிறது. ஐரோப்பிய வ்யாபாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்குகிறார்கள். 1907-8-ம் வருஷத்தில் 81,887 டன் வால் கோதுமை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயிற்று. இப்பொழுது 6,00,000 டன் வரையில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கொள்ளும் இப்பொழுது ஸுமார் 3,00,000 டன் வரையில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவைகளை அதிகமாய் வாங்குகிறவர்கள் ஜெர்மெனி தேசத்தாரும், பெல்ஜியம் தேசத்தாருந்தான். ஜெர்மெனியில் வால் கோதுமையிலிருந்து ஒருவித சாராயம் இறக்குகிறார்கள். கொள்ளு மாடுகளுக்கு தீனியாக உபயோகப்படுகிறது. இந்திய விவஸாயிகளுக்கு நல்ல தசையென்று தான் சொல்லவேண்டும்.

## Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற அக்டோபர் மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 23 கம்பெனிகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டன.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 8 | பாங்கிகளும் லேவாதேவி கம்பெனிகளும் | ... | 36,50,000 |
| 5 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... | 1,61,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | ... | 12,00,000 |
| 1 | அச்சிட்டு ப்ரசுரம்செய்யும் கம்பெனி | ... | 50,000 |
| 3 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேல்சொன்னவைதவிர) | ... | 2,60,000 |
| 1 | பருத்தி மில்கம்பெனி | ... | 25,00,000 |
| 1 | எண்ணெய் மில்கம்பெனி | ... | 50,000 |
| 2 | நிலக்கரி சுரங்கக்கம்பெனி | .. | 2,20,000 |
| 1 | சுரங்கக்கம்பெனி-மேல் சொன்னது தவிர | ... | 1,00,000 |
| 23 | ஆக மொத்தம் ரூ. | | 81,91,000 |

## The South Coromandel Chamber of Commerce.

தென்னாற்காடு, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்காக தென் சோழமண்டல வர்த்தக ஸபை.—1912ளு நவம்பர்மீ 19உ கூடலூரில் தென்னாற்காடு தஞ்சாவூர் ஜில்லாக்களுக்காக ஏற்பட்ட தென்சோழமண்டல வர்த்தக ஸபை கூடலூரில் கூடியது. இதில் புதுச்சேரி பெஸ்டு அண்டு கம்பெனி ஏஜண்டு மிஸ்டர் எப். பிர்லி, கூடலூர் டைம்ஸ் அண்டு கம்பெனி ஏஜண்டு மிஸ்டர் கார்பொனல், கூடலூர் மெஸர்ஸ் பாரி அண்டு கோ. ஏஜண்டு மிஸ்டர் வி. எச். கார்டோஸா, நாகப்பட்டணம் மதுரை கம்பெனி ஏஜண்டு மிஸ்டர் டி. ஜி. மக்கொனக்கி, முதலிய வர்த்தக ஏஜண்டுகள் அம்மீட்டிங்கில் ப்ரஸன்னமாயிருந்தார்கள். இந்த ஸபையின் நோக்கம் தென்னாற்காடு தஞ்சாவூர் ஜில்லாக்களின் வர்த்தக விஷயத்தில் கவனம் வைத்து அதைக் காப்பாற்றி விருத்திசெய்வது. முக்யமாய் கூடலூர், பரங்கிப்பேட்டை, நாகப்பட்டணம் துறைகளில் ஏராளமாய் நடந்தேறும் வேர்க்கடலை அல்லது மணிலாக்கொட்டை வ்யாபாரத்தைக் காப்பாற்றலும், அவைகளுக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுப்பதும், இந்தத் துறைமுகங்களில் ஏற்றுமதியாகும் மணிலாப் பருப்பு மூட்டைகள் மற்ற சரக்குகள் இன்னின்னபடியாய் இவ்வளவு இவ்வளவு ஏற்றுமதியாகின்றனவென்பதைக் குறித்துக் காட்டல், ஸூபர்வைஸர்களை ஏற்படுத்தல், இந்த வ்யாபாரமாய் பொருத்தமான கார்யங்களைச்செய்யும் க்ளர்க்குகளின் லீஸ்டைப் பொருக்கி யெடுத்தல், கடற்கரையிலிருந்தும் ஸ்டீமரில் ஏறுவதற்கு முன்னால் போகும் திருட்டுகளைத் தடுத்தல், இன்னம் இந்த வ்யாபார விஷயத்தில் இந்த ஜில்லாக்களின் தகவல்களைப்பற்றி அவச்யம் நேரிட்டால் ஜில்லாக்களின் அதிகாரிகளுடன் கடிதம் போக்குவரத்து செய்து கலந்து கொள்ளல், முதலியவைகளே இந்த ஸபையின் முக்ய நோக்கங்களாகும்.

மேனாட்டார் இந்தமாதிரி ஸபைகள் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஏற்படுத்திக்கொண்டு தமக்குள்ள குறைகளை மாற்றிக்கொண்டு பாடுபடுவனாலன்றோ மேனாட்டார் இவ்வளவு தூரம் முன்னுக்குவந்து மேம்பட்டு விளங்குகிறார்கள். இந்திய வர்த்தகர்களே, இவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள்.

## INDUSTRY.
## கைத்தொழில்.

**The World's Spindles.**

உலகத்திலுள்ள கதிர்கள்.—1911-ம் வருஷக் கடைசியில் உலக முழுவதிலுமிருந்த நூல் நூற்கும் கதிர் (ராட்டினங்கள்) 13,72,78,752. ஒவ்வொரு தேசத்திலும் இருந்தவைகளின் கணக்கு:—

| | | |
|---|---|---|
| இங்கிலாந்து | ... | 5,45,22,554 |
| அமெரிக்கா ஐக்கிய மகாணங்கள் | ... | 2,88,72,000 |
| ஜர்மெனி | ... | 1,04,80,090 |
| ரஷ்யா | ... | 86,71,664 |
| ப்ரான்ஸ் | ... | 73,00,000 |
| இந்தியா | ... | 62,50,000 |
| ஆஸ்ட்ரியா | ... | 45,63,745 |
| இடாலி | ... | 45,82,065 |
| ஜப்பான் | ... | 21,31,494 |

**Embroidery in Madras.**

சென்னை ராஜதானியில் ஸரிகைச் சித்ரவேலைகள்.—சென்னை ராஜதானியில் ஸரிகை கைத்தொழில் சிறந்ததெனப் பேர்போன இடங்களிலெல்லாம் அந்தத் தொழில் குன்றிப்போய்விட்டது. குறநாடு, கும்பகோணம் முதலிய இடங்களில், வேஷ்டி புடவைகளில் ஸ்வல்ப ஸரிகைவேலை செய்யப்பட்டாலும் முன்போல அவ்வளவில்லாமற் போய்விட்டது. தற்போது அத்தொழிலைச் செய்கிறவர்கள் இம்மாகாணத்தில் ஸுமார் 1000 பேரிருக்கலாமென்றும், அவர்களில் பெரும்பான்மையோர் சென்னையிலேயே இருக்கிறார்களென்றும் தெரிகிறது.

**Tata Iron works.**

டாடா இரும்புத் தொழில்சாலை.—மத்திய மாகாணத்திலுள்ள டாடா இரும்புத்தொழில் சாலையானது அபிவ்ருத்தி யாகிக்கொண்டு வருவதாகத் தெரிகிறது. இந்தியாவில் ஸ்வதேசிகளால் நடத்தப்படும் இரும்புத் தொழில்சாலைகளெல்லாவற்றிலும் டாடா தொழில் சாலையே பெரிதானது. கடந்த வருஷத்தில், மாஸம் ஒன்றுக்கு ஸராஸரி 100 டன் வீதம் எஃகு ஸாமான்கள் மேற்படி தொழில்சாலையிற் உற்பத்தி செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கின்றன. அதிலுற்பத்தி செய்யப்படும் ஸாமான்கள் மிகச்சிறந்தவையாக யிருப்பதால் ஐரோப்பியர்களும் அங்கிருந்து ஸாமான் வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஜப்பான் தேசத்திற்கு மாத்திரம் ஒரு லட்சம் டன் இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாகவும், நாலாபக்கங்களிலிருந்தும் ஏராளமாக ஆர்டர்கள் வந்துக்கொண்டிருப்பதாகவும் மிஸ்டர் ராடன். ஜெ. டாடா சொல்லுகிறார்.

**Industrial Conference.**

தொழிலாலோசனைக் கான்பரேன்ஸ்.—சென்ற டிஸம்பர்மாஸம் 30-தேதி பங்கிப்பூரில் தொழிலாலோசனை கான்பரென்ஸ் கூடிற்று. உபசரணைக் கமிட்டி சேர்மன் மிஸ்டர் ஜஸ்டிஸ் இமாம் ப்ரதிநிதிகளை வரவேற்று தொழிலபிவ்ருத்தியால் தேசம் முன்னுக்கு வருவதைப்பற்றிச் சிறிது பேசி விட்டு, அக்ராஸநாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மிஸ்டர் ஹரிக்ருஷ்ணலாலை அக்ராஸனத்தை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். ப்ரெஸிடெண்ட் தம்முடைய ஆரம்ப ப்ரஸங்கத்தைச் செய்தபிறகு தொழிலாலோசனைக் கான்பரென்ஸின் ஜெனரல் ஸெக்ரிட்டரியாகிய ஆனரபில் ராவ்பகதூர் ஆர். என். மதோல்கார் சென்ற பன்னிரண்டு மாஸங்களின் ரிபோர்ட்டை ஸபையின் முன்வைத்துப் பண உதவி வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு ஸரியான பதில்கள் கிடைக்கவில்லை யென்றும், பணத்தட்டினால் அவச்யம் நடத்தப்பட வேண்டிய வேலைகள் முடங்குகின்றன வென்றும், தெரிவித்துக்கொண்டார். அவர் வங்காளத்தில் மிஸ்டர் தாரகநாத் பாலித் சாஸ்த்ரக்கல்விக்கு லட்சக் கணக்காய் பொருளுதவி செய்திருப்பதை ச்லாகித்துப் பேசினார். அப்பால் சில வ்யாஸங்கள் படிக்கப்பட்டன. வேறுசில வ்யாஸங்கள் தக்க பெரியோரிடமிருந்து வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடைசியாக மிஸ்டர் மதோல்கார் அடுத்த வருஷத்துக்கு ஜெனரல் ஸெக்ரிடரியாக மறுபடி நியமிக்கப்பட்டார். அவருடன் சேர்ந்து வேலை செய்ய ஒரு ஸ்டாண்டிங் கமிட்டியும் நியமிக்கப்பட்டது. 8000 ரூபாய் பொருளுதவி வேண்டு மென்று விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டது.

இந்தக் கான்பரென்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்களை இடமில்லாததால் அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடுவோம்.

# ECONOMICS.
## பொருளாதாரம்.

### The Depressed Classes Mission.

தாழ்ந்தவகுப்பாரை ஈடேற்றும் ஸங்கம்.—பீகாரில் தாழ்ந்த வகுப்பாரை ஈடேற்றும் ஸங்கமொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று ஒரு பொதுக்கூட்டம் கூடித் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### Emigrants to Australia.

ஆஸ்ட்ரேலியாவுக்கு குடியேறிச்செல்பவர்கள். ஆஸ்ட்ரேலியாவில் 2000 இந்தியர்க ளிருக்கிறார்களாம். அவர்களுள் பெரும்பான்மையோர் சீக்கியரும் பட்டாணிகளுமாம். இவர்கள் தமது மனைவியாரை ஆஸ்ட்ரேலியாவிற்கு அழைத்து வருதல் கூடாதென்று தடுக்கப்பட்டு, வெள்ளை ஸ்த்ரீகளைக் கல்யாணஞ் செய்து கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்களாம். வெள்ளை ஸ்த்ரீகள் ஹிந்துக்களுடைய அந்தஸ்துக்கு மேற்பட்டவர்களாக விருக்கிறார்கள். அதனால் ஹிந்துக்கள் அவர்களை ஸம்ரட்சணை செய்யக்கூடியவர்களாகவில்லை. ஆயினும், ஹிந்துக்கள் ஆஸ்ட்ரேலியாவில் பணம் ஸம்பாதிப்பார்களானால் அவர்கள் வெள்ளை ஸ்த்ரீகளைக் கல்யாணஞ் செய்துகொண்டு அவர்கட்கே அப்பொருளைச் செலவிடுதல் வேண்டுமென்று ஆஸ்ட்ரேலியா கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்களாம். ஆனால் ஆஸ்ட்ரேலியாவில் ஹிந்துக்கள் ஆஸ்ட்ரேலியரைப்போல் ஸர்வ ஸ்வதந்த்ரங்களையும் அனுபவிக்கிறார்களாம்.

### The Madras Economic Association.

சென்னை எகனமிக் அஸோஸியேஷன்.—தென்னிந்தியாவின் பொருளாதாரத்தைப்பற்றி கவனித்து பொருளாதாரத்திற் குரியவற்றை வ்ருத்தி செய்யும் நோக்கத்துடன் சென்னை எகனமிக் அஸோஸியேஷன் என்று ஒரு ஸங்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸங்கத்துக்கு சென்னை கவர்னர் லார்டு பெண்ட்லண்ட் அக்ராஸனாதிபதி, ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், ஸர் சங்கரன் நாயர், இவ்விருவரும் வைஸ் ப்ரஸிடெண்டுகள் இன்னும் அநேக ஐரோப்பிய, இந்திய கனவான்களும் இந்த ஸங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

### Drinking.

மதுக்குடி.—சென்றமாஸம் மதுபானத்தைப்பற்றி ஒரு குறிப்பு ப்ரசுரித்திருந்தோம். இந்த மதுபானத்தை யடக்குவதற்காக லண்டனிலுள்ள ஆங்கிலோ இந்தியன் டெம்பரென்ஸ் அஸோஸியேஷன் ஸங்கத்தாரும், வேறு அநேக முக்யமான ஸங்கத்தார்களும் சேர்ந்து மெமோரியல் ஒன்றும் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அந்த மெமோரியலில் கீழ்க்கண்ட விஷயங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன:—

(1) இந்தியாவில் கள், சாராயக்குடி வழக்கமானது ஹிந்து மகம்மதிய மதாசாரத்தின்படி தடுக்கப்பட்டும், பொது ஜனங்களின் அபிப்ராயம் அவ்வழக்கத்திற்கு விரோதமாக இருக்கிறதென்று சட்டஸபைகளில் இந்தியமெம்பர்களால் கூறப்பட்டு வந்தும், தற்போதைய லைஸென்ஸ் வழக்கத்தினால், சாராயக்குடி அதிகரித்து ப்ரஜைகள் தீயவழிக்குள்ளாகி வருகிறார்கள். கள், சாராய வ்யாபாரத்தையும் அதனாலுண்டாகும் வரும்படியையும் கவர்ன்மெண்டாரே கையாண்டு வருவதால் தற்போதிருந்து வரும் வழக்கத்தை யனுஸரிப்பதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும்.

(2) கள், சாராயம் முதலியன விற்கப்படுவதற்காகக் கொடுக்கப்படும் லைஸென்ஸுகளைக் குறைத்துவிடவேண்டுவதோடு லைஸென்ஸ் பெற்ற கடைகள் தினஸரி வ்யாபாரம் நடத்தும் கால அளவையும் குறைத்து விடவேண்டும்.

(3) எக்ஸைஸ் அட்வைஸரி கமிட்டிகள் அதாவது லாகிரிவஸ்துக்களின் வ்யாபார விஷயமாய் பரிசீலனை செய்வதற்காக ஏற்பட்டுள்ள கமிட்டி, எல்லா முனிஸிபாலிடிகளிலும் ஏற்படுத்தப்பட்டு, அந்தக் கமிட்டிக்கு கள் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் விற்பதற்காகக் கொடுக்கப்படும் லைஸென்ஸ்களின் ஸம்பந்தமாய் எவ்வித ஏற்பாட்டையும் செய்ய அதிகாரம் கொடுக்க வேண்டும்.

(4) லைஸென்ஸ்களை ஏலம் போடும் வழக்கத்தை நிறுத்தி, ஸ்திரமான தொகைக்குக் கொடுப்பதாய் ஏற்படுத்தவேண்டும்.

(5) லைஸென்ஸ் கொடுக்கப்படும் விஷயமாய் ரெவினியூ இலாக்காவுக்குள்ள அதிகாரத்தை நிறுத்தி லோக்கல் கமிட்டிகளுக்காவது அந்த பாத்யம் கொடுக்கவேண்டும்.

இப்படி அநேக விஷயங்களைக் குறிப்பிட்டு, பல ஸங்கத்தார் ஒன்றுகூடி அனுப்பிக்கொண்டிருக்கும் இந்த மெமோரியலை லார்டு க்ரூ கவனிப்பாரென நம்புகிறோம்.

## CO-OPERATION.

## கோவாபரேஷன்.

**Madras Provincial Co-operative Conference.**

சென்னை ப்ரோவின்ஷியல் கோ வாபரேடிவ் கான்பரேன்ஸ்.——இந்த கான்பரென்ஸ் சென்ற டிஸம்பர்மீ 21உயன்று காலே 11–மணிக்கு சென்னை, பச்சையப்பன் காலேஜ் ஸபா மண்டபத்தில் கூடியது. இதற்கு சென்னை ராஜதானியின் பல பாகங்களிலு மிருந்து 200-டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள். ஆனரபில் திவான்பகதூர் எம். ஆதிநாராயணய்யர் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் ஸப்ஜெக்ட் கமிட்டி கூடி கான்பரென்ஸில் கவனிப்பதற்கு யோக்ய மான விஷயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. பின் பிற்பகல் 2-15.மணிக்கு கவர்னர் லாட் பெண்ட் லண்டு அவர்கள் விஜயஞ்செய்ய, கான்பரென்ஸ் ஸர் ஜான் அட்கின்ஸன் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் கூடியது. வரவேற்புக் கமிட்டி சேர்மன், திவான்பகதூர் பி. ராஜரத்ன முதலியார் டெலி கேட்டுகளை உபசாரவார்த்தைகளால் நல்வரவு கூறி னுர். பின் நமது கவர்னர் லார்டு பெண்ட்லண்ட வர்கள் ஐக்ய நாணய ஸங்கத்தினுலுண்டாகும் நன் மைகளைப்பற்றிப் பேசினுர். அதை இந்த ஸஞ்சிகை யில் வேறு பக்கத்தில் ப்ரசுரித்திருக்கிறோம். மறுநாள் 22-உ ஞாயிற்றுக்கிழமை யன்றும் இந்த கான்ப ரென்ஸ் கூடி அநேக தீர்மானங்களைச் செய்தது. அவைகளையும் வேறு பக்கத்தில் காணலாம்.

**The Co-operative Movement in Madras.**

சென்னையில் ஐக்யநாணய முயற்சி—சென்ற டிஸம்பர்மாஸம் 21-தேதி சென்னை பச்சையப்பன் காலேஜ் ஹாலில் நடந்த சென்னை மாகாண ஐக்ய நாணய ஸங்கங்களின் முதல் கான்பரென்ஸில், உப சரணைக்கமிட்டி சேர்மனுகிய திவான்பகதூர் ராஜ ரத்னமுதலியார் நல்வரவு ப்ரஸங்கம் செய்தபோது சென்னை ராஜதானியின் ஐக்ய நாணய முயற்சியை ப்பற்றிப் பேசினுர். அதைச் சுருக்கமாய் இங்கு எழுதுகிறோம்.

“லார்ட் கானிமீரா சென்னை கவர்னராயிருந்த காலத்தில் இப்பொழுது ஸர் பட்டத்துடன் விளங்கு கிற ப்ரெடெரிக் நிக்கல்ஸன் ஐரோப்பாவில் நடை பெறுவதுபோல் இம் மாகாணத்தில் கவர்ன்மெண் டார் விவஸாய பாங்கிகளை ஸ்தாபிக்க வேண்டுமெ ன்று முயற்சி எடுத்தார். அவருடைய ப்ரேரணையை ஆலோசிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அந் தக் கமிட்டியும் அதை ஆதரித்தது. 1885-ம் வரு ஷத்தில் ப்ரெடரிக் நிக்கல்ஸன் இரண்டு ரிபோர்ட் களை எழுதினுர். ஆனுல் ரெவின்யூ போர்டார் அவ்வாறு செய்ய உத்தேசிப்பது ஸ்வப்னந்தானென எண்ணவே, மேற்கண்ட விஷயம் நின்றுபோய்விட் டது. பிறகு அநேக வருஷங்களுக்குப் பிறகு லார்ட் கர்ஸன் அந்த விஷயமாய் கவனஞ் செலுத்தி 1904-ம் வருஷத்தில் கோ-ஆபரெடிவ் ஆக்ட் என்ற சட்டம் செய்தார். அப்பொழுதும் மேற்கண்ட விஷயம் இந்த தேசத்துக்குப் பொருத்தமில்லே என்று பல காரணங்களை எடுத்துக் காட்ட எவ்வளவோ பேர்கள் முன்வந்தார்கள்.

ஐக்யநாணய ஸங்கங்களை உண்டுபண்ணி வ்ருத்தி செய்வதற்காக முதலில் கவர்ன்மெண்டார் நியமித்த ரெஜிஸ்ட்ரார்களுடைய திறமையினுலேயே இப்பொ ழுதுள்ள அளவு அம்முயற்சி பரவியது. 1912-ம் வருஷம் ஜூன்மாதம் 30-ந்தேதி யன்று 972-ஸங் கங்கள் இருந்தன. அவைகளில் மெம்பர்கள் 66,156 பேர்களிருந்தார்கள். மூலதனம் 74,63,739-ரூபா யிருந்தது. இம்முயற்சி ஆரம்பமாகி எட்டு வருஷங் களே ஆயிருப்பதால், மேற்கண்ட எண்கள் த்ருப்தியா யிருக்கின்றன. ஆயினும் இன்னும் செய்யக்கூடிய வேலே ஏராளமாக இருக்கிறது. ஜமீன்தாரி க்ராமங் களையும் இனும் க்ராமங்களையும் நீக்கி இந்த மாகாண த்தில் 33,000 க்ராமங்கள் (வட்டங்கள்) இருக்கின் றன. அவற்றில் ஸுமார் 3000 க்ராமங்களுக்குத் தான் ஐக்யநாணய ஸங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விவஸாயக் கூட்டுறவு ஸங்கங்களே இதுவரையில் இல்லே. இப்போது ஐக்ய ஸங்கங்களின் மேல்விசா ரணை ரெவின்யூ போர்ட் மெம்பர் ஒருவரிட மிருக்கி றது.

டெல்லி முனிஸிபாலிட்டி நமது ராஜ சக்ரவர்த் திக்கு வரவேற்புப் பத்திரம் படித்தபோது, “ஐக்ய உதவி ஏற்பாட்டை உண்டுபண்ணி அது முழுப்பலன் தரும்படி செய்தால், விவஸாயம் மகோன்னத ஸ்தி தியை அடையுமென்று நான் நம்புகிறேன்” என்று நமது சக்ரவர்த்தி பதில் சொன்னுர். அவ்வாறு க்ஷேமமுண்டாக நாம் எல்லாரும் ஒரு மனஸாய் முயற்சி செய்வோம்”.

# BANKING.
## ப்ராங்கி வ்யாபாரம்.

### A Branch of the Madras Bank.

மெட்ராஸ் பாங்கின் கிளை.—இன்னம் சில தினத்தில் கும்பகோணத்தில் மேற்கண்ட பாங்கியின் கிளை பாங்கி யொன்று திறக்கப்படுமென வதந்தி.

### Bank of Madras.

பாங்க் அப் மேட்ராஸ்.—ஸமீபத்தில் மெட்ராஸ் பாங்கியின் டிரெக்டர்களுடைய மீடிங் ஒன்று நடந்தது அதில் 100-க்கு 10-வீதம் லாபமும் 100-க்கு 1-வீதமும் இனமும் கொடுக்கத் தீர்மானமாயிற்று. லாபத்தில் ஒரு லட்சரூபாய் காப்பு த்ரவியத்துக்கு மாற்றப்பட்டது. ரூபா 161,134-7-1 அடுத்த கையிருப்பு வருஷக்கணக்குக் கொண்டுபோகப் பட்டது.

### Indian Bank Ltd. of Madras.

சென்னை இந்தியன் பாங்கி லிமிடெட்.—சென்ற டிஸம்பர்மாதம் 31-தேதியுடன் முடிவான வருஷத்தில், சென்னை இந்தியன் பாங்கிக்கு இரண்டு லட்சத்து நாற்பத்தையாயிரத்து நானூற்று ஆறு ரூபாய் மூன்று அணு எட்டுபை லாபம் கிடைத்ததாக அறிகிறோம். டிபாஸிட் செய்திருந்தவர்களுக்கு வட்டியையும் ஸிப்பந்திச் செலவையும் கழித்து, மிகுகிப்பட்ட லாபம் ரூபா 96,294-0-7; சென்ற வருஷமுடிவில் பாக்கியிருந்த ரூபா 1385-1-8 யையும் அத்துடன் சேர்க்க ரூபா 97,679-2-3-கூடுதலாகிறது. ஜூன் 30-ந் தேதியுடன் முடிந்த அரைவருஷத்திற்கு மேல்கண்ட லாபத்தில் 30 ஆயிரம் ரூபாய் பங்கிட்டுக் கொடுத்தாய்விட்டதால், இப்பொழுது பாக்கியுள்ள தொகை ரூபா 67,679-2-3.

### Counterfeit Bank notes.

போலி பாங்கி நோட்டுகள்.—தற்காலம் அநேகர் பாங்கி நோட்டுகளைப் போல் கள்ளநோட்டுகள் செய்ய முடியாது என்று எண்ணுகிறார்கள். ஸமீபத்தில் இங்லாந்தில் ராயல் ஸொஸைட்டி மெம்பர் ஒருவர் பாங்கி நோட்டுகள் செய்ய ஒரு முறையைக்கண்டு பிடித்திருக்கிறார். இந்த முறையால் செய்த நோட்டுகளுக்கும் நிஜநோட்டுகளுக்கும் வித்யாஸம் தெரிகிறதில்லையாம். இவர் செய்த போலிநோட்டுகளை நிஜநோட்டுகளுடன் கலந்து ஒரு பெரிய பாங்கியின் ப்ரெஸிடெண்டினிடம் காட்ட இன்ன நோட்டுகள் நிஜநோட்டுகள் என்று ப்ரெஸிடெண்டால் சொல்லமுடியவில்லையாம். போலி நோட்டுகள் செய்யமுடியாதென்று ஜனங்கள் எண்ணியிருப்பது பிசகென்று காட்ட இந்த மெம்பர் இப்படிச் செய்தாராம்.

### Talking Bank Notes.

பேசும் பாங்கி நோட்டுகள்.—போலி பாங்கி நோட்டுகளைத் தடுக்க புதிதான முறை ஒன்று அநேகமாய் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாக சொல்லப்படுகிறது. அது பேசும் பாங்கிநோட்டாம். இது அனுஷ்டானத்துக்கு வந்தால கண்ணல் பார்த்து இது நல்ல நோட்டு இது போலிநோட்டென்று தெரிந்து கொள்வதல்லாமல், அதை ஒரு போனக்ராப்பில் வைத்துச் சுற்றினால் அது சொல்லும் வார்த்தைகளாலும் வாஸ்தவமான நோட்டென்று தெரிந்துகொள்ளலாம். இந்த நோட்டுக்கென்று தயாரித்த ஒரு கடிதாசியின் ஓரத்தில், போனகிராப் ஸிலிண்டரில் இருப்பதுபோல் சில வார்த்தைகள் வரையப்படும்.

எந்த வார்த்தைகள் இருந்தாலும் பாதமில்லை. இதற்கென்று செய்யப்பட்ட ஒரு போனக்ராபில் இந்த பாங்கி நோட்டைவைத்து விட்டால் நோட்டானது தனக்கேற்பட்டுள்ள வார்த்தைகளை உச்சரிக்கும். போலிபாங்குநோட்டோ சத்தம் ஒன்றும் செய்யாது. இந்த முறை அபூர்வமான முறைதான். ஆனல் போனகிராப் ரிகார்டைப்போல் போலி ரிகார்டுகள் செய்வது முடியாத காரியமல்ல.

### Oriental Banks.

கீழ் தேசத்திய பாங்கிகள்.—மேல்நாட்டு பாங்கிகளில், ஆறு மாதத்துக்கு ஒரு முறை ரிபோர்ட் எழுதுவது என்னும் வழக்கத்தை ஒரு பாங்கி தவிர மற்ற பாங்கிகளெல்லாம் அடியோடு நிறுத்திவிட்டார்கள். முதலாறுமாதத்துக்கு லாபம் கொடுத்துவிட்டு, அந்த வருஷத்துக் கடைசியில் ரிபோர்ட் எழுதி விடுகிறார்கள். இந்தியாவிலும் மற்ற கீழ் தேசங்களிலும் ப்ரதி ஆறுமாதத்துக்கும் ரிபோர்ட்டு எழுதுகிறார்கள்,

# INSURANCE.
# இன்ஷ்யூரென்ஸ்.

## Insurance Agents & Lapses.

இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகளும் ப்ரீமியம் கட்டாமல் நின்று போவதும்.—ப்ரீமியம் கட்டாமல் இன்ஷ்யூரென்ஸ் பாலிஸி நின்று போவதைப்பற்றி ஏஜெண்டுகள் ரொம்பவும் கவனிக்கவேண்டும். வருஷாவருஷம் ப்ரீமியம் கட்டுவதில், பாலிஸி ஹோல்டர்கள் அஜாக்ரதையாயிருப்பதனாலும், பணமில்லாமல் போவதனாலும், வேறு ஏஜெண்டுகள் ஹிதவார்த்தை சொல்லுவதாலும், ப்ரீமியம் கட்டாமல் நின்று விடுவதுண்டு. இந்தக் காரணங்கள் ஸம்பவிப்பது ஸகஜமானதால் ஏஜெண்டுகள் ரொம்ப ஜாக்ரதையாயிருந்து இவைகளை நீக்க முயலவேண்டும். கடிதங்கள் எழுதி பாலிஸி ஹோல்டரை ப்ரீமியம் கட்டச்செய்வது சில ஸந்தர்ப்பங்களில் அவச்யமென்றாலும், ஏஜெண்டுகள் பாலிஸி ஹோல்டரிடம் நேரில் போய் பேசுவதற்கு ஈடாகாது. ப்ரீமியம் இன்ன தேதியில் செலுத்தவேண்டுமென்று பாலிஸி ஹோல்டருக்கு ஸரியான காலத்தில் தெரியப்படுத்த வேண்டும். அந்தத் தேதியில் அவர்களிடம் போய் ப்ரீமியத்தை வஸூல் செய்யவேண்டும். ப்ரீமியம் செலுத்துவதற்காக சில நாள்கள் தவணை கொடுக்கப்படும். அந்தத் தவணை தினம் வரும் வரையிலாவது, அல்லது தவணை தினம் தீர்ந்துபோகும் வரையிலாவது பொறுத்திருக்கக்கூடாது. அப்படிச் செய்வதால் ரொம்ப நஷ்டத்துக்கிடமாகும். இப்படிப் பாலிஸி ஹோல்டரை விட்டுவிடாமல் இருப்பது ஏஜெண்டுக்கு மாத்திரம் முக்யமானது என்பதல்ல. இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிக்கும் ரொம்ப முக்யமானதாகும். ஏனென்றால், ப்ரீமியம் கட்டிக்கொண்டு வரும் நபர் என்றால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருஷம் ஒரு கம்பெனியைச் சேர்ந்தவர் என்று தாத்பரியம். அதாவது, கம்பெனிக்குத் தெரிந்தவும் அவர்கள் ஸம்மதித்தவுமான நபர்களாவார்கள். புதிதாய்ச் சேரும் நபர்களைவிட ஏற்கனவே இருந்து அவர்களைப்பற்றித் தெரியவேண்டிய ஸங்கதி யெல்லாம் தெரிந்திருப்பவர்கள் கம்பெனிக்கு மிகவும் நல்லதல்லவா? ஆகையால் ஏஜெண்டுகள் இது விஷயம் ஜாக்ரதையாயிருக்கவேண்டும்.

## Medical Expenses Insurance.

வைத்யச் செலவு இன்ஷ்யூரென்ஸ்.—ஒரு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி ஸமீபத்தில் வைத்யச் செலவுக்காக ஒரு இன்ஷ்யூரென்ஸ் ஸ்கீம் தயார் செய்திருக்கிறது. இன்ஷ்யூர் செய்பவர்கள் வ்யாதியாலாவது வேறு தற் செயலான கெடுதல்கள் நேரிடுவதாலாவது தம்முடைய வழக்கமான தொழிலை (உத்யோகம்)ச் செய்யமுடியாமற் போனால், அவர்களுக்கு ஏற்படும் வ்யாதி ஸம்பந்தமான வைத்யச் செலவையும் மற்ற செலவுகளையும் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியார் கொடுப்பார்கள். இந்தவிதமான இன்ஷ்யூரென்ஸில் ஸ்த்ரீகளும் 50-வயஸுக்கு மேற்பட்ட புருஷர்களும் சேர்க்கப்படுவதில்லை. இன்ஷ்யூர் செய்தவர்களுக்கு 60-வது வயஸு வந்தவுடன் அவர்களுடைய பாலிஸி முடிந்துபோய் விடும். பிறதேசங்களுக்குப் போவதைப்பற்றி யாதொரு நிர்ப்பந்தங்களும் கிடையாது. ஆனால் ஐரோப்பாவிற்கு வெளியே உள்ள தேசங்களில் வ்யாதி நேர்ந்தால் அதற்குப் பணம் கொடுக்கப் படமாட்டாது. மதுபானம் செய்யாதவர்களுக்கு ப்ரிமியத்தில் 100-க்குப் பத்து வீதம் தள்ளிக் கொடுக்கப்படும்.

## Where to Keep Policies.

பாலிஸிகளை எங்கே வைப்பது.—இன்ஷ்யூரென்ஸ் பாலிஸிகளை பொதுவாய் பாங்கியிலாவது வக்கீலிடமாவது வைப்பது வழக்கம். அப்படிப் பிறரிடம் வைப்பதே யல்லாமல் வேறு விதமாகவும் செய்யலாம். ஒருவன் தன் வீட்டை நெருப்பு பயத்துக்காக இன்ஷ்யூர் செய்திருந்தால் அந்த இன்ஷ்யூரென்ஸ் பாலிஸியை வீட்டில் வைக்காமல் தம்முடைய ஆபீஸில் பத்ரமாய் வைப்பது நல்லது.

ஆபீஸ் வர்த்தகம் அல்லது தொழில் நடக்குமிடம் இவற்றை நெருப்பு பயத்துக்காக இன்ஷ்யூர் செய்திருந்தால் அவைகளின் பாலிஸிகளைவீட்டில் வைக்க வேண்டும். இப்படிச் செய்வதனால், வீடாவது, ஆபீஸ் முதலிய இடங்களாவது ஏதாவது ஒன்று நெருப்புக்கு இரையானால் அதன் பாலிஸிமற்ற விடத்தில் பத்ரமாயிருப்பதால் பாலிஸியைக்காட்டி இன்ஷ்யூரென்ஸ் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

மற்ற பாலிஸிகளையும் நெருப்பு பயமில்லாத இடங்களில் வைப்பது நல்லது.

# EDUCATION.
# வித்யா விஷயம்.

## Madras Teachers' Conference.

சென்னை உபாத்யாயர் கான்பரென்ஸ்.—சென்ற டிஸம்பர் மாஸத்தில், சென்னை டீசர்ஸ்கில்ட் என்னும் ஸங்கத்தின் ஆதரவில், உபாத்யாயர் கான்பரென்ஸ் கூடிற்று. அந்த கான்பரென்ஸ் ஐந்து நாள் நடந்தது. அதற்கு மெம்பர்கள் ரொம்ப பேர்வரவில்லை. அநேக வ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன. 8 தீர்மானங்கள் செய்யப்பட்டன. தீர்மானங்களில் சிலவற்றைச் சுருக்கிச் சொல்லுகிறோம். ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட் போர்டில், ஆராவது பாரம் முழுவதும் உள்ளஸெகண்டரி ஸ்கூல்ஹெட்மாஸ்டர் ஒருவருமேயில்லாதது வ்யஸனிக்கத்தக்கது, அந்தக்குறையை நிவர்த்திக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வித்யா ஸ்தாபனங்களிலுள்ள ஸாமர்த்யமும் கீர்த்தியும் வாய்ந்த உபாத்யாயர்களிலிருந்தும், உயர்ந்த இன்ஸ்பெக்டிங் உத்யோகஸ்தர்களை ஒரு குறித்த அளவுக்கு நியமிக்கவேண்டும். ஸ்கூல் பைனல் ஸ்கீம் வந்த ஒரு வருஷம் வரையில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தவறினவர்களுக்கும், அந்த வருஷத்துக்கு முன் எந்த வருஷத்திலாவது 5-வது பாரம் அல்லது 6-வது பாரம் வாசித்து முடித்தவர்களுக்கும் அவர்கள் இரண்டு டரம் வாசித்ததற்கு அட்டெண்டன்ஸ் ஸர்டிபிகேட்டும், அந்த காலத்தில் மார்க்கு முதலானவைகள் குறிக்கப்பட்ட ஸ்கூல் பைனல் ஸர்டிபிகேட்டும் காண்பித்தால், பரீக்ஷைக்குப் போக உத்தரவு கொடுக்கவேண்டும்.

அட்டெண்டன்ஸ் குறைவாயிருந்தாலும், தகுதியான மாணவராயிருந்தால் அவருக்கும் பரீக்ஷைக்குப் போக அனுமதி கொடுக்க போர்டாருக்கு கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்கவேண்டும்.

ஸ்வதேச ஸமஸ்தானங்களிலிருந்து ப்ரிட்டிஷ் பள்ளிக்கூடங்களுக்கு வரும் மாணவர்கள் அவர்கள் அப்படி வருங்காலத்தில் ஸ்கூல் முடிவு ஸ்கீம் அந்த ஸமஸ்தானத்தில் ஏற்படாமலிருந்தால், ட்ரான்ஸ்பர் ஸர்டிபிகேட்டில் அவர்கள் எந்த வகுப்புக்குத் தகுதியென்று குறித்திருக்கிறதோ அந்த வகுப்பில் சேருவதற்கு அனுமதி தரவேண்டும். என்று இப்படி பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## All India Muhammadan Educational Conference.

எல்லா இந்திய மகமதிய கல்வி கான்பரென்ஸ்.—எல்லா இந்திய மகமதிய கல்வி கான்பரென்ஸ் சென்ற டிஸம்பர்மீ 28உ யன்று லக்னௌவில் மேஜர் ஸயித் உசேஸன் பெல்க்ராமியின் அக்ராஸனத்தின் கீழ் கூடியது. அந்தக் கான்பரென்ஸுக்கு ஐக்ய மகாண லெப்டினண்ட் கவர்னர் ஸர் ஜேம்ஸ் மெஸடன் விஜயஞ்செய்திருந்தார். அப்போது மேஜர் ஸயித் உஸேன் பெல்க்ராமி தாம் செய்த ப்ரஸங்கத்தில் மகமதிய யூனிவர்ஸிடி ஸ்தாபனத்துக்கு கவர்ன்மெண்டார் ஸாதகமாயில்லாததைச் சுட்டியும், அந்த யூனிவர்ஸிடி ஸௌகர்யமாய் ஸ்தாபிக்கப்படுகிற வரையில் அலிகர் காலேஜில் அரபி பாஷையும் மற்றக் கீழ்நாட்டுப் பாஷைகளும் சொல்லி வைக்கப்பட்டு வரவேண்டுமென்றும், இந்தியாவில் தொழிலும் வர்த்தகமும் பெருகி இந்ததேசத்தின் பொருளாதார நிலைமை வ்ருத்தியடைய வேண்டுமென்றும் சொன்னார்.

## S. S. L. C. Board.

ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட் போர்ட்.—ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட் போர்டு மெம்பர்ளாக அடியிற்கண்டவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1. ப்ரெஸிடென்ஸி காலேஜின் ஆக்டிங் ப்ரின்ஸிபலாகிய மிஸ்டர் இ. டபல்யூ. மிடில் மாஸ்ட்.
2. கல்வி இலாகா ஆக்டிங்க் டெபுடி டிரெக்டராகிய மிஸ்டர் ஆர். ஜி. க்ரீவ்
3. 7-வது ஸர்கில் ஆக்டிங் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் டி. ஒ. ஹாட்ஜெஸ்.
4. முதலாவது ஸர்க்கில் ஆக்டிங் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் வி. ரான்ஸ்போர்ட்.
5. கர்நூல் கோல்ஸ் மெமோரியல் ஹைஸ்கூலின் ப்ரின்ஸ்பலாகிய ரெவரெண்ட் ஹென்ரிஹுய்ஸிங்கா.
6. சென்னை வெஸ்லி காலேஜ் ப்ரின்ஸ்பலாகிய ரெவரெண்ட் வி. போலார்ட்.
7. திருநெல்வேலி ஹிந்து காலேஜ் ப்ரின்ஸ்பலாகிய மிஸ்டர் ஐ. ஸ்ரீனிவாஸ அய்யர்.
8. பெர்ஹாம்பூர் கள்ளிக்கோட்டா காலேஜின் ப்ரின்ஸ்பலாகிய மிஸ்டர் கே. கணபதி அய்யர்.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### A New Cement.

ஒரு புது ஸிமெண்டு.—முன்பு சென்னையில் ஸூபரின்டெண்டிங் எஞ்சினீராயிருந்த மிஸ்டர் பர்ல்டன் இப்பொழுது இந்தியாவுக்கு வந்திருக்கிறார். சேலம் ஜில்லாவில் அகப்படும் மாக்னிஸைட் என்ற தாதுபொருளைப் பார்வையிடுவதற்காக அவர் லண்டனிலுள்ள ஒரு ஸங்கத்தால் அனுப்பப்பட்டிருக்கிறார். இந்த மாக்னிஸைட்டிலிருந்து ஸிமெண்டைக் காட்டிலும் மேன்மையான பொருள் செய்யலாமாம். சேலத்திலுள்ள சுரங்கங்களிலிருந்து மாஸம் ஒன்றுக்கு மேற்கண்ட பொருள் 2500 டன் கிடைக்கிறது. அவ்வளவும் இப்பொழுது ஜர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அரைக்கப்படுவதற்காக அங்கிருந்து ஹாலந்து தேசத்துக்கு அனுப்பப்படுகிறது. பிறகு தளவரிசைக்கு உபயோகமான பொருளாய்ச் செய்யப்படுகிறது.

### Custard Apple.

சீத்தாப்பழம்.—சீத்தாப்பழம் ரொம்ப ருசியுள்ளதால் அதை யாவரும் விரும்புகிறார்கள். அதற்கு நல்ல் வாஸனையுண்டு. மொரீஷஸ் தீவு பழங்கள் ச்லாக்யமானவை என்று சொல்லுகிறார்கள். இந்தப்பழம் ஸாதாரணமாய் இடங்களுக்குத் தகுந்தபடி 2 அங்குலம் முதல் 5 அங்கும் வரையில் குருக்களவுள்ளதாக வளரும். அது உருண்டையாயிருக்கிறது. மேல் எல்லாம் உருண்டையான மொக்குகள் நிறைந்ததாயிருக்கிறது. செடிகள் பாத்திகளில் வ்ருத்தியாக்கப்பட்டு, பிறகு நல்ல எருவிட்ட லேசானமண்ணில் பிடுங்கி நடப்படுகின்றன.

இரண்டு மூன்று வருஷத்தில் பூக்க ஆரம்பிக்கும். அந்த மரத்தைப் பயிரிடுவதில் முதலில் எடுத்துக்கொண்ட ஜாக்ரதைக்குத் தகுந்தபடி பழமும் லக்ஷணமாயிருக்கும். உஷ்ணமாயும் வரட்சியாயுமிருக்கும் ப்ரதேசங்களில் லேசான மண்ணில் மரம் நன்றாய் வளரும். அதன் பழமும் உயர்ந்ததாயிருக்கும். ஈரமான இடங்களில் மரங்கள் குட்டையாயும் பழங்கள் சிறுத்தும், தாழ்ந்தவைகளாயும் இருக்கும்.

### Making Paper from Bamboo.

மூங்கிலிலிருந்து காகிதம் செய்தல்.—ஜப்பானில் புதிதாய் ஒருகம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது, தொழில்களில் மூங்கிலை உபயோகத்துக்குக் கொண்டுவருவதே அந்தக் கம்பெனியின் நோக்கம். ஜப்பானிலுள்ள கோப் நகரத்துக்கு அருகிலுள்ள ஒரு சாஸ்த்ர ஆராய்ச்சி சாலையில் அநேக சோதனை முறைகளைச் செய்து த்ருப்தியடைந்து, அந்தக் கம்பெனியார் பார்மோஸா தீவில் 8000 ஏக்கரா விஸ்தீர்ணமுள்ள மூங்கில் வளர்ந்த காட்டை நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள். மாஸம் ஒன்றுக்கு 300 டன் மூங்கிலை வேலை செய்வதற்குத் தகுந்த ஒரு தொழிற்சாலையை இப்பொழுது காகி என்ற பட்டணத்துக்கு ஸமீபத்தில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

சீனவில் இளம் போத்துக்களையே கடிதம்செய்வதற்கு உபயோகப்படுத்துவது நீடித்த காலவழக்கம். ஜப்பானில் முற்றின மூங்கிலையும் உபயோகிக்கிறார்கள். தொழிலுக்கு வேண்டிய மூங்கில் கிடைக்குமா என்ற பயமே யில்லை; ஏனென்றால் மூங்கில் அதிக விரைவாக வளரக்கூடியது. மூங்கிலை ஒன்றிரண்டு அங்குல நீளத் துண்டுகளாக வெட்டி, ஸல்பேட் ஆப் லைமுடன் சூளைகளில் வேகவைத்து, நீரில் கழுவி, மின்ஸார சக்தியால் வெளுத்து, மறுபடி கழுவி, இடித்து கூழ்செய்து, நீராவி உதவியால் காயவைத்து பிறகு கடிதமாகச் செய்கிறார்கள்.

### Aluminium.

அலூமினியம்.— இதுவரையில் அலூமினியம் என்னும் உலோகம் பாத்ரங்களும், தட்டம் முதலியவைகளும் செய்ய உபயோகப்பட்டு வந்தது. இது இப்பொழுது வேறுவிதமாகவும் உபயோகப்பட்டு வருகிறது. இதை நூலாக இழுத்துப் பட்டுடன் சேர்த்து உயர்ந்த வஸ்த்ரங்கள் செய்யலாம் என்று தெரிகிறது. அதற்கு இஷ்டப்பட்ட வர்ணமும் கொடுக்கலாம். விசேஷ தினங்களிலும் நாடகங்களிலும் உபயோகப்படும்படியான வஸ்த்ரங்கள் செய்வதில் இதைவிட ச்லாக்யமானது ஒன்றுமில்லை என்றும் சொல்லப்படுகிறது. இந்தியாவில் பகட்டுக்குக் கட்டிக்கொள்ளப்படும் துணி நன்றாய் வ்யாபாரமாகுமாதலால் இந்தப் புதிய அலூமினியம் கைத்தொழில் ஸரியாய் கவனிக்கப்படுமென்று சொல்லலாம்.

# BUSINESS METHODS.
# வ்யாபார முறைகள்.

**Umbrella Lending Company.**

குடை இரவல் கொடுக்கும் கம்பெனி.--குடையை மழைக்கும் வெயிலுக்கும் உபயோகப்படுத்துகிறோம். வீட்டைவிட்டுப் புறப்படும்பொழுது வெயிலும் மழையும் இல்லாமல் பிற்பாடு எங்கே வெயிலிலும் மழையிலும் அகப்பட்டுக்கொள்ள நேரிடுமோ வென்று பல பேர்கள் குடைகளை எப்பொழுதும் கையில் தூக்கிக் கொண்டு போகிறார்கள். தவிர, வேண்டாத காலங்களில் குடையை வீட்டில் வைத்திருந்தால் கெட்டும் கிழிந்தும் போய்விடும். இந்த உபத்ரவங்களை யெல்லாம் ஒழிக்க, ஐரோப்பாவிலுள்ள பெல்ஜியத்தில் "குடை இரவல் கொடுக்கும் கம்பெனி" என்று நூதனமான கம்பெனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அநேக லக்ஷம் ப்ராங்குகள் (ஒரு பராங்கு 9½-அணு) அந்தக் கம்பெனிக்கு மூலதனமாம். ப்ராங்குகளின் தொகையில் பாதியளவுச்குக் குடைகள் இருக்கின்றனவாம்.

இந்தக் கம்பெனியில் சந்தாதாரர்கள் வருஷத்துக்கு 3-ரூபாய் சந்தா செலுத்துகிறார்கள். சந்தாதாரர்களுக்கு கம்பெனியார் நம்பர்போட்ட் அல்யூமினியம் தகடு ஒன்று கொடுக்கிறார்கள். குடையைத் தூக்குவதைவிட இந்தத் தகட்டைக்கொண்டு போவது ஸுலபம். சந்தாதாரர் மழையில் அகப்பட்டு கொண்டால் உடனே அருகிலுள்ள ரெஸ்டோராண்ட் (காபிக்ளப்பு அல்லது ஹோட்டல்), புகையிலைக்கடை அல்லது பெரியகடைக்குப்போய் தம்மிடமிருக்கிற அலூமினியம் தகட்டைக்கொடுத்தால் கடைக்காரர் முதலியவர்கள் ஒரு நல்லகுடையைக் கொடுக்கிறார்கள். மழை நின்று வெயிலடிக்க ஆரம்பித்தால் முன்போல அருகிலுள்ள ரெஸ்டோராண்ட் முதலியவற்றில் குடையைக் கொடுத்துவிட்டு வேறொரு தகடு வாங்கிக்கொள்ளவேண்டியது. இந்த ஏற்பாடு மிகவும் ஸுலபமாய்தான் இருக்கிறது.

**Credit Bargains.**

கடன்கட்டு வ்யாபாரம்.—இந்த விஷயமாக ஒருவிருபர் ஒரு இங்கிலீஷ் பத்ரிகையில் எழுதுகிறார்:— சிலர் கடன்கட்டாக ஸாமான்கள் விலைக்கு வாங்கினால் அதிகவிலை கொடுக்கவேண்டி வரும் என்று எண்ணுகிறார்கள். அப்படி எண்ணுவது பிசகு. கடன்கட்டு வ்யாபாரம் என்பது, ஸாமான் வாங்குபவர் கொடுக்கவேண்டிய பணத்தை நாணயமாய்த் திருப்பிக் கொடுத்துவிடுவார் என்று வ்யாபாரி நம்பி, வாங்குபவரின் ஸௌகர்யத்துக்காகச் செய்த ஏற்பாடேயன்றி வேறல்ல. அநேக ஜனங்கள் கடன்கட்டு வ்யாபாரத்தில் சரக்குகள் மட்டமானவை யென்றும் அவைகளின் விலை அதிகமென்றும் எண்ணுகிறார்கள். அப்படி எண்ணுவதும் பிசகு. வாஸ்தவத்தில் அப்படி ஸாமான்களுக்கு அதிகவிலை கடைக்காரர்கள் ஏற்படுத்துவதில்லை.

ரொக்கத்துக்கு வ்யாபாரம் செய்கிறவன் ரொம்ப ச்லாக்யமான சரக்குகளை விற்பதோடு தனது வ்யாபார ஸாமர்த்யத்தால் வாங்கக்கூடியவர்களை தனது கடைக்கு வரும்படி செய்யவேண்டும். மற்றவர்களை விட மலிவாய் விற்கவேண்டும், சீக்ரம் ஸாமான்களை வாங்குபவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அல்லாமலும், தன் கடையைப் பிறர் கவனித்து வரும்படி ஏதாவது விசேஷமாய்ச் செய்யவேண்டும். அப்படி ஏற்படும் கவனமும் சிறிது காலந்தான் இருக்கும்.

கடனாக ஸாமான்கள் கொடுப்பதில் எத்தனை ரூபாய் வரையிலும் நம்பி ஸாமான் கொடுக்கலாம் என்று தெரிந்து கொடுக்கவேண்டியது அவச்யமாகும். இப்படி கடன் கொடுக்கவேண்டிவந்தால் வ்யாபாரிகள் கடன் வாங்குபவர்களைப்பற்றி பலபேர்களிடத்தில் விசாரித்து இவ்வளவு ரூபாய் வரையில் கடன்கொடுக்கலாமென்று ஒரு வரையறுப்பு ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். சில ஸமயங்களில் வ்யாபாரி குறித்த தொகைக்குமேல் கடன் கட்டாகக் கொடுப்பதென்றால் கொடுத்த சரக்குக்குப்பணம் திரும்பி வருமோவென்று ஸந்தேகித்து மறுபடியும் தக்கவர்களை விசாரிப்பார்கள். சில வ்யாபாரிகள் தக்க நபர்களாயிருந்தாலொழிய இவ்வளவு வரையில் நம்பலாமென்று பிறர் சொன்னாலுங்கூட அவ்வளவு வரையில் கடன்கொடுப்பதில்லை.

ஆனால் இப்படி அதிக ஜாக்ரதையாயிருப்பது எப்போதும் விவேகமல்ல. ஏனென்றால் இவ்வளவு தூரம் ஸந்தேகப்படும் வ்யாபாரி என்று தெரிந்தால் அவனிடத்தில் விசேஷமாய் வ்யாபாரத்துக்கு ஜனங்கள் போகமாட்டார்கள்.

# SCIENCE, MACHINERY AND INVENTION.

## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும் நூதன கற்பிதமும்.

### Superiority of Man over Woman.

மனிதனின் உயர்வு.—பாரிஸ் பட்டணத்தில் ப்ரசுரமாகும் மாடின் என்ற ப்ராஞ்சுப்பத்ரிகை சாஸ்த்ரிகளின் கடைசி ஆராய்ச்சிகளின் ப்ரகாரம் புருஷ ஜாதிதான் ஸ்த்ரீ ஜாதியைவிட மேலானதெனத் தீர்க்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறது. ஏனென்றால் புருஷருடைய தேகத்தில் உப்பு அதிகமாயிருக்கிறதென்றும், ஸ்த்ரீகளுடைய சரீரத்தில் அது குறைவாயிருக்கிறதென்றும் ஆராய்ந்தறியப்பட்டிருக்கிறது. ஜீவராசிகளில் எவைகள் உடம்பில் உப்பு அதிகமாகக் காணப்படுகிறதோ அவைகள் மற்ற இனங்களைவிட புத்தியிலும் பலத்திலும் உயர்ந்திருக்கின்றனவென்று நெடுங்காலமாய் சாஸ்த்ரிகளுக்குத் தெரிந்த விஷயமாம்.

### A Self Rocking Cradle.

தானாகவே ஆடுகிற தொட்டில்.—ஸ்த்ரீகள் குழந்தைகளைத் தொட்டிலிலிட்டுத் தூங்கவைக்க வெகுநேரம் தொட்டிலை ஆட்டிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அதனால் வேறு கார்யங்களை கவனிப்பதற்கும் ஸரிப்படுவதில்லை. ஸமீபத்தில் ஒரு ஸ்காட்லாந்து தேசத்தவர் புதிய தொட்டில் ஒன்று செய்திருக்கிறார். அந்தத் தொட்டிலை தகுந்த ஆதாரங்களின்மேல் ஒரு குறிப்பிட்டவிதமாய் தொங்கவிட வேண்டும். அதோடு ஒரு ஸாமான்யமான யந்த்ரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொட்டிலை ஒரு தரம் ஆடும்படி செய்து விட்டால், அது பிறகு மெதுவாய் ஆடிக்கொண்டேயிருக்கும். கையாலும், காலாலும், ஸாதாரணத் தொட்டிலை யாட்டும்போது தொட்டிலில் கடுமையான ஆட்டமும் குலுக்குதலும் ஏற்படும். குழந்தைக்கும் கொஞ்சம் ச்ரமம் ஏற்படும். இந்தப் புதுத் தொட்டிலில் இந்தக் கஷ்டங்களில்லை. தொட்டில் மெதுவாய் ஆடுவதனால் குழந்தை சீக்ரத்தில் தூங்கிவிடுகிறது. பிற்பாடு, தொட்டிலாடுவதாலும் யாதொரு கெடுதலும் ஏற்படாது. இந்தத் தொட்டிலை ஒரு தரம் ஆட்டிவிட்டால் நாள்முழுவதும் ஆடிக்கொண்டேயிருக்கும். யந்த்ரத்துக்கு சாவிகொடுத்த வுடனே தொட்டில் ஆட ஆரம்பிக்கும். நிறுத்துவது ரொம்ப ஸுலபம். இந்த தொட்டில் அனுஷ்டானத்துக்கு வந்து விட்டால் ஸ்த்ரீகளுக்கு ரொம்ப ஸௌகர்யமாயிருக்குமென்று தோன்றுகிறது.

### What is a Man?

மனிதனென்றால் என்ன?–150 ராத்தல் (பவுண்ட்) எடையும் ஸராஸரிவளர்ச்சியுமுள்ள ஒரு மனிதன் தேகத்தில் 1200 முட்டையிலுள்ள ஸாமான்கள் இருக்கின்றன. அவன் தேகத்திலுள்ள காற்று, 3649 கன அடியுள்ள காஸாமிடர் என்னும் காற்று சேர்த்து வைக்கும் யந்த்ரம் முழுவதும் நிரம்பப் போதுமானது. அவன் தேகத்திலுள்ள இரும்பினால் ஒவ்வொன்று 10 அணு விலையுள்ள 4 ஆணிகள் செய்யலாம். அவன் தேகத்துக் கொழுப்பைக் கொண்டு 75 மெழுகுவர்த்தியும் ஒரு நல்ல பருமனுள்ள ஸோப்பும் செய்யலாம். உடம்பிலுள்ள பாஸ்பரஸ் ஸம்பந்தமான வஸ்துக்களைக்கொண்டு 8064 தீப்பெட்டிகள் செய்யலாம். அவன் தேகத்தில் மற்ற வஸ்துக்களோடு கலந்திருக்கும் ஹைட்ரொஜின் வாயு ஒரு புகைக் கூண்டை நிரம்பப் போதுமானது. அப்படி நிரம்பின கூண்டில் ஏறி மேகத்துக்கப்பாலும் போகலாம். இன்னும் அவன் தேகத்திலுள்ளமற்றப்பொருள்களைக்கொண்டு ஆறு தேக்கரண்டி உப்பும், ஒரு கிண்ணம் நிறைய சர்க்கரையும், 10 காலன் ஜலமும் எடுக்க முடியுமானால் செய்யலாம். அவன் தேகத்தில் 500 தசை நார்களும், ஒரு லக்ஷங்கோடி ஸெல் என்று சொல்லப்படும் ஸூக்ஷ்ம அறைகளும், 200 வெவ்வேறான எலும்புகளும், 43 காலன் ரத்தமும், நூற்றுக்கணக்கான அடி நீளமுள்ள ரத்தக் குழாய்களும், 25 அடி நீளத்துக்கும் மேல்பட்ட குடலும், தோலின் மேல் லக்ஷக்கணக்கான த்வாரங்களும் இருக்கின்றன.

ஹ்ருதயம் 4 முதல் 6 அவுன்ஸ் ரத்தம் கொள்ளக் கூடியது. அது 5 அங்குலம் நீளம், $3\frac{1}{2}$ அங்குல அகலம், $2\frac{1}{2}$ அங்குல கனமுள்ளது. அதன் நிறை 8 முதல் 12 அவுன்ஸ் வரையில் இருக்கும். அது சதையினாலாகிய குழிவான அங்கம். அது ஒவ்வொரு நிமிஷமும் $22\frac{1}{2}$ பவுன் நிறையுள்ள ரத்தத்தை வெளிப்படுத்துகிறது. 1 நிமிஷத்துக்கு 72 தடவை ஹ்ருதயம் அடிக்கிறது. 1 வருஷத்தில் 11,680,000 பவுண்ட் நிறையுள்ள ரத்தம் ஹ்ருதயத்துக்குள் வந்து மறுபடியும் வெளியில் வருகிறது. ஹ்ருதயமானது மனமொப்பி வேலைசெய்யும் அடிமைதான். ஆனால் சில ஸமயம் வேலை செய்யாமல் முரணுகிறது. அப்படி முரணும் போதெல்லாம் அதைத திருப்பமுடிவதில்லை. அதாவது உயிர்போயே தீரும்.

# LAW.
# சட்டம்.

**Right of Uncle to Give a Girl in Marriage.**

பெண்ணை விவாகம் செய்துக்கொடுகரம் பாத்யம்.—இந்துலாவின்படி, ஒரு பெண்ணினுடைய சிற்றப்பன் அந்தப் பெண்ணை விவாகம்செய்து கொடுக்கலாம். ஆனுல் அவர் அந்தப் பெண்ணினுடைய தாயாரின் ஸம்மதம் பெறவேண்டியது அவச்யமாகும். 14-பம்பாய் லா. ரி. 766.

**Darkhast Land.**

தர்க்காஸ்த்து நிலம்.—ப்ரதிவாதி ஒரு நிலம் தன்பேரில் தர்க்காஸ்து ஆக வேண்டுமென்று ஸர்க்காருடைய ரெவின்யூ அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்துகொண்டான். தர்க்காஸ்து நிபந்தனைகளின்படி அந்த நிலத்துக்கு வாதிக்கு ப்ரதிவாதியைவிட அதிக பாத்ய மிருந்தது. ஆனுல் அப்பொழுது வாதி அந்த நிலம் தனக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டான். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ப்ரதிவாதியை அந்த தர்க்காஸ்து நிலத்திலுள்ள சப்பாத்துக் கள்ளியை எடுக்கும்படி சொன்னுர். ப்ரதிவாதியும் கள்ளியை எடுப்பது விஷயமாக ரொம்பப் பணம் செலவழித்தான். அதன்பிறகு வாதி தான் சொன்ன வார்த்தைக்கு (நிலம் வேண்டாமென்று சொன்னதற்கு) மாறுபாடாக தனக்கு அந்த தர்க்காஸ்து நிலம் வேண்டும் என்று ஸர்க்காருக்கு விண்ணப்பம் செய்து, அந்த நிலத்துக்குப் பட்டாப் பெற்றுக்கொண்டு, ப்ரதிவாதி வசமிருந்த நிலம் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று வாதி வ்யாஜ்யம் செய்தான். கீழ்க்கோர்ட்டுகளில் வாதிக்கு ஸாதகமாயிற்று. அதன்மேல் ப்ரதிவாதி ஹைகோர்ட்டுக்கு அபீல்செய்யவே கோர்ட்டார் ப்ரதிவாதி தனக்கு நிலம் வேண்டாம் என்று சொன்னபோது அந்த நிலத்தில் அவனுக்கு பாத்யம் ஏற்படவில்லை என்றும், பிறகு ஸர்க்காரிடம் பட்டாப் பெற்றுக் கொண்டபடியால் அந்நிலத்துக்கு பாத்யமுண்டென்றும் சொல்லி ப்ரதிவாதி பட்சம் தீர்ப்பு செய்துவிட்டார்கள். 12. ம. லா. டைம்ஸ் 539.

**Maintenance of a Hindu Daughter-in-Law.**

ஹிந்து மருமகளுக்கு ஜீவனும்சம்.—முதல் ப்ரதிவாதியின் மருமகள் தனக்குக் கிடைக்கவேண்டிய பாக்கி ஜீவனும்சத்துக்கும், அதன்பிறகு கொடுக்க வேண்டிய ஜீவனும்சத்துக்கும் தன்னுடைய மாமனுர், தன்னுடைய 3 மைத்துனர்கள் ஆகிய இவர்கள்பேரில் தென் மலையாளம் ஜில்லா கோர்ட்டில் தாவா கொண்டுவந்தாள்.

வாதிக்குக் கல்யாணமாகுமுன் முதல் ப்ரதிவாதியும் அவருடைய ஸகோதரர்களும் பாகம் செய்துகொண்டார்கள். அப்படி பாகம்செய்ததில், முதல் ப்ரதிவாதி தன்னுடைய ஸ்வயார்ஜிதத்தை தானே வைத்துக்கொள்வதாகவும், ஒரு துண்டு நிலத்தைத் தவிர குடும்ப ஸொத்தில் வேறொன்றும் வெண்டியதில்லை என்று சொல்ல அதன்படி ஏற்பாடாயிற்று. வாதிக்கு, குடும்ப ஸொத்தாகிய பரம்பா நிலத்திலிருந்து ஜீவனும்சம் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதிக்கப்பட்டது. மேலும் மாமனுருடைய ஸொத்துக்கள் ஸ்வயார்ஜிதமாயிருந்தாலும் இந்து லா பிரகாரம், அவர் தமது மருமகளுக்கு ஜீவனும்சம் கொடுக்கக் கடமைப்பட்டவரென்றும், அப்படியில்லை யென்பதற்கு எடுத்துச்சொன்ன தீர்மான ஆதாரம் இந்து லாவின் நேரான கொள்கைகளுக்கும் தருமத்துக்கும், ந்யாயத்துக்கும் நல்ல மனச்சாக்ஷிக்கும் ஒத்ததாயில்லை என்றும் வாதிக்கப்பட்டது. கோர்ட்டாரவர்கள் தாவாவைத் தள்ளிவிட்டார்கள். இந்தக் கேஸ் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்குவர, ஹைகோர்ட்டார், மிதாக்ஷர சட்டப்படி ஒருவருடைய ஸ்வயார்ஜித ஸொத்திலிருந்து ஜீவனும்சம் அடையக்கூடியபேர்கள் அவருடைய பெற்றோர்கள், மனைவி, சிறு குழந்தைகள், ஆகிய இவர்கள் தானென்றும், வயஸுவந்த புத்ரன் தன்னுடைய தகப்பனுருடைய ஸ்வயார்ஜித ஸொத்திலிருந்து ஜீவனும்சத்துக்கு பாத்தியப்பட்டவனல்ல என்றும், புத்ரனுடைய நிலைமை இப்படியிருக்க, அவன் மனைவியினுடைய நிலைமை புத்ரனுடைய (அவளுடைய புருஷன்) நிலைமையை விட உயர்ந்ததல்லவென்றும், கல்யாணமானபோது மாமனுர் தன் மகன் இறந்தால் மருமகளுக்கு ஜீவனும்சம் கொடுப்பதாகயாதொரு நிபந்தனையும் ஏற்படாததனுல், குடும்ப ஸொத்தாகிய "பரம்பா" நிலத்தில் புத்ரனுக்குக் கிடைக்கக்கூடிய பாகத்தின் பெருமானமாகிய 50 ரூதான் வாதிக்குக் கிடைக்கும் என்றும் கோர்ட்டார் தீர்மானித்தார்கள்.

# MEDICINE.
# வைத்யம்.

## Tulsi.

துளஸி.—துளவி தளத்தை ஹிந்து ஆசார ஸம்ப்ரதாயகர்கள் வெகு பக்தியோடு ஈச்வரனுக்கு அர்ப்பித்து அதை அவர்களும் வாயில் போட்டு மென்று தின்பார்கள். இதைக் கண்டால் நவீன ஹிந்துக்களுக்கு நகைப்பும் பரிஹாஸமும் ஏற்படுகின்றன: நமது முன்னோர்கள் ஆரோக்யத்தை விரும்பியே ஆசாரத்தையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். உண்மையறியாதவர்கள் ஆசார ஸம்ப்ரதாயங்களை இகழ்வதுண்டு. துளவிச் செடியை மேல்நாட்டு வைத்ய விற்பன்னர்களில் சிலர் பரீக்ஷித்தார்கள். "மலேரியா" என்னும் மகா கஷ்ட ஜ்வரத்திற்கு எத்தனையோவித மருந்துகளைக் கண்டுபிடித்தார்கள். துளசியின் உதவியால் ஷை ஜ்வரம் குணயாகிறதென்று பம்பாய் க்ராண்ட் காலேஜிலுள்ள வைத்யர்கள் கண்டிருக்கிறார்கள். இனியாவது நமது ஆர்யர்கள் இந்தச் செடியின் மகத்வத்தை அறிந்துகொள்ளாமலிரார்கள். வீட்டிலும், தோட்டத்திலும், குளக்கரை, ஜலாசயம் முதலிய இடங்களிலும் ஸ்ரீ துளவியை வைத்து வளர்ப்பார்களாக. அதன் காற்றுப் பட்டாலும் தேகாரோக்ய மேற்படுமென்பது திண்ணம்.

## Pure Air.

சுத்த வாயு.—முக்யமாய் படுக்கை அறைகளில் ஸாமான்கள் மிகவும் ஸ்வல்பமாயும் காற்று லேசாய் உள்ளே ப்ரவேசிக்கக் கூடியதாயும் ஜன்னல்கள் கதவுகளெல்லாம் திறந்தும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸ்வாஸித்த காற்றையே மேலும் மேலும் ஸ்வாஸிக்க நேரிடும். ஒரு அழுக்குள்ள ஏனத்தைக் கழுவிய தண்ணீர் எவ்வளவு அசுத்தமாயிருக்கிறதோ அதுபோலவே நம்முடைய உடம்பிற்குள் ப்ரவேசித்து வெளியிலே வருங்காற்றுமிருக்கும். சிற் சில அறியாத்தன்மையுள்ள ஜனங்கள் படுக்கும்பொழுது தலையையும், உடம்பையுந் துணியினாலே நன்றாயிறுக்கி மூடிக்கொண்டு சுத்தவாயுவை ஸ்வாஸிக்க முடியாமல் மேலும் மேலும் விட்டமூச்சையே ஸ்வாஸிக்கிறார்கள். இப்படிச் செய்வதனால் சிலவேளைகளில் மரணம் வரவுங்கூடும். உதாரணமாக, அநேக வருஷங்களுக்கு முன் கல்கத்தாவிலே ஒரு நாள் ராத்ரி 146 மனுஷரை இரண்டு சிறு வாசல்களையுடைய ப்ளாக்ஹோல் என்று சொல்லப்படும் ஒரு சிறு அறையில் விட்டு அடைத்தார்கள். மறுநாட்காலை திறந்து பார்த்தபொழுது 23 மனுஷர் மாத்திரம் நடக்கமுடியாமல் தள்ளாடித் தள்ளாடி வெளியே வந்தார்கள் மிகுதியாயிருந்த அவ்வளவு பெயரும் அன்றிரவே இறந்துபோனார்கள். இவர்கள் யாது காரணத்தினால் இறந்திருக்கக்கூடும்? அசுத்தவாயுவே அதற்குக் காரணம்.

## Travelling Dispensaries.

ட்ராவலிங்க் டிஸ்பென்ஸரிகள்.—வட இந்தியாவிலுள்ள ஐக்யமாகாணங்களில் ட்ராவலிங் டிஸ்பென்ஸரிகள் அதாவது ஊரூராய்ப் போய் வ்யாதியஸ்தர்களுக்கு வைத்யம் செய்து மருந்து கொடுக்கும் ஆஸ்பத்ரிகள் அநேகம் இருக்கின்றன. அவை முதல் முதலில் 1910-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டன. மலேரியாக் காய்ச்சலுக்கும், ப்ளேக்குக்கும் மருந்து கொடுப்பதற்காக இவை ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அவைகளில் வேறு வ்யாதிகளுக்கும் மருந்து கொடுக்கப்படுகிறது. இப்பொழுது 42 ப்ளேக் ட்ராவலிங்க் டிஸ்பென்ஸரிகளும் 15 மலேரியா டிஸ்பென்ஸரிகளும் அங்கே இருக்கின்றன. இந்த வைத்யசாலைகளில் ஒவ்வொன்றும் ஒரு ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் வசம் இருக்கிறது. ஒவ்வொரு வைத்யசாலைக்கும் வருஷம் 2100ரூ செலவாகிறதாம். வைத்யத்துக்கு வேண்டிய ஸாமான்கள் எல்லாம் பெட்டிகளில் வைக்கப்பட்டு ஊர் ஊராய்க் கொண்டு போகப்படும். காய்ச்சல் ரொம்ப அதிகமாயிருக்குமிடங்களில் இரண்டு மூன்று நாள் முதல் 2 வாரம் வரையில் தங்குவார்கள். அநேக ஜனங்கள் இவைகளில் மருந்து வாங்கிக் கொண்டு போகிறார்களாம். அந்தமாகாணங்களில் இவைகள் ஜனங்களுக்கு ரொம்ப ஸாதகமாயிருக்கின்றனவாம்.

இவைகளைப்போலவே சென்னை ராஜதானியில் கோதாவரிஜில்லாவில் இந்த வைத்யசாலைகளை ஏற்படுத்திப்பார்த்ததில் அவை த்ருப்திகரமாயில்லையாம். இப்படிப்பட்ட டிஸ்பென்ஸரிகள் க்ராமாந்தரங்களிலுள்ள ஜனங்களுக்கு ரொம்ப ஸௌகர்யமாகும். இவை ப்ரயோஜனமில்லை என்று உடனே தள்ளிவிடாமல் ஜனங்களிடத்தில் காருண்யமுள்ள டாக்டர்களிடத்தில் இப்படிப்பட்ட டிஸ்பென்ஸரிகளை பொறுப்புக் கட்டினால் அவை ரொம்ப உபயோகமானவையென்று சீக்ரத்தில் தெரிந்துவிடும்.

## FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Unique Advertisement.

ஒரு விந்தையான விளம்பரம்.-ஜர்மெனிதேசத்து ஹானேவர் பட்டணத்து பத்ரிகை ஒன்றில் பின்வரும் விளம்பரம் இருந்தது:—"ஆகாயக்கப்பலில் ஸஞ்சரிக்கும்போது ஒரு தங்கக்கடிகாரமும் சங்கிலியும் விழுந்துவிட்டது. "அல்ஸன்" ஊருக்கு அருகிலுள்ள வயலில் வைக்கோல்போரில் விழுந்து மறைந்தது. எடுத்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த இனம்." எடுத்தவர் அவச்யம் கொடுப்பார்கள்!

### Do You Love Me?

என்னை நேசிக்கிறயா ?.—பிள்ளை:— அம்மா, நீ வாஸ்தவமாய் என்னை ரொம்ப நேசிக்கிறீயா ?

தாய்:—(ஓர் விதவை)—ஆமா, என் கண்ணே.

பிள்ளை:—பின்னை என் நீ அந்த மிட்டாய்க் கடைக்காரனை கலியாணம் பண்ணிக் கொள்ளப்படாது ? எனக்கு ரொம்ப மிட்டாய் கிடைக்குமே.

### Known for 5 Years.

ஐந்து வருஷமாய்த் தெரியும்.—ராமன்:—நான் அனேக நாளாய் பார்க்கவேண்டுமென்று எண்ணின ஆள் நீங்கள்தான் ஐயா, என்னை ஐந்து வருஷகாலமாய் நீங்கள் அறிவீர்களல்லவா ?

க்ருஷ்ணன் ;— ஆம், அதற்கென்ன ?

ராமன்:—எனக்கு ஓர் அவஸரமிருக்கிறது; 5 ரூ. கடனுகக் கொடுப்பீர்களா ?

க்ருஷ்ணன்:—அதுமாத்திரம் கூடாது.

ராமன்:—ஏன் கூடாதென்கிறீர்கள்.

க்ருஷ்ணன்:—உன்னை ஐந்து வருஷமாய் அறிந்திருக்கிறதினுல் தான்.

### Wanted the Head.

தலைவேணும்.—கசாப்புகாரன்:—"தம்பி, என்ன வேணும் ?"

பையன்:—தலை வேணும், ஐயா."

கசாப்பு:—" என்னுடைய தலைதானிருக்கிறது. வேணுமென்ருல் வாங்கிட்டுப்போ"

பையன்:—"அது உதவாது, ஐயா. எஜமான் மூளையிருக்கிற தலைபார்த்து வாங்கிவரும்படி சொன்னுர்."

### What is an Ass ?

கழுதையென்றல் யென்ன ?—தன்னுடைய மகன் அசுசியாயிருந்ததைக் கண்ட தகப்பன் அவனைப் பார்த்து, "என்னடா சழுதையாயிருக்கிருய்' என்று கோபமாய்ப் பேசிவிட்டு "கழுதையென்ருல் என்னவென்று தெரியுமா ?" என்று கேட்டார். பையன், "கழுதை யென்ருல் எங்கப்பன்பிள்ளை" என்று மறுமொழிபகர்ந்தான்.

### Beat for Biting.

கடித்ததற்காக அடித்தது.— "அப்பா, நான் தங்கையைக் கடித்ததற்காக என்னை அடித்தீர்களே. ஞாபகமிருக்கிறதா ?" என்று பையன் தகப்பனைக் கேட்டான். "ஆம், மற்றவர்களைக் கடிக்கிறது பெரியபிசகல்லவா" என்று தகப்பன்சொல்ல, பையன் மறுபடியும் தகப்பனைப் பார்த்து "அப்படியானுல் அத்திம்பேரையும் அடிக்கவேண்டும். நீங்கள் ஆபீஸுக்குப் போயிருந்தபொழுது அத்திம்பேர் இங்கே வந்து அக்காள் கழுத்தை இருகப்பிடித்துக்கொண்டு கன்னத்தை வெகுநேரம் விடாமற் கடித்தார்" என்று சொன்னுன்.

### Perpetual Quarrel.

என்னேரமும் சச்சரவு.—புருஷனும் பெண்சாதியும் என்னேரமும் சச்சரவு செய்துக் கொண்டிருந்த ஒரு வீட்டில் ஒருவன் வந்து, அந்தப் புருஷனைப் பார்த்து "நீங்களிருவரும் என்னேரமும் என் சச்சரவு செய்கிறீகள், ஒரு மனதாயிருக்கலாகாதா ?" என்ருனும். அதுகேட்ட அப்புருஷன், "ஐயோ ! எங்களிருவருக்கும் ஒரேமன திருப்பதனுற்ருனே தினந்தோறும் சச்சரவா யிருக்கிறது. அதெப்படியென்ருல், அவள்பேரில் அதிகாரம் செலுத்த எனக்கிஷ்டம். என்பேரில் அதிகாரம் செலுத்த அவளுக்கிஷ்டம்" என்ருன்.

### Valuable Pen.

மதிப்புள்ள எழுதுகோல்—எட்வர்ட் மாஹாராஜா அவர்கள் தென்னுப்பிரிகாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கும் விஷயமாய்க் கையெழுத்து செய்த பேனவை அந்த ராஜாங்கத்தார் க்ஷேம நிதியைப் போல காப்பாற்றுகிருர்கள்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Musical Entertainment for Prisoners.

கைதிகளுக்கு ஸங்கீதக் கச்சேரி.—கைதிகள் அதிக ச்ரமப்படுவதால் ப்ரான்ஸிலுள்ள பெந்தள்வீல் என்ற சிறைச்சாலையில் பாடக்கூடியவர்களை ஒன்று சேர்த்து ஒருமணி நேரம் பாடும்படி செய்கிறார்கள். அதேமாதிரியாக ஜர்மெனி தேசத்திலும் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

### Letters in the Eyes

கண்களில் எழுத்துகள்.—இரண்டு வயதுள்ள ஒரு ஆண் குழந்தையின் கண்கள் விசித்ரமாயிருந்த தாக அமெரிக்காவிலுள்ள வைத்யர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். கால் அங்குல உயரமுள்ள இரண்டு எழுத்துக்கள் இரண்டு கண்களில் இருப்ப தாகக் கண்டார்கள். அக்குழந்தையின் தாய் தந்தையர் அது பிறப்பதற்கு முன்னால் அதற்கு ஒரு பெயர் இடுவதாகத் தீர்மானித்திருந்தார்கள். அந்தப் பெயரின் முதல் எழுத்துகள் அக்குழந்தை கண்களில் இருந்தன. வலதுகண் மத்தியில் பச்சிலை குத்தினாற்போல ஜே (J) என்னும் ஆங்கில எழுத்து அச்சடித்திருந்தது. இடது கண்ணில் அதேமாதிரியாக டி (D) என்னும் எழுத்து இருந்தது. பிலடெல்பியா நகரத்து வைத்ய நிபுணர்கள் அக்குழந்தையின் கண்களைப் பரிசோதனை செய்தும் அந்த விசித்ர ரூபத்துக்குக் காரணம் சொல்லக்கூடவில்லை. அக்குழந்தையின் கண்கள் நல்ல பார்வையோடுகூடியிருக்கின்றன. தேகமும் ஆரோக்யமாயிருக்கிறது. இவ்வாறு ஒரு ஆங்கிலப் பத்ரிகை எழுதுகிறது.

### Fire Caused by a Bird.

ஒரு குருவி வைத்த நெருப்பு.—அமெரிக்காவில் வல்பரிஸோவிலுள்ள இந்தியானா ஸர்வ கலாசாலையின் கோபுரம் நெருப்புப்பட்டெரிந்தது. சிட்டுக்குருவி யொன்று நெருப்போடு தெருவிலே கிடந்த பீடி ஒன்றைக் கவ்விப்போய் குருவிக்கூட்டின் வைக்கோலிலே போட நெருப்பு மூண்டு கோபுரம் எரிந்ததாம்.

### A Big Fish.

ஒரு பெரிய மீன்.—திருமுல்லை வாசல் ஸமுத்ரத்தில் செம்படவர்கள் வலையில் பிடித்த வேலா என்னும் மீன் 20 அடி நீளம் 6 அடி அகல முடையதாக விருந்தது. மீன் வயற்றில் தேங்காயளவான 12 முட்டைகள் இருந்தன. அந்த மீன் 50 ரூபாய்க்கு ஏலத்தில் விடப்பட்டது.

### A Wonderful Clock.

ஒரு ஆச்சரியமான கடிகாரம்.—ருஷியா தேசத்துத் தலைநகரமாகிய ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 95 முகங்கள் (அதாவது டயல்கள்) உடைய ஒரு ப்ரமாண்டமான கடிகாரமிருக்கிறதாம். அது உலகத்திலுள்ள முப்பது முக்ய தேசங்களின் நேரத்தையும் பூமியினுடையவும் மற்ற க்ரகங்களினுடையவும் இயக்கங்களையும் காட்டுகிறதாம்.

### A Curious Kid.

ஒரு விநோத ஆட்டுக்குட்டி.—திருச்செந்தூர்த் தாலூகா மெய்ஞானபுரத்தைச் சேர்ந்த காக்கிவிளையென்னு மூரில் சென்ற கார்த்திகை மாதம் 18-ந் தேதி ஒரு செம்மறியாடு ப்ரஸவ வேதனை ஸகியாது வருந்துவதைக்கண்டு அதன் வயிற்றை வைத்யர் அறுத்துச் சோதித்தபோது அதில் 2 தலையும் 2 காதும், 2 வாயும் 8 காலுமுடைய குட்டி யிறந்து கிடந்ததாம்.

### The Curious Extinction of a Family.

ஒருகுடும்பம் நாசமடைந்த விநோதம்.—ஹங்கேரியைச் சேர்ந்த டெப்ரீஸினிலிருக்கும் ஒரு கல்லறையில் அடியிற் குறிப்பிட்டிருக்கும் 4 விளம்பரங்கள் காணப்படுகின்றனவாம்.

1. ஜோஸெப் மாரிட்ஸ 62 வது வயதில் தன்னுடைய குமாரனால் கொலை செய்யப்பட்டான்.

2. இஸபெல்லா மாரிட்ஸ் மேற்படியானுடைய மனைவி; 47 வது வயதில் தன்னுடைய குமாரத்தியால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டாள்.

3. எலிஸெபெத் மாரிட்ஸ் மூத்தவள். 20 வது வயவில் தன் தாயாருக்கு விஷங்கொடுத்துக் கொன்று தானுந் தற்கொலைசெய்து கொண்டாள்.

4. ஜோஸெப் மாரிட்ஸ் இளையவன். தன்னுடைய தகப்பனாரைக்கொன்று, அதுகாரணமாகத்தான் ஜெயிலில் அடைக்கப்பட்டு 27-வது வயவில் இறந்து போனான்.

ஒரு குடும்பம் முழுவதும் கொலையினாலும் தற்கொலையினாலுமே ஒழிந்தது. இது விந்தையாகவேயிருக்கிறது.

## HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### Cleaning Old Silk Fabrics.

பழைய பட்டைப் புதிதாக்குதல்.—பழைய பட்டை புதிதாக்க வேண்டுமானால் தேயிலையைக் காய்ச்சின கஷாயத்தைக் குளிரச்செய்து கொஞ்சம் நவசார த்ராவகம் சேர்த்து பஞ்சால் துடைக்கவும்.

### Driving Nails.

ஆணி யடித்தல்.—உறுதியான மரத்தில் ஆணி யடிக்கையில், சில ஸமயங்களில் ஆணிகள் வளைந்து போகின்றன. ஆணியை எந்த எண்ணெயிலாவது தோய்த்து அடித்தால் வளையாது.

### Boiling Eggs.

முட்டைகளை அவித்தல்.—முட்டைகளை அவிக்கும்போது வெடியாவண்ணம் முட்டையின் அகலமான நுனிப்புறத்தைத் தண்ணீருக்குள் போடுமுன் குண்டூசியாற் குத்திவிடவும்.

### To Test a Cow in Calf.

பசு சினையாயிருப்பதைக் கண்டுபிடிக்க.—பசு சினையாயிருக்கிறதைக் கண்டுபிடிக்கிறதற்கு பின்கண்டது ஓர் உபாயம். அந்தப் பசுவின் பாலைக்கறந்து ஒரு வைக்கோலை அதில் விட்டு ஒரே துளி எடுத்து பக்கத்தில் வைத்திருக்கும் தெளிவான ஜலத்தில் போடவேண்டியது. பால் எங்கும் பரவி ஜலம் வெளுத்துக்காட்டினால் சினையில்லை யென்பதற்கு அடையாளம். துளி, ஜலத்தோடு கலப்பதற்கு முந்தி, பாத்திரத்தினடியில் அப்படியே இறங்கினால் சினை யென்பதற்கு அடையாளம்.

### Damp Bed.

ஈரமான படுக்கை.—அநேக ஜனங்கள் ஜலதோஷத்தால் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு ஒரு காரணம் படுக்கை ஈரமாயிருப்பது. படுக்கை ஈரமாயில்லையா என்று கண்டுபிடிக்க பின்சொல்லப்படும் முறையைச் செய்து பார்க்கலாம். படுத்துக்கொள்ளப் போகுமுன், கைக் கடியாரத்தையாவது முகம் பார்க்கும் கண்ணாடியையாவது படுக்கையில் வைக்கவும். படுக்கை ஈரமாயிருந்தால் கண்ணாடி ஈரத்தால் மங்கியிருக்கும்.

## TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### A Statue to Parimelazhagar.

பரிமேலழகர் விக்ரகம்.—திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறளுக்கு அதன் தத்வார்த்தங்களை யறிந்து, மிக உயர்ந்த உரை எழுதிய பரிமேலழகருக்கு ஒருவிக்ரகம் செய்து திருமயிலையிலுள்ள திருவள்ளுவ நாயனாரது கோயிலில் ப்ரதிஷ்டை செய்ய அநேக பக்தர்கள் முயற்சிசெய்து வருகிறார்கள்.

### Domestic Economy.

க்ருகபரிபாலனம்.--இந்தப்புஸ்தகம் டி.பி. மாசிலாமணிப்பிள்ளை எழுதியது. வீடு, ஆகாரம் பதார்த்தங்களும் அவைகளின் குணங்களும், பாகம் (சமைத்தல்) உடை, வரவு செலவு, ஆரோக்யமும் வ்யாதியும், தற்செயலாய் நிகழும் அபகட ஸம்பவங்கள், இல்லாள், என 9 அத்யாயங்கள் அடங்கியிருக்கின்றன. இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்படும் விஷயங்கள் ரொம்பவும் த்ருப்திகரமாயிருக்கின்றன. வரவு செலவு, அஸம்பாவித ஸம்பவங்கள், இவைகளை ஸத்ரீகள் அவச்யம் படிக்கவேண்டியது. இல்லாள் என்னும் அத்யாயத்தில் வாழ்க்கைத் துணைநலம், கணவர் வெறுக்கும் காரணம், க்ருககார்யம், பார்யாள் கடமை, தம்பதி வாழ்க்கை முதலிய பிரிவுகள் இருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் தெளிவாய் அநேக மேற்கோள்களுடன் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளை ஸ்த்ரீகள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பது நாம் சொல்லவேண்டியதில்லை. இந்தப் புஸ்தகம் ஒவ்வொருவரும் வாங்கி வாசிப்பது நன்மை என்றெண்ணுகிறோம். இதன் விலை 12-அணா தான். வேண்டுவோர் டி. பி. மாசிலாமணிப்பிள்ளை, 20, பொரல்லா க்ராஸ்ரோட், கொழும்பு, என்று எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

# DIARY OF THE MONTH.

## தின வர்த்தமானம்.

[இங்கே சொல்லிய ஸமாசாரத்தைப்பற்றி இன்னும் விவரங்கள் வேண்டுமானல் அதைச்சேர்ந்த பகுதிக் குறிப்பையும் பார்க்கவும்.]

1912௵ டிஸம்பர்மீ 16-தேதி.—

லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் எலெக்ஷன் ஆரம்பம்.—சென்னை ராஜதானியில் உள்ள 9-ஜில்லாத் தொகுதிகளிலுமுள்ள போர்ட் முனிஸிபாலிடிகளின் ப்ரதிநிதிகள் இன்று தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

பால்கன்யுத்த ஸமாதான கான்பரென்ஸின் ஆரம்பம்.—ஐரோப்பாவின் தென்கிழக்கிலுள்ள துருக்கிக்கும், க்ரீஸ், பல்கேரியா, ஸெர்வியா, மாண்டிநீக்ரோ ஆகிய நான்கு தேசங்களுக்கும், கொஞ்ச காலமாய் யுத்தம் நடந்து வருவது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். அந்தயுத்தத்தை நிறுத்தும் விஷயமாய் இன்றையதினம் லண்டன் ஸெண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் ஸமாதான கான்பரென்ஸ் ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் கண்டிப்பான போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டது. துருக்கி ப்ரதிநிதிகள் முதலில் வந்தார்கள். அவர்களின் பின் ஸெர்வியர்கள், மாண்டிநீக்ரோக்கள், பல்கேரியர்கள், க்ரேக்கர், இவர்கள் சென்ருர்கள். ப்ரிட்டிஷ் அந்யவிஷய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே கான்பரென்ஸைத் திறந்து வைத்தார்.

17-தேதி.—

மைலாப்பூர் ஸ்த்ரீகள் ரிக்ரியேஷன் க்ளப்பு.—மீட்டிங்க் நடந்தது.

18-தேதி.—

மிஸ்டர் தேவராஜ அரசு காலஞ் சென்றர்.—மைஸூர் இரண்டாவது கவுன்ஸில் மெம்பரும், மகாராஜாவின் நெருங்கிய பந்துவுமான மிஸ்டர் தளவாய் தேவராஜ அரசு மரணமடைந்தார்.

19-தேதி.—

தஞ்சாவூர் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—தஞ்சாவூர் பெஸண்ட் லாட்ஜில் கூடிற்று.

20-தேதி.—

தூத்துக்குடியில் சைவஸித்தாந்த ஸபை.-29-ம் வருஷாந்தரக் கொண்டாட்டம் நடந்தேறியது. புரவிபாளையம் ஜமீன்தார் அக்ராஸனம் வகித்தார். பல ஊர்களிலிருந்தும் அநேக ஜனங்கள் வந்திருந்தார்கள். ஸித்தாந்த தத்வ சாஸ்த்ரத்தைப்பற்றி அனேக ப்ரஸங்கங்கள் செய்யப்பட்டன. இவ்வருஷம் ஸ்த்ரீகள் அநேகம்பேர் வந்திருந்தது ஒரு விசேஷம்.

கும்பகோணம் முனிஸிபாலிட்டி கிணறுகள்.—ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் கும்பகோணத்தில் முனிஸிபாலிடியார் கட்டியிருக்கும் ஆர்டிஸியன் கிணறுகளைத் திறந்துவைத்தார்.

21-தேதி.—

தூத்துக்குடியில் சைவஸித்தாந்த ஸபை.—இரண்டாவது நாள் மீட்டிங் நடந்தது.

சென்னை மகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.—சென்னை பச்சையப்பன் ஹாலில் கூடிற்று. சென்னை கவர்னர் விஜயம் செய்திருந்தார். ஆனரபில் ஸர்ஜான் அட்கின்ஸன் அக்ராஸனாதிபதியா யிருந்தார்.

டாக்டர் டி. எம். நாயருக்கு விருந்து.—சென்னை சட்ட ஸபைக்கு சென்னை கார்பொரேஷன் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் டி. எம். நாயருக்குச் விக்டோரியா மண்டபத்தில் ஒரு விருந்தளிக்கப்பட்டது. அப்போது சென்னையிலுள்ள அநேக ப்ரபல டாக்டர்களும், இந்திய ஐரோப்பிய கனவான்களும் விஜயஞ் செய்திருந்து விருந்தைச் சிறப்பாய் நிறைவேற்றினர்கள்.

திருவாதி பரிஷத்து.—பரிஷத்து பஞ்சநதத்தில் (திருவையாறு) ஆரம்பம் ஆயிற்று. இந்தப்பரிஷத்துக்கு ஜாம்நகரம், பாவநகரம், உத்கலம், ஆந்த்ரம், மகாராஷ்டிரம், மலையாளம், மைஸூர், தொண்டை மண்டலம், விஜயநகரம், முதலிய தேசங்களிலிருந்து பண்டிதர்கள் வந்து சேர்ந்திருக்கிருர்கள். அந்த ஸபைக்கு மகாமகோபாத்யாயரான சந்த்ரசேகர சாஸ்திரியார் நாயகராக இருந்தார்.

ப்ரௌடா விவாகம் சாஸ்த்ர ஸம்மதமா? இல்லையா? என்பதைப்பற்றி விசாரம் நடந்தது. பண்டிதர்கள் அனைவரும் ஸம்ஸ்கிருதத்திலேயே பேசினர்கள்,

22-தேதி.—

சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—இரண்டாவதுநாள் மீட்டிங் நடந்தது.

தூத்துக்குடியில் சைவஸித்தாந்த ஸபை.—மூன்றாவது நாள் கூட்டம் கூடிற்று.

திருவாதி பரிஷத்து.—இரண்டாவது நாளும் ப்ரௌடா விவாகத்தைப்பற்றியே விசாரம் நடந்தேறிற்று.

மைலாபூர் ஸமஸ்க்ருத காலேஜைச் சேர்ந்த ப்ரும்மஸ்ரீ டி. வி. ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரிகளால் செய்யப்பட்ட "விவாக கால விமரிசம்" என்கிற க்ரந்தத்தில் சில பாகங்களைப்பற்றி ஆட்சேபணை ஸமாதானங்கள் நடந்தன.

23-தேதி.—

வைஸ்ராயின் டெல்லிநகர ப்ரவேசம்.—மாட்சிமை பொருந்திய ராஜப்ரதிநிதி, லேடி ஹார்டிஞ்சு, கூட வந்த மற்றவர்கள் முதலினோரையும் ஏற்றிவந்த ஸ்பெஷல் ட்ரெயினானது இன்று காலமே 11-மணிக்கு டெல்லி ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் வந்து நின்றது. ராஜப்ரதிநிதியைப் பார்ப்பதற்கு ஸ்டேஷனில் திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். பஞ்சாப் லெப்டினெண்ட் கவர்னராகிய ஸர் லூயிடேன், காஷ்மீர் மகாராஜா, ராம்பூர் நவாப், டெல்லி சீப் கமிஷனர், ராஜப்ரதிநிதியின் எக்ஸிகியூடிவ் கௌன்ஸில் மெம்பர்கள், வடபாக ஸைந்யத்துக்குத் தலைவராயிருக்கும் கம்மாண்டர் முதலினோர் காத்திருந்தார்கள். 13-வது ராஜபுத்ர வாத்யக்காரர் பாண்டு வாத்யம் முழங்கினார்கள். கோட்டையின் மதகுகளிலிருந்து ராஜப்ரதிநிதி வந்ததின் அறிகுறியாக மரியாதை வேட்டுகள் போடப்பட்டன.

ஸர் லூயி டேன் முன்சென்று ராஜப்ரதிநிதியையும் லேடி ஹார்டிஞ்சையும் வரவேற்றார். ராஜப்ரதிநிதியுடன் சிறிதுநேரம் பேசியானபிறகு, ஸர் லூயிடேன் தேசமன்னர்களை லார்ட் ஹார்டிஞ்சுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதற்குப்பிறகு டெல்லி முனிஸிபாலிடியார் தங்கள் அட்ரெஸை வாசித்துக் கொடுக்க அதையேற்று ராஜப்ரதிநிதி பதில் சொன்னார். அப்புறம் சிறிது நேரத்துக்கெல்லாம் ஊர்கோலம் புறப்பட்டது. ராஜப்ரதிநிதியும் லேடி ஹார்டிஞ்சும் பரீத்கோட் ராஜாவின் யானையாகிய மதுஜாஜின் மேலேறிக் கொண்டார்கள். லெப்டினண்ட் கவர்னர் முதலான மற்றவர்கள் வேறு யானைகளில் ஏறிக்கொண்டார்கள். ஊர்கோலம் சந்த்னிச்சௌக்கில் மணிக்கூண்டைக் கடந்து டவுன்ஹாலண்டை போய்கொண்டிருந்தது.

வைஸ்ராயின்மேல் வெடிகுண்டு.—அப்போது சந்த்னி சௌக்கில் ஒரு வீட்டின் கூரையிலிருந்து ராஜப்ரதிநிதியின்மேல் ஒரு வெடி குண்டெறியப்பட்டது. ராஜப்ரதிநிதிக்கும் லேடி ஹார்டிஞ்சுக்கும் பின்னே யிருந்த ஒரு ஜமேதார் அவ் வெடிகுண்டுபட்டிறந்தார். ராஜப்ரதிநிதிக்குப்பல காயங்கள் பட்டன. லேடி ஹார்டிஞ்ச் யாதொரு காயமுமின்றித் தப்பினார். தமக்குப்பட்ட காயங்களிலிருந்து ரத்தம் பெருகிக்கொண்டே யிருக்க, அதைப் பொருத்துக்கொண்டு, ராஜப்ரதிநிதி, இதற்காக ஊர்கோலத்தை நிறுத்த வேண்டியதில்லை, அது நடக்கட்டும், என்று சொன்னார். ஆனால் லேடி ஹார்டிஞ்ச் ராஜப்ரதிநிதிக்கு பலத்த காயங்கள் பட்டிருப்பதையும், அவருக்கு ஞாபகம் தப்பிப் போவதையும் பார்த்து, ஊர் கோலத்தை நிறுத்தினார். உடனே ராஜப்ரதிநிதியின் ஸர்ஜன் ஸரியான ரண சிகித்ஸைகளைச் செய்து அவரை வைஸ்ரீகல் மாளிகைக்கு எடுத்துச் செல்லும்படியான ஸ்திதிக்குக் கொண்டுவர, ராஜப்ரதிநிதி அவர் ஏறியிருந்த யானையின்மேலிருந்து கீழேயிறக்கப்பட்டு மோடார் வண்டியில் வைத்து, வைஸ்ரீகல் மாளிகைக்குக்கொண்டு போகப்பட்டார். ஸாயங்காலம் 6-மணிக்கு ராஜப்ரதிநிதிக்கு மயக்கம் கொடுத்து ரணசிகித்ஸை செய்து அவருடைய வலது தோள் பட்டையின் பின்புறத்திலிருந்து மூன்று சிறிய ஆணிகளும் இரும்புச் சன்னங்களும் எடுக்கப்பட்டன. அவருக்கு வலது தோள் பட்டையின் பின்புறத்தில் பட்டிருக்கும் காயம் 4 அங்குல நீள முள்ள பலத்த காயம். கழுத்தின் வலது பக்கத்திலும் இடுப்பின் வலது பக்கத்தில் 4 இடங்களிலும் பட்டிருக்கும் காயங்கள் ஸ்வல்ப காயங்கள். அவருடைய தேகஸ்திதி த்ருப்திகரமா யிருப்பதாகவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வெடி விழுந்த விதம்.—வைஸிராய் அவர்கள் உட்கார்ந்திருந்த அம்பாரி இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் வகுப்பில் வைஸிராய் அவர்களும் அதற்குப் பின் பாகத்தில் குடை பிடிப்பவர்களும் ஸிப்பந்திகளும் இருந்தார்கள். வெடி இவ்விரு வகுப்புகளின் மத்தியில் விழ வைஸ்ராய்

அவர்களது பின்பக்கத்தில் காயமும் விப்பந்திகளில் சிலர்க்கு படுகாயமும் உயிர் துறக்கவும் நேரிட்டது.

தப்பிய விதம்.—வெடி குண்டு அம்பாரியின் இரண்டு பகுப்புகளின் மத்தியில் விழுந்ததால் வைஸ்ராய் அவர்களது சாய்மான பின்பாகத் தடுக்கு அதைத் தடுத்து வைஸ்ராய் அவர்களைக் காப்பாற்றியது.

நகரப்ரவேசம் நடந்தது.—ஆனால் இன்றயதினம் டில்லி நகரப்ரவேசம் ஒருவாறாக முடிவு பெற்றது. ஸர் ஹென்ரி மெக்மோஹன் தர்பாரின் ஆரம்பத்தை விளம்பரப்படுத்த, பஞ்சாப்-லெப்டினென்ட் கவர்னரான ஸர்-லூயி டேன் ஒரு நீண்ட உபந்யாஸஞ் செய்து "இதுவரை என்னுடைய ஆளுகையிலிருந்த டெல்லி மாநகரை இனி ராஜப்ரதிநிதியின் ஆளுகைக் கொப்புவித்தேன்" ஒன்று கூறினார். ராஜப்ரதிநிதி நிர்வாக ஸபையின் முதல் மெம்பரான ஸர் கை ப்ளீட்வுட்வில்ஸன் அவர்கள் தர்பார் ஹாலில் ராஜப்ரதிநிதியின் ஆஸனத்தில் வீற்றிருந்து அப்போது ராஜப்ரதிநிதி செய்யவேண்டியதைச் செய்தார். ராஜப்ரதிநிதியின் டெல்லி நகரப்பிரவேச ஊர் கோலத்திற்குக் காஷ்மீர் மகாராஜா முதலியவர்கள் விஜயஞ் செய்தார்கள். அவர்கள் யாவரும் ரொம்பவும் வருத்தமுற்றுப் பரிதாப மடைந்திருந்தார்கள்.

வைஸ்ராய் சொன்னது.—ராஜ ப்ரதிநிதியவர்கள் வெடிகுண்டு பட்ட அவஸ்தையோடு, 'என் பிராணனை வாங்கச்செய்த முயற்சியால் எனக்கு இந்தியாவிடத்திலும் இந்தியரிடத்துமுள்ள நேசப்பான்மை நீங்காது; அது என்னுடைய ராஜ்ய முறையிலும் ஆளுகையின் தன்மையிலும் மாற்றுதலைச் செய்யாது; இந்தியா முற்றும் திகிலும் வெட்கமுமடைந்து மகிமை குறைந்துபோகுமே யென்று நான் அநுதாப மடைகின்றேன்' என்று கூறினார்.

50,000 ரூபாய் வெகுமதி.—இந்தியா ராஜப்ரதிநிதியாகிய ஹிஸ் எக்ஸலேன்ஸி லார்ட் ஹார்டிஞ்ஜின் பேரில் 1912-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 23-ந் தேதி டெல்லி சண்ட்னி சவுக்கில் வெடி குண்டு எறிந்த குற்றவாளி அல்லது குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு ஸாதகமாயுள்ள ஸமாசாரத்தை அறிவிக்கிற வர்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் வெகுமதி யளிக்கப்படு மென்று தெரிவிக்கப்படுகிறது.

போலீஸார் விசாரணை செய்வதற்கு உதவியாக ஏதாவதொரு தகவல் கொடுக்கக் கூடியவர்களுக்கும், வெடிகுண்டைத் தயார் செய்த மனிதர்களை யாவது, அல்லது அந்தக் குற்றத்தில் ஸம்பந்தப் பட்டவர்களையாவது கண்டுபிடிப்பதற்கு ஸாதகமாயுள்ள ஏதாவதொரு தகவல் தெரிவிக்கிறவர்களுக்கும் நல்ல வெகுமதிகள் கொடுக்கப்படும்.

திருவாதி பரிஷத்து.—பண்டிதர்கள் முன்கூறிய விஷயங்களைப்பற்றியே வாதிக்கத் தொடங்கியபோது செய்த ஆட்சேபங்கள் யாவற்றுக்கும் மேற் சொன்ன க்ரந்தத்தில் ஸமாதானம் சொல்லப்பட்டவைகளாகவே இருந்ததைப்பற்றி அந்த வாதம் நிறுத்தப்பட்டு அந்த ஸபைமுடிந்தது. பிறகு மாலை 3 மணிக்கு ஸபை கூடிற்று. அப்பொழுது வேதங்களிலுள்ள லிங்கங்களுக்கும் (சில தர்மங்களை நேரில் விதிக்காமல், வேதங்கள் சொல்லிக்கொண்டு போகும் விதத்தினாலேயே அறிவிக்கும் குறிகள்), ஸ்ம்ருதிகளிலுள்ள நேர் விதிகளுக்கும் விரோதம் இருக்கும் இடத்தில் எவை பலமுள்ளவை என்பதைப்பற்றி ஆராய்ச்சி நடந்தது.

24-தேதி.—

வைஸ்ராயின் தேகஸ்திதி:—ஸாயந்திரம் வைஸ்ராய்க்கு க்ளோரோபாம் மயக்கம் கொடுத்து காயத்திலிருந்த இரும்புத் துணுக்குகள் எடுக்கப்பட்டன.

திருவாதி பரிஷத்து.—காலையில் முன்கூறிய விஷயங்கள் விமரிசிக்கப்பட்டன. ஒருவாறு ஸித்தாந்தம் இன்ன தென்று நிச்சயமாய்த் தீர்மானிக்கப்பட்டதாகச் சொல்லமுடியாமலே 10 மணிக்கு ஸபை கலைந்தது. மாலை 3 மணிக்கு ஸபை மறுபடியும் கூடிற்று, அதில், ஸமுத்ர யாத்ரை செய்தவர்களை ப்ராயச்சித்தம் செய்து சேர்த்துக்கொள்ளுகிறதைப்பற்றி விமர்சிக்கப்பட்டது.

25-தேதி.—

திருவாதி பரிஷத்து.—மிஸ்டர் வி. பி. மாதவராவ் ஸி. ஐ. இ. யும். ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரும் வந்திருந்தார்கள். பரிஷத்து கூடினதும், டெல்லி அராஜகச் செயலைப்பற்றி வைஸிராயிக்கு அனுதாபங்காட்டி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. மிஸ்டர் வி. பி. மாதவராவின் ப்ரஸங்கத்தின் மொழிபெயர்ப்பு வாசிக்கப்பட்டது. அதன் பிறகு ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் ஸம்ஸ்க்ருத அபிவ்ருத்தியைப்பற்றித் தமிழில் ப்ரஸங்

கம் செய்தார். பிறகு அநேக பண்டிதர்கள் உபந்யா ஸம் செய்தார்கள்

26-தேதி.—

இந்தியன் நாஷனல் காங்க்ரேஸ்:—இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் பங்கிப்பூரில் கூடிற்று. உபச ரணைக்கமிட்டி சேர்மனுகிய மிஸ்டர் மாஷருல் ஹக்கும் ப்ரெஸிடெண்டாகிய மிஸ்டர் மதோல்கா ரும் டெல்லியில் ராஜப்ரதிநிதிக்கு நேர்ந்த அபாய கரமான ஸம்பவத்தைக் குறித்துப் பேசிவிட்டு தங் களுடைய ப்ரஸங்கங்களைச் செய்தார்கள். விஷயக் கமிட்டி கூடுவதற்கு முன்னே டெல்லியில் நடந்த அராஜகச் செயலை வெறுத்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

திருவாதி பரிஷந்து.—ஸ்ம்ருதியிலும் ச்ருதியிலும் விவாகவிஷயங்களில் சிலவற்றில் வித்யாஸம் காணப் படும்போது எதை ஆதாரமாக வைத்துக்கொள்வது என்பதைப்பற்றி வாதம் நடந்தது.

27-தேதி.

இந்தியன்நாஷனல் காங்க்ரேஸ்.—காங்க்ரெஸ் கூடியவுடன் அர்ராவாவியாகிய மிஸ்டர் முகம்மது இஸ்மேலால் உருதுபாஷையில் செய்யப்பட்ட ஒரு கவி காங்கிரஸ் முன் படிக்கப்பட்டது. ஒவ்வொரு அடியும் படிக்கப்படவே, கேட்டிருந்தவர்கள் ஸந் தோஷத்தால் கூச்சலிட்டு ஆரவாரித்தார்கள். படித் து முடிந்தவுடன் ஸபையில் உத்ஸாகம் அடங்கி அமைதி பிறக்கச் சற்று நேரங் கழிந்தது. இந்தி யாவின் முன்னேற்றத்தின் பொருட்டு ஹிந்துக்க ளும் மகம்மதியர்களும் ஒருவர்க் கொருவருள்ள நாள்பட்ட மனஸ்தாபங்களை ஒழித்து ஒத்துழைக்க வேண்டும், இரு வகுப்புகளும் தம்தம் தப்பெண் ணங்களை விட்டுவிட வேண்டும், தொடக்கூடாத வர்களாக மகம்மதியர்களை ஹிந்துக்கள் நினைக்க கூடாது. மகம்மதியர்கள் பசுவதைசெய்து ஹிந் துக்களுக்கு ஆத்ரத்தை உண்டுபண்ணுவதைவிட்டு விட வேண்டும், நடந்துபோன விஷயங்களை அவரவர் கள் மறந்து விட்டு ஒருமைப்பட்டு, குடியேற்ற நாடுகளிலிருப்பது போல் சுய ஆட்சி நமது தேசத் துக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் கவர்மெண்டார் கொடுக்கத்தான் வேண்டியிருக்கு மென்று மிஸ்டர் இஸ்மேல் அந்தக் கவியில் பாடி யிருக்கிறுர்.

பின்பு மிஸ்டர் ஆலன் ஹ்யூமின் மரணத்துக்காக துக்கப்பட்டு அனுதாபங்காட்டி முதல் தீர்மானம் செய்து அந்தத் தீர்மானத்தை மிஸ்டர் ஹ்யூமின் குமா ரத்திக்குத் தந்தி மூலமாய்த் தெரிவிக்கும்படி ப்ரெ ஸிடெண்டை கேட்டுக்கொண்டார்கள்.

தென்னுப்பிரிக்காவிலும் மற்ற குடியேற்ற நாடுக ளிலும் உள்ள இந்தியர்களின் நிலைமையைப்பற்றி இரண்டாவது தீர்மானம் செய்யப்பட்டது. இந்தத் தீர்மானத்தில் "மிஸ்டர் காந்திக்கு, அவர் செய்துவ ரும் வேலை மெச்சப்படுகிறதென்றும், இந்தியாவின் பின்பலம் அவருக்கு இருக்கிறதென்றும் தைரியஞ் சொல்லி ஒரு தந்தி யனுப்பவேண்டும்" என்ற வாச கம் சேர்க்கப்பட்டது. பிறகு ராயல் கமிஷனைப்பற்றி யும் சுதேசியத்தைப்பற்றியும் தீர்மானங்கள் செய்யப் பட்டன.

எல்லா இந்தியா மதுவிலக்கு கான்பரேன்ஸ்.— பங்கிப்பூரில் கூடி டெல்லி விபத்தை வெறுத்து முத லில் தீர்மானஞ் செய்து விட்டு, சாராயங்களின் விற்ப னையையும் கஞ்சா அபின்போன்ற போதைச் சரக்கு களின் விற்பனையையும் வரம்புக்குள்படுத்தது வேண்டுமென்று பல தீர்மானங்கள் செய்தது.

க்ரிஸ்டியன் காலேஜ் தினம்.—சென்னை க்ரிஸ்டி யன் காலேஜ் தினம் கொண்டாடப்பட்டது. அந்த காலேஜ் பழைய மாணக்கர்களில் ஒருவராகிய மிஸ் டர் வெங்கடராமய்யா தலைமை வகித்தார். டாக்டர் மில்லர் வருஷந்தோறும் அனுப்பும் நற்செய்தி ஸபை யில் வாசிக்கப்பட்டது

திருவாதி பரிஷத்து.—பெண்களின் விவாக கால த்தை நிர்ணயிக்கும் பொருட்டு வாதம் நடந்தது.

28-தேதி.—

இந்தியன் நாஷனல் காங்க்ரேஸ் மூன்றவது நாள்.—ஸ்தலசுயஆட்சி, மகாண ஸ்வயாதிகாரம், சட்டஸபை ஒழுங்குகளின் சீர்திருத்தம், கல்வி, ஸுகாதாரம், முதலியவைகளைப் பற்றித் தீர்மானங் கள் செய்யப்பட்டன.

திருவாதி பரிஷத்து.—கடல் யாத்திரையைப் பற் றி ஸம்வாதம்.

29-தேதி.—

ஆசார சீர்திருத்த கான்பரேன்ஸ்.—பங்கிப்பூரில் பண்டித ராமவர்மாவின் அக்ராஸனத்தின் கீழ் கூடிற்று.

திருவாதி பரிஷத்து.—ஸமுத்ர யாத்ரையைப் பற்றி ஸம்வாதம்.

30-தேதி.—

ஆனரேபில் ஸர் ஜி. எப். வில்ஸன்.—ராஜ ப்ரதிநிதி தமக்குக் காயங்களெல்லாமாறி ராஜ்ய நிர்வாக வேலைகளைப் பார்க்கும்படியான நிலைமைக்கு வருகிற வரையில் இந்தியா சட்டஸபை மீட்டிங்குகளை நடத்தும்படியாய் வரவுசெலவு மெம்பர் ஆனரெபில் ஸர் எப். ஜி. வில்ஸன் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார், இன்னும் சில வாரங்களுக்கு ராஜப்ரதிநிதி யாதொரு வேலையும் பார்க்கக் கூடாதென்று டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

தொழில் கான்பரேன்ஸ்.—எட்டாவது தொழில் கான்பரென்ஸ் பங்கிப்பூரில் கூடிற்று. ஹரிக்ருஷ்ணலால் ப்ரெஸிடெண்டாயிருந்தார். அக்ராஸனாதிபதி தம்முடைய ஆரம்ப ப்ரஸங்கத்தைச் செய்து முடித்தபிறகு, ராஜ ப்ரதிநிதிக்கு அனுதாபம் அறிவித்து ஒரு தீர்மானஞ் செய்யப்பட்டது. பிறகு "விவஸாயத்தை போதிக்கவும், வ்யாபாரத்தை போதிக்கவும், கைத்தொழில் கல்வியை போதிக்கவும் ப்ரொபஸர்கள் நியமிக்கவேண்டியது அவச்யம்" என்றும் "யூனிவர்ஸிட்டிகளில் ஸெநேட் ஸபை அமைக்கப்பட்டிருப்பது போல் மேற்குறித்த நோக்கங்களுக்காக விசாரணை ஸபைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்" என்றும் கவர்ன்மெண்டுக்கும் ஜனங்களுக்கும் வற்புறுத்தியும், இந்திய வ்யாபார ஸங்கங்களும் தொழில்களில் ச்ரத்தை உடையவர்கள் ஸங்கங்களும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

திருவாதி பரிஷத்து.—தன்னுடைய மதத்தை விட்டு அந்யமதத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்த்துக் கொள்வதைப் பற்றியும், வரசுல்கத்தைப் பற்றியும் விவரதம் நடந்தது. (இந்த மாஸம் வரசுல்கத்தைப் பற்றிக் குறித்திருக்கிறோம். மற்றவைகள் அடுத்த மாஸத்து ஸஞ்சிகையில் வரும்.)

31-தேதி.—

எல்லா இந்திய காயஸ்தா கான்பரேன்ஸ்—கல்கத்தாவில் கூடிற்று. பல டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள். டெல்லி பட்டணத்து பல தேவப்ரஸாத் அக்ராஸனம் வகித்தார். காயஸ்தா ஜாதியார் இப்போது பாராட்டிவரும் ஜாதி யுள்பிரிவு வித்யாஸத்தைப் பாராட்டாமல் ஐக்யப்பட்டுப் போகவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டதுமன்றி டெல்லிக் கொடுஞ்செயலை வெறுத்துந் தீர்மானஞ் செய்யப்பட்டது.

விவாக காலத்தில் பிள்ளை வீட்டுக்காரர்கள் பணம் வாங்குவதான கொடிய வழக்கத்தால் அநேக குடும்பங்கள் நிர்மூலமடைந்து போவதால் அவ்வழக்கத்தை நிறுத்திவிட வேண்டுமென்றும், விவாகச் செலவுகளை சுருக்கவேண்டுமென்றும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

திருவாதி பரிஷத்து.—இன்றைய தினத்தோடு பரிஷத்து முடிவு பெற்றது. மிஸ்டர். வி. பி. மாதவராவ் ஒரு உபந்யாஸம் செய்தார். பண்டிதர்களுக்கு வெகுமதிகளும் ஸம்பாவனைகளும் கொடுக்கப்பட்டன. பண்டித பரீக்ஷைக்கு வந்த 36-பண்டிதர்களில் 7-பேர் விலக்கப்பட்டார்கள். மற்றவர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்பட்டன.

1913௵ ஜனவரி௴ 1-தேதி—

இரவு குண்டு.—இன்றுமுதல் சென்னையில் இரவில் 8-மணிக்கு முன்போல குண்டு போடப்படும்.

புது வருஷ கௌரவப்பட்டங்கள்.—புது வருஷ கௌரவப்பட்டங்களடங்கிய ஜாப்தா டெல்லியில் ப்ரசுரிக்கப்பட்ட கெஜட் ஆப் இந்தியா விசேஷ ப்ரசுரத்தில் வெளியாயிருக்கிறது. அந்த ஜாப்தாப்படி இந்த சென்னை மாகாணத்தில் கௌரவப் பட்டங்கள் பெற்றிருப்பவர்களின் பேர்களையும் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பட்டங்களையும் அடுத்த ஸஞ்சிகையில் குறிப்பிடுவோம்.

3-தேதி.—

ஆனரபில் மிஸ்டர் சிதம்பரநாத முதலியாருக்கு.—சென்னை விக்டோரியாஹாலில் தமிழ்க் கழகத்தாரால் செய்யப்பட்ட விருந்து கச்சேரி நடந்தது.

4-தேதி.—

மிஸ்டர் பலித். கல்கத்தா யூனிவர்ஸிட்டிக்கு 14-லக்ஷம் ரூபாய் சாஸ்த்ரக் கலாசாலை ஸ்தாபிப்பதற்காகக் கொடுத்த ஸர் தாரக நாத பலித் என்பவருக்கு, கல்கத்தா யூனிவர்ஸிடியார் எல். எல். டி. பட்டம் கொடுத்தார்கள்.

சென்னை சட்ட ஸபை.—இன்று சட்ட ஸபை மீட்டிங் நடந்தது. புதிதாய்த் தெரிந்தெடுக்கப்

பட்டிருந்த மெம்பர்களும் நியமிக்கப்பட்டிருந்த மெம்பர்களும் ஆஜராயிருந்து, சட்ட இலாகா காரியதரிசி அவர்களின் பேர்களை வாசித்தானபிறகு, ராஜவிச்வாஸ ப்ரமாணஞ்செய்து தங்கள் ஸ்தானங்களை வசிக்க ஆரம்பித்தார்கள். லார்ட் பெண்ட்லண்டு மெம்பர்களை வரவேற்றார். ஆனரபில் டாக்டர் நாயர் டெல்லி அராஜகச் செயலைக் கண்டித்து பேசினார். ஸபை முடிந்ததும், உத்யோகஸ்தரல்லாத மெம்பர்கள் கூடி சென்னை வரவு செலவு கமிட்டிக்கு உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்களைத் தெரிந்தெடுத்தார்கள். பின்பு இந்திய சட்டஸபைக்கு தங்கள் ப்ரதிநிதிகளாக மிஸ்டர் வி. விஜயராகவாசார்யாரையும் நவாப் ஸயித் மகமத் பகதூரையும் தெரிந்தெடுத்தார்கள். சென்னை சட்டஸபையின் புதிய மெம்பர்களின் பேரை அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடுவோம்.

5-தேதி.—

ஆனரபில் மிஸ்டர் எ. டி. மரக்காயர்.—சென்னை லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் மெம்பரானதை உத்தேசித்து மகம்மதிய யூனியன் க்ளப் மெம்பர்கள் நாகப்பட்டணத்தில் அவருக்கு ஒரு விருந்து உபசரணை செய்தார்கள்.

6-தேதி.—

பம்பாய் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்.—இன்று கூடிற்று. லார்ட் ஸைடன்ஹாம் அக்ராஸனம் வகித்தார். டெல்லி அராஜகச் செயலைக் கண்டித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

8-தேதி.—

பப்லிக் ஸர்விஸ் கமிஷன்.—இந்தியர்களுக்கு இப்பொழுதிருக்கிறதைவிட உயர்ந்த உத்யோகங்கள் கொடுப்பதைப்பற்றி விசாரித்து ரிபோர்ட்டு செய்ய நமது சக்ரவர்த்தி ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார். அதற்கு பப்லிக் ஸர்விஸ் கமிஷன் என்று பேர் இந்த கமிஷன் சென்னையில் கோட்டை கௌன்ஸில் சேம்பரில் இன்று கூடிற்று. அது சென்னையில் விசாரணையை முடித்துக்கொண்டு கல்கத்தாவுக்குப்போய் அங்கே 23-ந் தேதி விசாரணையை நடத்த ஆரம்பிக்கும்.

9-தேதி.—

வைஸ்ராயின் தேகஸ்திதி.—டெல்லி வைஸ்ரிகல்மாளிகை புல்லடின். "வைஸ்ராய் நேற்றிரவு நன்றாய்த் தூங்கினார். அவருடைய தேகஸ்திதி மொத்தத்தில் திருப்திகரமாயிருக்கிறது.

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall.**

மழை.—1912௵ ஏப்ரல்௴ 1௳யிலிருந்து 1913௵ ஜனவரி௴ 13௳ வரையில் பெய்த மழையின் அளவு, இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 37·33 | 43·73 |
| வால்டேர் | 30·96 | 35·37 |
| காக்கினாடா | 26·19 | 37·93 |
| மசூலிப்பட்டணம் | 42·91 | 39·21 |
| நெல்லூர் | 44·48 | 34·06 |
| மதராஸ் | 43·86 | 48·51 |
| கூடலூர் | 47·88 | 49·10 |
| நாகப்பட்டணம் | 40·24 | 51·72 |
| பாம்பன் | 27·89 | 34·70 |
| கொழும்பு | 97 06 | 75·77 |
| திருவநந்தபுரம் | 89·73 | 60·65 |
| கொச்சி | 143·19 | 110·70 |
| கள்ளிக்கோட்டை | 139·64 | 115·98 |
| மங்களூர் | 144·71 | 126·95 |
| மெர்க்காரா | 133·12 | 125·85 |
| ஐதராபாத் | 23·40 | 30·29 |
| பல்லாரி | 24·41 | 19·62 |
| கர்நூல் | 19·17 | 26·38 |
| கடப்பை | 28·20 | 31·33 |
| ஹாஸ்ஸான் | 40·65 | 35·44 |
| பெங்களூர் | 41·35 | 34·75 |
| கொடைக்கானல் | 62·75 | 57·18 |
| உதகமண்டலம் | 52·41 | 53·88 |
| கோயம்புத்தூர் | 29·55 | 21·02 |
| வேலூர் | 42·22 | 44·23 |
| சேலம் | 32·86 | 39·14 |
| திருச்சினப்பள்ளி | 32·08 | 31·47 |
| புதுக்கோட்டை | 36·81 | 32·10 |
| மதுரை | 33·28 | 33·03 |
| திருநெல்வேலி | 23·93 | 24·54 |

# CALENDAR—பஞ்சாங்கம்.

சாலிசகம்-1835 கலியப்தம்-5014 } பௌஷம் மாகம் { 46-பரிதாபிஞூ தைமூ உத்தராயணம்-ஹேமந்தருது. } கொல்லம்-1088 பஸலி-1322 { இங்கிலீஷ்-1913ஞூ ஜனவரிமீ-பிப்ரவரிமீ } ஹிஜரி-1331 ஸபர்-ரப்யூலவல்

அமிருதாதி யோகங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி | 4 50 | 2833 | 5 | 13 | 1 | தி | ஷஷ் 60-0, பூட் 12-28, பரி 58-46, கவு 27-20, ரா 10-54, மகர ரவி 11-9, மகரஷஷ்டீதி, உத்தராயணபுண்யகால, ஷஷ்டியுப, திரிதினஸ்பிருக், சூன்யார்க்கம் |
| அசி | 40 | 34 | 6 | 14 | 2 | செ | ஷஷ் 0-19, உட் 19-28, சிவ 59-51, கர 33-க, ரா 23-58, மாட்டுப்பொங்கல் |
| உம | 30 | 35 | 7 | 15 | 3 | பு | ஸப் 5-21, ரே 25-12, சித் 59-42, பத் 37-20, புதாஷ்டமி |
| அசி | 21 | 35 | 8 | 16 | 4 | வி | அஷ் 8-40, அசு 29-11, சாத் 58-1, பால 39-34, தி 18-39, ரா 25-37 |
| சி | 11 | 36 | 9 | 17 | 5 | வெ | நவ 9-56, பர 31-6, சுப 54-35, தை 39-42 |
| அ | 1 | 37 | 10 | 18 | 6 | சனி | தச 8-54, கிரு 30-49, சுப் 49-26, வணி 37-33, தி 1-13, கிருத்திகை, மன்வாதி |
| சி | 3 51 | 38 | 11 | 19 | 7 | ஞா | ஏகா 5-41, ரோ 28-26, பிரா 42-36, பவ 33-18, தி 9-27, ஸர்வஏகா |
| அசி | 42 | 39 | 12 | 20 | 8 | தி | துவா 0-27, உப 53-4, மிரு 24-9, மா 34-21, கவு 27-10, ரா 12-56, கும்பாயணம் 35-4, பிரதோஷம், அவம |
| மசி | 32 | 40 | 13 | 21 | 9 | செ | சசி 45-18, திரு 18-23, வை 24-54, கர 19-32, ரா 14-36, வைசிரா |
| சி | 22 | 41 | 14 | 22 | 10 | பு | ○ 36-18, புன 11-34, விஷ் 14-39, பத் 10-52, ரா 16-24, தைப்பூசம் |
| அசிஅ | 12 | 42 | 15 | 23 | 11 | வி | பிர 26-58, பூச 4-12, உப 52-33, பிீ 3-58, உப 49-16, பால 1-39, தை 52-19, ரா 0-28, பௌஷபகுள பிரதமாதி, இஷ்டி |
| மசி | 3 | 43 | 16 | 24 | 12 | வெ | துவி 17-46, மக 49-43, ஸவு 42-47, வணி 43-21, ரா 3-29, திதிதுவயம் |
| சிஉ | 2 53 | 44 | 17 | 25 | 13 | சனி | திரி 9-8, பூர 43-30, சோ 33-0, பவ 35-10, தி 23-9, சதுர்த்தீதி, சங்கடசதுர்த்தி |
| அ | 43 | 45 | 18 | 26 | 14 | ஞா | சது 1-29, உப 53-36, உத் 38-27, அதி 24-7, கவு 28-6, தி 7-32, ரா 31-6, அவம |
| சிபி | 33 | 46 | 19 | 27 | 15 | தி | ஷஷ் 50-14, ஹஸ் 34-51, சுக 16-21, கர 22-27, சே 3-51, ரா 29-15 |
| சி | 24 | 47 | 20 | 28 | 16 | செ | ஸப் 47-3, சித் 32-52, திரு 9-52, பத் 18-26, சே 2-1, ரா 25-14 |
| சி | 14 | 48 | 21 | 29 | 17 | புத | அஷ் 45-31, சுவா 32-32, சூல 4-44, பால 16-5, ரா 17-51, காலாஷ்ட, அஷ்டகா |
| சி | 4 | 50 | 22 | 30 | 18 | வி | நவ 45-37, விசா 33-45, கண் 0-52, உப 57-24, தை 15-22, ரா 17-50 |
| சிம | 1 54 | 51 | 23 | 31 | 19 | வெ | தச 47-11, அனு 36-28, து௫ 56-46, வணி 16-14, ரா 15-15 |
| சி | 45 | 52 | 24 | 1 | 20 | சனி | ஏகா 50-4, கேட் 40-26, விபா 56-14, பவ 18-28, ரா 22-25, ஸர்வஏகாதசி |
| அசி | 35 | 53 | 25 | 2 | 21 | ஞா | துவா 54-0, மூல 45-30, ஹர் 56-29, கவு 21-55 |
| உழ | 25 | 54 | 26 | 3 | 22 | தி | திர 58-50, பூரா 51-26, வஜ் 57-24, கர 26-19, தி 2-1, ரா 12-14, பிரதோஷ [சிவ |
| பிசி | 15 | 55 | 27 | 4 | 23 | செ | சசி 60-0, உரா 58-4, வித் 58-54, பத் 31-32, தி 11-47, திரிதினஸ்பிருக், கிருஷ்ணாங்காகசதுர்த்தசி, மாஸ |
| சி | 6 | 56 | 28 | 5 | 24 | புத | சசி 4-26, சிர 60-0, விய 60-0, சது 37-27, தி 13-34, ஸர்வஅமா, சிரவனஉப, வியசிரா, போதாயனபிண்ட |
| சி | 0 56 | 58 | 29 | 6 | 25 | வி | ● 10-35, சிர 5-16, விய 0-47, கிம் 43-50, தி 9-13, பிரதமாதி, இஷ்டி, பிண்டபிதிரு, அவிட்டத்திற்கு குஹூதோஷம், புஷ்களா |
| சி | 46 | 2859 | 30 | 7 | 26 | வெ | பிர 17-9, அவி 12-52, வரீ 3-2, பால 50-31, தி 16-31, மாகசுத்தம், அதிதி, அப-ஆதி 17-23. சந்திரதர்சனம் |
| அம | 36 | 29 0 | 1 | 8 | 27 | சனி | துவி 23-53, சத 20-39, பரி 5-27, தை 57-15, ரா 4-12, அப அந்தம் 23-12, குதபாதி அபரான்ஞந்தம்வியாபித்து விருத்தியாயிருப்பதாலின்று துவிதியாதி |
| சிஅ | 27 | 1 | 2 | 9 | 28 | ஞா | திரி 30-32, பூட் 28-23, சிவ 7-53, கர 30-52, ரா 9-43 |
| சி | 17 | 3 | 3 | 10 | 29 | தி | சது 36-44, உட் 35-42, சித் 15-4, வணி 3-44, ரா 26-21, சதுர்த்தீவிரு, குந்தசதுர்த்தி [வஸந்தபஞ் |
| சி | 0 7 | 29 5 | 4 | 11 | 30 | செ | பஞ் 42-2, ரே 42-9, சாத் 11-43, பவ 9-31, தி 9-4, கும்பரவி 43-30, மகரபஞ்சமீதி, விஷ்ணுபதிபுண்யகால |

| | | | |
|---|---|---|---|
| ராகு | | ச | |
| சு | 13-மகர-பு<br>15-மீன-சு<br>28-மகரசெ | | |
| ர | | | |
| செ<br>பு-கு | | | கேது |

# சாஸ்திரீய உரங்கள்.

## எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

### கலப்புரங்களின் விலை ஜாப்தா.—தொடர்ச்சி,

| நெம்பர். | பூரா உரம்.(Complete Fertiliser.) | இராணிப்பேட்டையில் ஒரு அந்தரின் விலை. | | ஒரு ஏகராவுக்கு தேவையான அளவு. | மரம் ஒன்றுக்கு வேண்டிய அளவு. |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | | |
| 17 | இஞ்சி ... ... ... | 3 | 12 | 5 அந்தர் | ... |
| 18 | மிளகாய் ... ... ... | 3 | 12 | 5 ,, | ... |
| 19 | வெங்காயம் ... ... ... | 3 | 12 | 5 ,, | ... |
| 20 | கத்திரிச்செடி ... ... ... | 3 | 12 | 5 ,, | ... |
| 21 | முள்ளங்கி ... ... ... | 3 | 12 | 5 ,, | ... |
| 22 | அவரை, பட்டாணி ... ... | 3 | 8 | 4 ,, | ... |
| 23 | புகையிலை ... ... ... | 4 | 12 | 8 ,, | ... |
| 24 | கரும்பு ... ... ... | 4 | 4 | 8 ,, | ... |
| 25 | வெற்றிலை ... ... ... | 3 | 12 | 5 ,, | ... |
| 26 | மிளகு ... ... ... | 3 | 12 | 5 , | ... |
| 27 | தென்னை ... ... ... | 3 | 7 | 8 ,, | ... |
| 28 | தேயிலைச்செடி ... ... ... | 4 | 4 | 4 — 5 | ... |
| 29 | காப்பிச்செடி ... ... ... | 4 | 8 | 4 — 5 | |
| 30 | வாழை ... ... ... | 3 | 12 | ... | ½-ரா.மு. 6-ரா. வ. |
| 31 | மாதுளை ... ... ... | 3 | 12 | ... | ½ ,, 1 ,, |
| 32 | கொய்யா, சீனி ... ... ... | 3 | 12 | ... | ½ ,, 6 ,, |
| 33 | திராக்ஷை ... ... ... | 3 | 12 | ... | ½ ,, 6 ,, |
| 34 | அத்தி ... ... ... | 3 | 12 | ... | ½ ,, 1 ,, |
| 35 | பப்ளியாஸ் ... ... ... | 3 | 12 | ... | ½ ,, 6 ,, |
| 36 | சவுக்கு ... ... ... | 3 | 8 | ... | ½ ,, 6 ,, |
| 37 | புடலை ... ... | 3 | 12 | ... | ½ ,, 1 ,, |
| 38 | கரிவேப்பிலை ... ... ... | 3 | 12 | ... | ½ ,, 6 ,, |
| 39 | அன்னாசு ... ... ... | 3 | 12 | ... | ½ ,, 6 ,, |
| 40 | பூந்தோட்டம் ... ... ... | 5 | 4 | ... | ½-ராத்தல். |
| 41 | பாதாம் ... ... ... | 3 | 12 | ... | ... |
| 42 | பழவர்க்கசெடிகள் ... ... | 3 | 12 | ... | ... |
| 43 | மா ... ... ... ... | 3 | 12 | ... | பெரிய மர. 6-ரா.<br>மத்திய ,, 4 ,,<br>சின்ன ,, 2 ,,<br>2 வருஷ ,, 1 ,,<br>சின்ன ,, ½ ,, |

ஒரு அந்தர் என்பது 112-ராத்தல் அல்லது 4½-மணங்கு.
மேல்கண்ட விலைகள் அப்பொழுதைக்கப்போது மாறுபடக்கூடியது.

***The Presidency Manure Works, Ltd.,***
***Ranipet.***

***Managing Agents: Parry & Co., Madras.***

**ராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, ராணிப்பேட்டை,**

**மானேஜிங் ஏஜண்டுகள்:—**

**பாரி அண்டு கம்பெனி,**

**மதராஸ்.**

# KHADER AND YOUSUFF BROS

Watch Dealers, P. L., MADRAS, E. C.

## "ஸிர்தார்"



இது மேல்சாவியுள்ளதும், கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும்வெகு நாளைக்கு ஓடக்கூடியதுமான வெகு நேர்த்தியான கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரூ. 12.

## "உத்தியோகஸ்தர்"



இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயுமிருக்கும்.

தபாற்கூலியுள்பட — விலை ரூ. 10

## கோல்ட் மெடல் 'யாங்கீ" ஸிர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினால் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு இடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ள ரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மேண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.